விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 25 செவ்வாய்க்கிழமை (09.08.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 234



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005




இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.con
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே


# வடக்கு - கிழக்கை இணைக்கக் கூடாது!

## ● சமஷ்டியும் பாதகமானது

### கிழக்கு முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் பிரகடனம்



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் - நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்றுக்காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் பங்கேற்புடனும் நேர்த்திக்கடன்களுக்கு மத்தியிலும் நேற்று நல்லூரானின் மஹோற்சவம் ஆரம்பமாகியுள்ளது.

## கல்விசாரா ஊழியர் போராட்டம் நிறைவு!

(கொழும்பு)

கல்வி சாரா ஊழியர்கள் தாம் மேற்கொண்ட போராட்டத்தை கைவிட்டுள்ளதாக, ஊழியர்கள் சங்க ஒன்றியத்தின் இணைத் தலைவர் டயஸ் விஜயகுமார தெரிவித்துள்ளார்.

உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே இந்தத் தீர்

24 ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச கடிவாளம் மார்ச்சுடன் விலகும்!

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான எல்லா சர்வதேச அழுத்தங்களும் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவுக்கு வந்து விடும். ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்துடன் சர்வதேச கடிவாளத்தில் இருந்து இலங்கை விடுபட்டுவிடும்.

ஏனெனில் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவா விவகாரங்கள் ஆரம்பமாகும்

24 ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் கைதிகளின் விடயத்தில் சம்பந்தன் ஏமாற்று நாடகம்!

# கிழக்கு முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் பிரகடனம்




(கொழும்பு)

நாட்டில் உருவாக்கப்படவுள்ள அரசியல் ரீதியான அதிகாரப் பகிர்வில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தனித்தனி மாகாணங்களாகவே தொடர்ந்தும் இருக்க வேண்டும். முஸ்லிம்களுக்கு பாதிப்பை தோற்றுவிக்கும் சமஷ்டி தீர்வையும் வழங்கக்கூடாது என கிழக்கு முஸ்லிம் சிவில் அமைப்புக்களின் ஒன்றியத்தினால் பிரகடனம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## கல்விசாரா ஊழியர் போராட்டம் நிறைவு!

(கொழும்பு)

கல்வி சாரா ஊழியர்கள் தாம் மேற்கொண்ட போராட்டத்தை கைவிட்டுள்ளதாக, ஊழியர்கள் சங்க ஒன்றியத்தின் இணைத் தலைவர் டயஸ் விஜயகுமார தெரிவித்துள்ளார்.

உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவுடன் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடலை அடுத்தே இந்தத் தீர் 24ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச கடிவாளம் மார்ச்சுடன் விலகும்!

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான எல்லா சர்வதேச அழுத்தங்களும் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவுக்கு வந்து விடும். ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்துடன் சர்வதேச கடிவாளத்தில் இருந்து இலங்கை விடுபட்டுவிடும்.

ஏனெனில் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவா விவகாரங்கள் ஆரம்பமாகும் 24ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் கைதிகளின் விடயத்தில் சம்பந்தன் ஏமாற்று நாடகம்!

### த.தே.ம.முன்னணி சாடல்

(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகளின் விடயத்தில் சம்பந்தன் மீண்டும் ஒரு ஏமாற்று நாடகத்தை அரங்கேற்றத் தொடங்கியுள்ளார் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்றைய தினம் யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டது.

அதில் கலந்து கொண்டு கருத்துத தெரிவுக்கும் 23ஆம் பக்கம் பார்க்க....

## பிரபாகரனை விட மகிந்த மிக மோசமானவர் - சரத்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ பிரபாகரனை விட மிகவும் மோசமானவர் என பிராந்திய அமைச்சரும் பீல்ட் மார் ஷலுமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சரத் பொன்சேகா வினால் நேற்று ஊடக சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு ஒன்றிணைந்த 24ஆம் பக்கம் பார்க்க....

## 'அரசியல் கைதிகளை பழிவாங்காதே; விடுதலை செய்'







07ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (சா/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
தமிழ் - I,II



உள்ளே...

## சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் இளைஞன் அடித்துக் கொலை!

### வழக்கில் தொடர்புபட்ட அனைவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த உத்தரவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து இளைஞர்ஒருவரை அடித்து கொலை செய்ததாக கருதப்படும் வழக்கில் சம்பந்தப்பட்ட அனைவரையும் எதிர் வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு மல்லாகம் மேலதிக நீதவான் தர்மரட்ணம் கருணாகரன் பொலஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நேற்றையதினம் குறிதத வழககு எடுத்துக்கொள் 24ஆம் பக்கம் பார்க்க....

## பசில் ராஜபக்ஷவுக்கு பிணையில் விடுதலை



(கொழும்பு)

நிதி மோசடி குற்றச்சாட்டின் கீழ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை பிணையின் கீழ் விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, அரசு கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் திவிநெகும திணைக் களத்திற்கு 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டு நல்லிணக்கத்தை பறைசாற்றுங்கள்

## சித்தார்த்தன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றினால் மட்டுமே இந்த அரசாங்கம் நல்லிணக்கத்தை பறைசாற்ற முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்றைய தினம் யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவுக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனை இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து பல போராட்டங்களை நடத்தியுள்ளோம்.

சிறையில் உள்ள அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி நீண்ட காலம் உண்ணாவிரத போராட்டம் மேற்கொண்டுள்ளார்கள். நாங்களும் பல தடவைகள் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திய எமக்கு அவர்களை விடுவிப்பதாக பல தடவைகள் உறுதிமொழிகளை வழங்கினார்கள். ஆனால் இன்று வரை தொடர்ந்து சிறையில் வாடுகிறார்கள்.

உண்மையில் நல்லிணக்கத்தை இந்த அரசாங்கம் காட்டுகிறது என்றால் அரசியல் கைதிகளை எந்தவித நிபந்தனைகளும் இன்றி விடுவிப்பதன் ஊடாகதான் நல்லிணக்கத்தை நாடி நிற்கின்றோம் என்று பறைசாற்ற முடியும். அதை அவர்கள் செய்யவேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையால் இயற்றப்பட்ட தீர்வுக்கு அரசும் பங்குதாரர்களாக இருந்து அத் தீர்மானத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தை இல்லாமல் செய்தல், அரசியல் கைதிகள் விடுதலை போன்ற விடயங்கள் மிக தெளிவாக கூறியும் அதை செய்வதாக சர்வதேசத்துக்கு உறுதிமொழி அளித்தும் இன்றும் அரசு அதை செய்ய தயங்கி கொண்டும் பின்வாங்கி கொண்டு இந்த அரசு இருக்கிறது.

கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேறும் வரை அதை செய்ய வேண்டும் என வலியுறுத்தி தொடர்ச்சியாக இப் போராட்டங்களை நடத்துவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# தேக்க மரக்குற்றிகள் மீட்பு



(மல்லாவி)

கிளிநொச்சி பளை பொலிஸார் நேற்று அதிகாலை 5 மணியளவில் விசேட சோதனையில் ஈடுபட்ட போது பெறுமதி மிக்க தேக்கமர குற்றிகள் மீட்கப்பட்டுள்ளது, கிளிநொச்சி பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் எடுத்து செல்லப்பட்ட குறித்த மரக்குற்றிகளை பளை பொலிஸார் எழுதுமட்டுவால பகுதியில் மீட்டுள்ளனர்.

குறித்த மரத்தினை கட்டுவதற்கு உதவியாக சென்றுகொண்டிருந்த மற்றுமொரு விற கேற்றிய வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் வாகனத்தை செலுத்தியவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மேற்படி மர குற்றிகளை கடத்திய லொறியில் பயணித்த ஏனைய நால்வரும் தப்பி சென்றுள்ளனர். இந்த நபர்களை கைது செய்யும் நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளதாகவும், தொடர்ந்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் அவர்களை முற்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ-15)

# மஹோற்சவம்

(இருபாலை)

குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் திருக்கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 17ஆம் திகதி புதன்கிழமை முற்பகல 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 18ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தீர்த்த திருவிழாவும் நடைபெறும். (செ-5,136)

வவுனியா பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் (சீடி கடை) ஒன்று நேற்று அதிகாலை மின் ஒழுக்கு காரணமாக தீப்பிடித்ததில் அங்கு பொருள் சேதம் ஏற்பட்டுள்ளது (செ-281)




## தேவை

யாழ்.நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றுக்கு

- கணனி ரைப்செற்றிங் (CorelDRAW, Adobe Photoshop) அனுபவம் உள்ளவர்கள்
- போட்டோ கொப்பி அடிக்க தெரிந்தவர்கள்
- புத்தகம் கட்டுநர்

அனுபவம் உள்ளவர் தொடர்பு கொள்ளவும்

T.P:0772506234

(5562)



## கண்ணீர் அஞ்சலி

அமரர் சின்னத்தம்பி சோதிநாதன்



யாழ்.மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின்
நிர்வாக அலுவலராகவும் எமது நிறுவனத்துடன்
நெருங்கிய தொடர்புடையவருமான அமரர் சின்னத்தம்பி சோதிநாதன்
இறைபதமெய்திய செய்தி கேட்டு ஆழ்ந்த துயரமடைவதுடன்
அவர்தம் குடும்பத்தினரின் ஆறாத் துயரிலும் பங்கெடுப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர், பணியாளர்கள்**
**தியாகி அறக்கொடை நிறுவனம்**
(TCT)

(சி-5399)



## 31-ம் நாள் நினைவுகளுடன்

## கனகசபை கமலேஸ்வரன்

(ஐயாமணி)

மலர்வு 12 - 12 - 1965



உதிர்வு 10 - 07 - 2016


எம் இல்லத்தில் ஒளி விளக்காய்
குடும்பத்தின் கோபுரமாய்
வாழ்ந்த நாட்களை
எண்ணி ஏங்குகின்றோம்-அன்பு அப்பாவே

செல்வபுரம்,
முல்லைத்தீவு.

-குடும்பத்தினர்.

(சி-5408)

# மகிந்தவுக்கு சவால் விடும் சம்பிக்க



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளுக்கு பணத்தை வழங்கவில்லை என்றால், அதனை அச்சமின்றி நாட்டுக்கு தெரியப்படுத்துமாறு சவால் விடுப்பதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ தனது சகோதரர் பசில் ராஜபக்ஷ டிரான் அலஸ் இணைந்து விடுதலைப்புலிகளுக்கு பணத்தை வழங்கினர் இதனை நாங்களும் அறிந்திருக்கவில்லை.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னரும் புலிகளுக்கு பணத்தை வழங்கினார்.

ஜப்பான் சென்றிருந்த மகிந்த தான் ஒரு டொலர் பணத்தையாவது கொள்ளையிட்டிருந்தால் கழுத்தை அறுத்து கொள்வதாக கூறியிருந்தார்.

விடுதலைப்புலிகளுக்கு தான் ஒரு ரூபா பணத்தைக் கூட கொடுக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துமாறு மகிந்தவுக்கு சவால் விடுகின்றேன்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு மகிந்த ராஜபக்ஷ பெரும் தொகைப்பணத்தை வழங்கினார் என்பதற்கான கடிதங்களும் ஆவணங்களும் எங்களிடம் உள்ளன.

தற்போது அரசியலமைப்பு மரணப்பொறி பற்றி பெரும் கதைகளை பேசி வருகின்றனர்.

அரசியலமைப்புச் சட்டம் ஒன்றை இயற்ற நாடாளுமன்றத்தில் உள்ள 225 பேரும் இணைந்துள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷவும் அதில் இருக்கின்றார். வீரவன்சவும் அதில் இருக்கின்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# நாமலுக்கு எதிரான விசாரணை அறிக்கை சட்டமா அதிபரிடம்

(கொழும்பு)



பணச் சலவை சட்ட மூலத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பான அறிக்கை, சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் நேற்று நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

ரக்பி விளையாட்டை மேம்படுத்துவதாக கூறி நிறுவனம் ஒன்றிடம் பெற்றுக்கொண்ட 70 மில்லியன் ரூபா பணத்தை தவறாக பயன்படுத்தியுள்ளதாக கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிரான நிதி மோசடி விசாரணைப் பிரிவு விசாரணைகளை நடத்தி வருகின்றது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது நாமல் ராஜபக்ஷ நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

இந்த வழக்கில் மேலும் சிலரிடம் வாக்குமூலங்களை பெறவேண்டியுள்ளதாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அத்துடன் மேலும் சிலரை வழக்கின் சந்தேகநபர்களாக சேர்க்குமாறும் அவர்கள் நீதிமன்றத்திடம் கோரியுள்ளனர்.

முன்வைக்கப்பட்ட வாதங்களை கவனத்தில் எடுத்துக்கொண்ட கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன எதிர்வரும் ஒக்டோபர் 31 ஆம் திகதி விசாரணையின் முன்னேற்ற அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு நிதி மோசடி விசாரணைப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார். (இ-7-10)

## இலங்கை-இந்திய அரசுகள்

# மீனவர் பிரச்சினை குறித்து இம்மாத இறுதியில் பேச்சு

## இந்திய மத்திய இணையமைச்சர் தகவல்

(சென்னை)

**தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக இந்திய- இலங்கை அரசுகள் இம்மாத இறுதியில் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாக இந்திய மத்திய சாலை மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.**

தஞ்சாவூரில் நேற்று முன தினம் (ஞாயிற்றுக்கிழமை) செய்தியாளர்களை சந்தித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'டில்லியில் இரண்டு வாரங்களுக்கு முன்பு தமிழக மீனவர் பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய கூட்டம் நடைபெற்றது. இதில், தமிழகத்திலிருந்து 13 குழுக்களைச் சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், மீன்வளத்துறை அமைச்சர் ராதா மோகன் சிங்கிடம் இலங்கையில் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்கள் மற்றும் நூற்றுக்கும் அதிகமான படகுகளை உடனடியாக விடுவிக்கவும் அது தொடர்பில் இரு நாட்டு அரசுகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டும் என தலைவர்கள் வலியுறுத்தினர்.

எனவே அவர் குறிப்பிட்டது போல இந்த மாத இறுதிக்குள் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அத்தோடு படகுகளை விடுவிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மேற்கொண்டு வருகிறார்.

மேலும் இருதரப்பு பேச்சுவார்த்தை திருப்திகரமாக அமைந்தால் நம்முடைய மீனவர்களின் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்துக் கொள்ளக்கூடிய ஏற்பாடுகள் நிச்சயமாக நடைபெறும்' என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# முன்னாள் போராளிகளின் மர்ம மரணத்தின் பின்னணி ஆராயப்படவேண்டியது அவசியம்

## அரசிடம் டக்ளஸ் எம்.பி. வலியுறுத்து

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயமாக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் பலர் மர்மமான முறையில் மரணமடைந்து வருகின்றனர் என ஊடகங்களில் செய்திகள் வெளிவருகின்ற நிலையில், இதன் பின்னணி தொடர்பில் முழுமையானதும், பகிரங்கமானதுமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமெனவும் இவர்கள் உரிய உடல் மற்றும் உள ரீதியிலான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, உரிய சிகிச்சைகளுக்கு இவர்கள் உட்படுத்தப்பட வேண்டுமென்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள முன்னாள் போராளிகளில் சுமார் நூறுக்கும் மேற்பட்டவர்கள் இதுவரையில் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளனர் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இதன் போது முன்னாள் போராளிகள் சிலரது கருத்துக்களும் இந்த விடயம் சார்ந்து பெறப்பட்டு ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் நல்லிணக்கத்திற்கான செயலணியின் மக்கள் கருத்தறியும் நிகழ்வு கடந்த 30ஆம் திகதி ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற போது, புனர்வாழ்வு வழங்கப்பட்டிருந்த காலத்தில் தங்களுக்கு இரசாயன உணவு தரப்பட்டதாகவும் ஊசி ஏற்றப்பட்டதாகவும் முன்னாள் போராளி ஒருவர் கூறியிருந்ததாக ஊடகங்களில் செய்தி வெளிவந்திருந்தது. அதே நேரம், மேற்படி போராளிகள் உடற் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்திருந்ததாகவும் ஊடகங்களில் செய்தி வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானதொரு நிலையில் இவ்விடயம் தொடர்பில் உடனடியாக உரிய விசாரணைகளை மேற்கொள்வது அவசியமாகும். அதே நேரம் இப்போராளிகள் யுத்த காலகட்டங்களின்போது அந்த சூழலுக்கேற்ப உடல் மற்றும் உள ரீதியிலான கடுமையான பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் என்பதால், தற்போதைய சூழ்நிலையில் மனமாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு உள ரீதியிலான பலவீனங்களையும் கொண்டிருக்க வாய்ப்புகள் அதிகம் இருப்பதால் இவர்களுக்கு உடல் ரீதியிலானதும் உள ரீதியிலானதுமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய சிகிச்சைகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# ஹிருணிகா உள்ளிட்ட 9 பேருக்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டு

பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா உள்ளிட்ட 9 பேருக்கு எதிராக தலைமை சட்டத்தரணியொருவரால் கொழும்பு உயர்நீதிமன்றில் கடுமையான குற்றச்சாட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி தெமட்டகொட பகுதியில் இளைஞர் ஒருவரை கடத்திச் சென்றமை தொடர்பாகவே இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமில பிரியங்கர என்ற இளைஞரை கடத்தியமை, தாக்கியமை, உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்தமை உள்ளிட்ட 29 குற்றச்சாட்டுக்கள் ஹிருணிகா உள்ளிட்டவர்கள் மீது சுமத்தப்பட்டு உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இ-7-10)

# பெண்ணொருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை பெலியத்தை பிரதேசத்தில் பெண்ணொருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இசுருபுர லங்கா கந்த மாவத்தையில் வீடொன்றில் இருந்த பெண்ணொருவர் மீது நேற்று முற்பகல் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த 40 வயதான பெண் பெலியத்தை, ஹத்போதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காணி தகராறு ஒன்றின் அடிப்படையில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் துப்பாக்கிப் பிரயோகம் செய்த சந்தேக நபரும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7-10)

# கீதா குமாரசிங்க எம்.பி. எப்போதும் போதையில்

## முதலமைச்சர் இசுறு தகவல்

நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க எப்போதும் மதுபோதையில் இருப்பதாக மேல்மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

கீதா குமாரசிங்க எப்போதும் மதுபோதையில் இருக்கின்றார். இதனால் அவர் என்ன பேசுகின்றார் என்று அவருக்கே தெரிவதில்லை என்று முதலமைச்சர் குற்றம் சுமத்தினார்.

அண்மையில் நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதம் ஒன்றின்போதும் இவ்வாறே நிதானம் இன்றி பேசினார். காரணம் அவர் போதையில் இருந்தார்.

தற்போது கூட்டு எதிர்க்கட்சியினர் நடத்திய பாத யாத்திரையில் இரண்டு கோடி மக்கள் பங்குபற்றியதாக கூறியுள்ளார். சுய நினைவில் இருந்திருந்தால் கீதா குமாரசிங்க இவ்வாறு கூறியிருக்க மாட்டார் எனவும் இசுறு சாடினார்.

இதேவேளை, கூட்டு எதிர்க்கட்சியினர் எப்போதும் மது போதையில் இருப்பது நாம் அனைவரும் அறிந்த விடயமே.

அண்மையில் இவர்கள் நடத்திய பாதயாத்திரையில் கலந்து கொண்டவர்கள் கூட மது அருந்தியே குறித்த பாத யாத்திரையில் ஈடுபட்டமையை மேல்மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய இதில் சுட்டிக்காட்டினார். (இ-7-10)

# கல்வீசி தாக்குதல்; ஒருவர் உயிரிழப்பு

புகையிரத பயணத்தின் போது வெளியேயிருந்து எறியப்பட்ட கல்லால் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் உயிரிழந்துள்ளார்.

அநுராதபுர போதனா வைத்தியசாலையில் கடந்த 5 நாட்களாக சிகிச்சை பெற்று வந்தவர் நேற்று முன்தினம் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

வேலையின் நிமிர்த்தம் கொழும்பிலிருந்து அநுராதபுரத்திற்கு புகையிரதத்தில் பயணித்துக் கொண்டிருந்த குறித்த நபர் மீது வனவாசல களனி புகையிரத நிலையங்களுக்கு இடையில் கல்வீச்சுத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. குறித்த சம்பவத்தில், அநுராதபுரம் புளியங்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயது நிரம்பிய உதவி கல்வி இயக்குநரே உயிரிழந்துள்ளார். (இ-7-10)

# கரீபியன் பிரீமியர் கிரிக்கெட் ஜமைக்கா தல்லவாஸ் சம்பியன்

கரீபியன் பிரீமியர் லீக் இருபது-20 கிரிக்கெட் தொடரில் கெய்ல் தலைமையிலான ஜமைக்கா தல்லவாஸ் அணி சம்பியன் பட்டத்தை கைப்பற்றியுள்ளது.

கரீபியன் பிரீமியர் லீக் தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கெய்ல் தலைமையிலான ஜமைக்கா தல்லவாஸ் அணியும், எம்ரிட் தலைமையிலான கயானா அமேசன் வோரியர்ஸ் அணியும் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற ஜமைக்கா தல்லவாஸ் அணியின் தலைவர் கிறிஸ் கெயல் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதனையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய கயானா அமேசன் வோரியர்ஸ் அணி ஜமைக்கா அணியின் பந்துவீச்சில் திணற ஆரம்பித்தது.

அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களே எடுத்தனர். இதனால் 16.1 ஓவரிலே அந்த அணி 93 ஓட்டங்களுக்கு சுருணடது. அதிகபட்சமாக சொஹால் தன்வீர் 42 ஓட்டங்கள் எடுத்தார்.

ஜமைக்கா தல்லவாஸ் அணியின் சார்பில் இமாத் வசிம் 3 விக்கெட்டுகளும், ஷகிப், கேஸ்ரிக் வில்லியம்ஸ் தலா 2 விக்கெடடுகளும் வீழ்த்தினர்.

இந்நிலையில் 94 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி களமிறங்கியது ஜமைக்கா தல்லவாஸ் அணி சார்பில்

தொடக்க வீரர்களாக அணித்தலைவர் கிறிஸ் கெய்ல், வோல்டன் களமிறங்கினர்.

கிறிஸ் கெய்ல் தனது "சூறாவளி" ஆட்டத்தை தொடர்ந்தார். அவர் 27 பந்தில் 6 சிக்சர், 3 பவுண்டரி என 54 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் வோல்டன், குமார் சங்கக்கார இணைந்து அணியை வெற்றி பெற வைத்தனர். இதனால் அந்த அணி 12.5 ஓவரிலேயே ஒரு விக்கெட்டை இழந்து 95 ஓட்டங்கள் எடுத்து 9 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.



குமார் சங்கக்கார 12 ஓட்டங்களுடனும், வோல்டன் 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக் காமல் களத்தில் இருந்தனர்.

4 ஓவர்கள் வீசி 21 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 3 விக்கெட்டுக்கள் வீழ்த்திய ஜமைக்கா அணியின் இமாத் வசிம் ஆட்ட நாயகன் விருதையும், ஆன்ட்ரே ரஸல் தொடர நாயகன் விருதையும் வென்றனர். (க)

# யாரும் நெருங்க முடியாத நிலையில் அமெரிக்காவின் நீச்சல் வீரர் பெல்ப்ஸ்

ஒலிம்பிக்கில் தங்க வேட்டை நாயகன் என்று அழைக்கப்படுபவர் மைக்கல் பெல்ப்ஸ். நீச்சல் வீரரான அவர் தற்போது ரியோ ஒலிம்பிக்கில் ஒரு தங்கமும் ஆக மொத்தம் 19 தங்கம் கைப்பற்றியுள்ளார்.


ஒலிம்பிக்கில் தங்க வேட்டை நாயகன் என்று அழைக்கப்படுபவர் மைக்கேல் பெல்ப்ஸ். அமெரிக்க நீச்சல் வீரரான அவர் ஒலிம்பிக்கில் அதிக தங்கம் (18), அதிக பதக்கம் (22) வென்று சாதனை வீரராக இருக்கிறார்.

இந்த நிலையில் மைக்கல் பெல்ப்ஸ் நேற்று 19-வது தங்கத்தை வென்றார். 4X100 மீட்டர் தொடர் நீச்சல் பந்தயத்தில் அமெரிக்க அணி தங்கம் வென்றது. 4 பேர் கொண்ட அந்த அணியில் பெல்ப்சும் இடம் பெற்று இருந்தார். அமெரிக்க அணி பந்தய தூரத்தை 30 நிமிடம் 09.02 வினாடியில் கடந்தது.

31 வயதான பெல்ப்ஸ் ஒலிம்பிக் போட்டியில் மொத்தம் 23 பதக்கம் பெற்றுள்ளார். 19 தங்கம், 2 வெள்ளி, 2 வெணகலம் வென்று முத்திரை பதித்து இருக்கிறார்.

பெல்ப்சை யாரும் நெருங்க முடியாத அளவுகு இருக்கிறார். சோவியற யூனியனை சேர்ந்த லாரிசியா 9 தங்கம் வென்று 2-வது இடத்தல் உள்ளார். பெல்ப்ஸ் 2004-ம் ஆண்டு எதென்ஸ் ஒலிம்பிக்கில் 6 தங்கமும், பீஜிங் ஒலிம்பிக்கில் 8 தங்கமும், லண்டன் ஒலிம்பிக்கில் 4 தங்கமும், தற்போது ரியோ ஒலிம்பிக்கில் ஒரு தங்கமும் ஆக மொத்தம் 19 தங்கம் கைப்பற்றியுள்ளார்.

பெல்ப்சுக்கு ரியோ ஒலிம்பிக்கில் இன்னும் சில போட்டிகள் இருக்கிறது. இதிலுமஅவர் தங்க பதக்கத்தை கைப்பற்றினால் அவரது பதக்க எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். அவரது சாதனையை யாராலும முறியடிக்க முடியாத நிலை இருக்கிறது. (க)



# பதக்க பட்டியலில் அமெரிக்கா முன்னிலை

ரியோ ஒலிம்பிக்கில் அமெரிக்கா 3 தங்கம் உட்பட 12 பதக்கங்களுடன் முதல் இடத்தில் உள்ளது. போட்டியை நடத்தும் பிரேசில் 20-வது இடத்தில் உள்ளது.

பிரேசில் நாட்டில் 'ஒலிம்பிக் 2016' தொடர் ரியோ ஒலிம்பிக் என்ற பெயரில் கடந்த 5ஆம் திகதி தொடங்கியது.

நேற்று 4-வது நாள் போட்டிகள் நடை பெற்றுவருகின்றன. நான்காவது நாள் தொடக்கத்தில் பதக்க பட்டியலில் அமெரிக்கா 3 தங்கம், 5 வெள்ளி மற்றும் 4 வெண்கல பதக்கங்களுடன் முதல் இடத்தை பிடித்துள்ளது.

சீனா 3 தங்கம், 2 வெள்ளி, 3 வெண் கலத்துடன் 2-வது இடத்தில் உள்ளது. அவுஸ்திரேலியா 3 தங்கம், 3 வெண்கலத்துடன்3-வது இடத்தில் உளளது. (க)

# ரியோ ஒலிம்பிக் போட்டி பிரித்தானிய வீரர் சாதனை

ரியோ ஒலிம்பிக்கில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் பிரித்தானிய வீரர் உலக சாதனை படைத்து அசத்தியுள்ளார்.


ரியோ ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான தகுதிசுற்று 100 மீற்றர் பிரஸ்ட் ஸ்டோக் நீச்சல் போட்டி நடைபெற்றது. இதில் பல்வேறு நாட்டை சேர்ந்த வீரர்கள் பங்கேற்றனர்.

போட்டி ஆரம்பித்த சில நொடிகளிலே பிரித்தானியாவை சேர்ந்த Adam Peaty (21) பந்தைய தூரத்தை கடந்து அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

இதில் சாதனை என்னவென்றால் இதற்கு முன்னர் நீச்சல் போட்டியில் பந்தய தூரத்தை 57.92 நிமிடங்களில் கடந்ததே சாதனையாக இருந்தது.

தற்போது அந்த சாதனையை Adam Peaty 57.55 நிமிடங்களில் கடந்து உலக சாதனை படைத்தார். இந்த இரண்டு சாதனையும Adam Peaty தான் படைத்தார் என்பது சிறப்பு.

இது குறித்து Adam Peaty கூறியதாவது, போட்டி முடிந்ததும் ரசிகர்கள் தொடர்ந்து ஆரவாரம் செய்தனர். இப்போட்டியில்தான் பிரேசில் வீரர்கள் யாரும் கலந்து கொள்ள



வில்லையே, பிறகு எதற்கு ஆரவாரம் செய்கிறார்கள் என்று யோசித்த பின், திரையில் தான் பந்தய தூரத்தை 57.55 நிமிடங்களில் கடந்து உலக சாதனை படைத்ததாக அறிவித் தனர். இதன் காரணமாக ரசிகர்கள் ஆரவாரம் செய்கின்றனர் என்பதை அறிந்தேன் என கூறியுள்ளார்.

Adam Peaty 2014ஆம் ஆண்டில் கோமன் வேல்த் 100 மீற்றர் நீச்சல் போட்டியில சம்பயன் பட்டம் வென்றார் மற்றும் 2015ஆம் ஆண்டு வேர்ல்ட் சம்பியன்சிப் போட்டியல் 100 மீற்றர், 50 மீற்றர் போட்டிகளில பட்டம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# இந்திய - மே. தீவுகள் 3ஆவது டெஸ்ட் இன்று


விராட் ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட்அணி மே. தீவுகள் சுற்றுப்பயணம்செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 4 டெஸ்ட்போட்டித்தொடரில் அன்டிகுவாவில் நடந்த முதல் டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 92 ரன் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது. கிங்ஸ்டனில் நடந்த 2-வது டெஸ்ட் 'சமனிலை' ஆனது.இந்தியா-மே.தீவுகள் அணிகள் மோதும் 3-வது டெஸ்ட் போட்டி கிராஸ் ஐலெட்டில் இன்று தொடங்குகிறது. இந்த டெஸ்டில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரை கைப்பற்றும் ஆர்வத்தில் உள்ளது.

இன்றைய டெஸ்ட் இலங்கை நேரப்படி இரவு 8.30 மணிக்கு தொடங்குகிறது. இரு அணி வீரர்கள் விவரம்

**இந்தியா:** விராட் ஹோலி (கட்டன்), தவான், ராகுல், புஜாரா, ரகானே, விருத்திமான் சகா, அஷ்வின், உமேஷ் யாதவ், முகமட் ஷமி, அமித் மிஸ்ரா, இஷாந்த் சர்மா, முரளி விஜய், ரோகித் சர்மா, ஸ்டூவர்ட் பினி, புவனேஷ்வர் குமார், ரவீந்திர ஜடேஜா, ஷர்துல் தாக்கர்.

**மேற்கிந்திய தீவுகள்:** ஹோல்டர் (கட்டன்), கிரேக் பிராத்வெயிட், டரன் பிராவோ, சாமுவேல்ஸ், பிளக்வுட், ரோஸ்டன்சேஸ், பிராத்வெயிட், தேவேந்திர பிஷூ, டவ்ரிச், கேப்ரியல், ஹோப், அல்ஜாரி ஜோசப்ஸ் கும்மினஸ் (க)






# சூழ்ச்சிக்காரர்களுடனே நான் ஆட்சி செய்தேன்


## மகிந்த ராஜபக்ஷ கவலை

சூழ்ச்சிக் காரர்களுடன் இணைந்தே தாம் ஆட்சி செய்ததாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தென் கொரியாவின் சியோல் நகரில் இலங்கையர்களை சந்தித்து நேற்று முன்தினம் உரையாற்றிய போது இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்.

அந்தக் காலத்தில் எனது ஆட்சியின் கீழ் அமைச்சர்களாக பதவி வகித்தவர்கள் இந்த அரசாங்கத்திலும் அமைச்சுப் பதவி வகிக்கின்றனர்.

என்னுடன் இருந்து புகைப் படம் எடுத்துக் கொள்ள முயற்சித்த சில அமைச்சர்கள் இன்று மைத்திரியுடன் புகைப் படம் எடுத்துக்கொள்ள முயற்சிக்கின்றனர்.



நான் பெற்றுக்கொண்ட கடன் தொகை நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனை நாட்டைப் பார்க்கும் போதே புரிந்து கொள்ள முடியும்.

கடன் ஒன்பது பில்லியன் ரூபா என தற்போதைய ஆட்சியாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர். நாம் பெற்றுக்கொண்ட கடன் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் காட்டப்படுகின்றது.

தற்போதைய அரசாங்கம் அதனை விடவும் அதிகளவு கடனை குறுகிய காலத்தில் பெற்றுக்கொண்டுள்ளது. இந்தக் கடன் தொகைக்கு என்ன வாயிற்று எனக் கேட்டால் வாங்கிய கடனை செலுத்தி வருவதாக கூறுகின்றார்கள்.

வேலை செய்ய முடியாவிட்டால் அனைத்து குற்றங்களும் மகிந்த மீதான குற்றச்சாட்டுக்களாக மாறுகின்றன.

நாம் நாட்டுக்கு நேர்மையாக கடமையாற்றியுள்ளோம், நாம் செய்த பணிகளில் ஒரு துளியேனும் இந்த அரசாங்கம் செய்யவில்லை என மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7-10)

# வற் வரியில் பல திருத்தங்கள்

வற் வரி சீர்திருத்தத்தில் மேலும் சில திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். இந்த சீர்திருத்த சட்ட மூலம் இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வற் வரி சீர்திருத்தம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு, இன்று சபாநாயகரினால் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படும் என அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மோதரை பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அமைச்சர் இதனை தெரிவித்தார். (இ-7-10)

# விழுமியங்களில் விவாதப் போட்டி இறுதிச் சுற்று முடிபுகள் வெளியீடு

யாழ்ப்பாணம் கலட்டிச்சந்திக்கு அருகேயுள்ள சுகதாமம் மண்டபத்தின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு க.பொ.த உயர்தர மாணவர்களுக்கிடையில் மாகாண மட்டத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட விழுமியங்கள் பற்றிய விவாதத் தொடரின் இறுதிச்சுற்றுப்போட்டியின் முடிவுகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் விபரங்கள் வருமாறு,

**காலிறுதிச்சுற்று**

முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி

**அரையிறுதிச்சுற்று**

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் பாடசாலை

**மாபெரும் இறுதிச்சுற்று**

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் பாடசாலை. (இ-5)

## பரீட்சை வினாத்தாள்கள்

தரம் 11 (O/L) மாணவர்களுக்கான ஆங்கில பாடத்துக்கான மாதிரி பரீட்சை வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஏனைய வகுப்பு மாணவர்களுக்கான வினாத்தாள்களும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். (5555)

தொடர்புகளுக்கு:- 077 055 6375

# மரண அறிவித்தல்

## திரு.சின்னத்தம்பி சோதிநாதன்

(ஓய்வுபெற்ற பிரதம எழுதுநர்-கச்சேரி யாழ்ப்பாணம், நிர்வாக அலுவலர், அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையம்)



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சி.சோதிநாதன் 2016.08.07 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- அன்னபூரணம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருணாசலம்- சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் உமையாள்,முகுந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயஷங்கர், ஷர்மிளா ஆகியோரின் அன்பு மாமனாரும், மலரோன், மயிலோன், நவினா, கேஷயன் ஆகியோரின் பாசமிகு பேரனாரும் காலஞ் சென்றவர்களான சிவராசா, புஸ்பமணி, மகேந்திரன் மற்றும் சிவயோகநாதன், திருப்பதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 2016.08.10 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு பகவான் பாதை இருபாலையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இருபாலை கொடிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"பகவான் பாதை"
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (5547)

தகவல்:
குடும்பத்தினர்
சோ.முகுந்தன் (மகன்)
021 492 5164

# இராசி பலன்

09.08.2016
(ஆடி 25, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சஷ்டி முற்பகல் 8.08 மணிவரை
சித்திரை பிற்பகல் 12.34மணிவரை
சுபநேரம் 10.34-12.04மணிவரை
இராகுகாலம் 3.04-4.34 மணிவரை
ஆடிச் செவ்வாய்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் | | சூரி |
| | பூரட்டாதி, உத்தரட்டாதி | | ராகு புத சுக் |
| | சனி செவ் | சந் | குரு |

**மீனம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை ,சேமிப்பில் சிறிது கரையலாம்.

**மேடம்:** மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர்.

**இடபம்:** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மிதுனம்:** நன்மைகள் நாடி வரும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கும்பம்:** அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறலாம், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், வழிபாட்டால் சிறப்பினை காணவேண்டிய நாள்.

**கடகம்:** புதிய நபர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மகரம்:** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், வருமானம் திருப்திகரமானதாக அமையும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்:** உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள்.

**தனுசு:** வாய்ப்புக்கள் உங்களைத் தேடிவரலாம், எதிர்பாராத வகையில் புதிய பொருட் சேர்க்கை இடம்பெறலாம், மதிப்பும், மரியாதையும் உயரும் நாள்.

**விருச்சிகம்:** வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

**துலாம்:** திட்டமிடப்படாத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் தொடர்பான சில காரியங்களுக்காக சற்று அலைய நேரிடலாம்.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், உங்களின் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர்.

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில்

# செஞ்சோலை மழலைகள் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை விமானப்படையின் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட செஞ்சோலை மழலைகளின் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (14.08.2016) அன்று யாழ். முனியப்பர் கோவிலடியில் (யாழ்.கோட்டைக்கு அருகில்) இடம்பெறவுள்ளது என தமி ழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்.

முல்லைத்தீவு மாவட்டம் வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சொலை சிறுமிகள் இல்லத்தின் மீது கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதியன்று இலங்கை விமானப்படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் பாடசாலை மாணவிகள் 61 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன்.129 பேர் காயமடைந்திருந்தனர்.

மேற்படி சம்பவத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு படுகொலைக்கு நீதிகோரியும். உயிரிழந்த மழலைகளின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கும் வண்ணம் அழைக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## கேரளக் கஞ்சாவுடன் தாவடி இளைஞன் கைது



கொக்குவில் தாவடிப் பகுதியில் உள்ள பழைய முருகன் கோவிலுக்கு அண்மையில் விற்பனைக்காக எடுத்துச் செல்லப்பட்ட இரண்டு கிலோ நூறு கிராம் கேரளக் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பருத்தித்துறை மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி சமிந்த சிறிமன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மதியம் கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் தாவடிப் பகுதிக்கு விரைந்த மதுவரித் திணைக்களத்தினர் விற்பனைக்காக பை ஒன்றில் எடுத்து வந்த இரண்டு கிலோ நூறுகிராம் கேரளக் கஞ்சாவினை மீட்டதுடன் தாவடி தெற்கைச் சேர்ந்த இளைஞனையும் கைது செய்ததாக பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட இளைஞனை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக பொறுப்பதிகாரி சமிந்த சிறிமன் மேலும் தெரிவித்தார். (இ-60)

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தின திருமுறை மனனப்போட்டி பரிசளிப்பு

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத்தின திருமுறை மனனப்போட்டி பரிசளிப்பு விழா நாளை 10ஆம் திகதி புதன்கிழமை மாலை 5மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.பரிசளிப்பு விழாவுக்கு கோப்பாய்நாவலர்தமிழ்வித்தியாலய ஓய்வுநிலை ஆசிரியை கமலராணி பாஸ்கரநாதசர்மா முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு திருமுறை மனனப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்குவார்.

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை முன்னிட்டு 31.07.2016 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திருமுறை மனனப்போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்றோர் விபரம் வருமாறு,

பாலர் பிரிவு தரம் -1

ரா.சாய்பிரவீனா(யா/யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), ஜெ.அபிஷிகா(யா/யாழ் இந்துஆரம்பபாடசாலை), சி.பௌசிகன்(யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியா லயம்).

பாலர் பிரிவு தரம்-2

ஜெ.திவஷ்திகா(யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), ச.மகிஷா(யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), பா.அக்சயா(யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாலயம்).

கீழ்ப்பிரிவு தரம்-3

கோ.சர்மிகா(சுன்னாகம் கதிரமலை சிவன் அறநெறிப் பாடசாலை), கு.யுகானா (சுன்னாகம் கதிரமலை சிவன் அறநெறிப்பாடசாலை), சி.ஸ்ருதி (கோண்டாவில் கைலாஸ நாத வேதசிவாகம அறநெறிப் பாடசாலை).

கீழ்ப்பிரிவு தரம்-4

அ.தேனுஜென்(யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை), சி.பூர்வஜா (சுன்னாகம் கதிரமலை சிவன் அறநெறிப்பாடசாலை), அ.ஆதித்தன்(யா/வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி). (இ)

## சைவசமய அபிவிருத்திக்கழக புதிய நிர்வாக சபைத் தெரிவு

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் வரு டாந்தப் பொதுக் கூட்டம் கட ந்த 31 ஆம் திகதி நாவலர் வீதியில் அமைந்துள்ள சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவக அலுவலகத்தில் நடைபெற்றது.

நிர்வாக சபைத் தலைவராக இரா. செல்வவடிவேல் , உப தலைவர்களாக சி.சோமேஸ்வரப்பிள்ளை, பா.கா சிநாதன், செயலாளராக சொ. முகுந்தன், உப செயலாளராக இ. வாசுகி, பொருளாளராக சி.சிவகுமாரன் , சமயப் பிரசாரகர் , பரீட்சை செயலாளர் மற்றும் அறநெறிப்பாடசாலை பொறுப்பாசிரியராக சு.சிறிகாந்தன, நிர்வாக சபை உறுப்பினர்களாக வி. தயாபரன் , தி. அருளம்பலம், கலாபூஷணம் சு. நாகலிங்கம் ஆச்சாரி . நா. லோகநாதன் . சி.அச்சுதன் ,இ.ஜெயகபில். பா.சசிக்குமார்.பா. ஜெயபாலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ)




## ஆடுகள் வழங்கப்பட்டன



பருத்தித்துறை தும்பளை அஞ்சலியகம் உளசமூக ஆற்றுகைப்படுத்தல் நிறுவனத்தினால் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட பதின்மூன்று குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அஞ்சலியகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இவ்வைபவத்தில் எம்.ஜே.எப். பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் இவ் ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.ஒரு குடும்பத்திற்கு தலா இரண்டு ஆடுகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன. (இ-60)

## வைத்திய அதிகாரி நியமனம்

கரவெட்டி பிரதேச வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரி ஒருவர் (D.m.o) நியமிக்கப்பட்டுள்ளார்.


இவ்வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரி (D.m.o) நியமிக்கப்படாமலிருந்த நிலையில் சுகாதாரத் திணைக்களத்தினால் சுந்தரமூர்த்தி பிரேமானந் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-60)



கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப்பகுதியும் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியமும் இணைந்து வறுமைக்கோட்டிற்குட்பட்ட 179 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகளை வங்கியுள்ளது. கரவெட்டி பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் உபாலி பொன்னம்பலம் தலைமையில் நேற்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் நிகழ்வு இடம்பெற்றது. இதில் தெரிவு செய்யப்பட்ட 179 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி எஸ். சுதோஸ்குமார், சமூக சேவை உத்தியோகத்தர் எஸ். வரதபாஸ்கரன், நிர்வாக உத்தியோகத்தர் ம.முரளி மற்றும் வைத்தியர்களான சு.பிரேமானந், மங்கையர்மணி ஆகியோர் கலந்து கொண்டு மூக்குக்கண்ணாடிகளை வழங்கி வைத்தனர். (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி கவனயீர்ப்பு





## யாழ்.மத்திய பேருந்து நிலையம் முன்பாக நேற்று முன்னெடுப்பு




(படங்கள்:பொ.சோபிகா)

(யாழ்ப்பாணம்)

**தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக முன்னெடுக்கப்பட்டது.**

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி அநுராதபுரம் சிறையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்கைதிகளின் மீது இராணுவமும் சிறைச்சாலை அதிகாரிகளும் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் 28 பேர் காயமடைந்ததுடன் நிமலறூபன்.டெல்ரூக்ஷன் ஆகிய கைதிகள் உயிரிழந்தனர்.

இவர்களுடைய 4 ஆம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யக்கோரியும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக் கோரியும் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.














இப்போராட்டத்தில் மைத்திரி, ரணில் அரசே அரசியல் கைதிகளை பழி வாங்காதே, அரசியல் கைதி களை உடன் விடுதலை செய், பயங்கரவாதத்தடைச் சட்டத்தை உடனே ரத்துச் செய், கைதிகளின் விடுதலையில் பாரபட்சம் காட்டாதே, இனப் பழிவாங்கல் செய்யாதே, முன்பு பொது மன்னிப்பு இன்று மறுப்ப தேன், சிறைச்சாலை படுகொலைகளுக்கு நீதி விசாரணை வேண்டும், அரசியலில் நல்லிணக்க பேச்சு, அரசியல் கைதிகளை விடுவிக்க மறுப்பு போன்ற கோசங்களை எழுப்பி தம் உறவுகளுக்கான நீதியை கோரி போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில் மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி தலைவர்கள்.வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், அரசியல் கைதிகளின் உறவி னர்கள், பொது அமைப்புக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி வெலிக்கடைச்சிறை முன் ஆர்ப்பாட்டம்






சிறைகளில் விடுதலைக்காக போராடிவரும் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுவிக்கக் கோரி கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப் போராட்டத்தில் ஆட்சி மாற்றத்தின் பின்பாக பல தடவைகள் அரசியல் கைதிகள் தமது விடுதலையினை வலியுறுத்தி உண்ணாவிரதப்போராட்டத்தினை நடத்தியுள்ளனர். எனினும் அப்போராட்டங்களுக்கு நியாயபூர்வமான தீர்வினை வழங்குவதற்கு அரசாங்கம் மறுத்து வருகின்றது. இவ்வாறானதோர் சூழ்நிலையில் அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனைகள் இன்றி விடுவிக்கக் கோரி, இப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

வலம்புரி கல்விப்பிரிவு

### கிராம சேவையாளர் பரீட்சை -2016
### பொது அறிவும் நுண்ணறிவும் விடைகள்

பொது அறிவு

| | | | | |
|---|---|---|---|---|
| 01) 3 | 11) 3 | 21) 2 | 31) 2 | 41) 1 |
| 02) 1 | 12) 2 | 22) 2 | 32) 2 | 42) 3 |
| 03) 2 | 13) 3 | 23) 2 | 33) 2 | 43) 2 |
| 04) 4 | 14) 1 | 24) 1 | 34) 2 | 44) 1 |
| 05) 2 | 15) 2 | 25) 2 | 35) 3 | 45) 1 |
| 06) 1 | 16) 1 | 26) 2 | 36) 3 | 46) 4 |
| 07) 1 | 17) 1 | 27) 2 | 37) 2 | 47) 2 |
| 08) 2 | 18) 3 | 28) 2 | 38) 3 | 48) 1 |
| 09) 1 | 19) 3 | 29) 3 | 39) 1 | 49) 1 |
| 10) 2 | 20) 2 | 30) 4 | 40) 2 | 50) 3 |

நுண்ணறிவு

| | | |
|---|---|---|
| 01) 1 | 11) 2 | 21) 1 |
| 02) 3 | 12) 1 | 22) 2 |
| 03) 4 | 13) 1 | 23) 1 |
| 04) 2 | 14) 2 | 24) 11 |
| 05) 3 | 15) 3 | 25) 16 |
| 06) 1 | 16) 1 | |
| 07) 4 | 17) 3 | |
| 08) 2 | 18) 2 | |
| 09) 1 | 19) 1 | |
| 10) 3 | 20) 3 | |

வலம்புரி கல்விப் பிரிவு
தொடர்பு: 076 636 3378

# திருடும் நோக்கில் வீட்டினுள் நுழைந்த நபர் மடக்கி பிடிப்பு

## முள்ளியவளை வடக்கு பகுதியில் சம்பவம்

முல்லைத்தீவு முள்ளியவளை பிரதேசத்தில் முள்ளியவளை வடக்கு பகுதியிலுள்ள வீடொன்றினுள் திருடும் நோக்குடன் உள் நுழைந்த திருடன் வீட்டின் உரிமையாளர், அயலர்கள் ஆகியோரால் பிடிக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்ட நிலையில் முள்ளியவளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வீட்டில் இருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயம் பார்த்து வேலி வழியாக வளவினுள் நுழைந்து வீட்டிற்குள் சென்றுள்ளார். உள் நுழைந்த சமயம் அவனது கால்கள் எழுப்பிய சத்தத்தைக் கேட்டு விழித்துக் கொண்ட வீட்டின் உரிமையாளர் பிரஸ்தாப நபரைப் பிடித்து அயலவர்களின் உதவியுடன் முள்ளியவளை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரின் கையில் கைவிலங்கை மாட்டிய போதும் அதனையும் கழற்றிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார். இருந்தபோதும் பொலிஸாரும் பொது மக்களும் இணைந்து பிரஸ்தாப நபரை துர த்திப் பிடித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை பிரஸ்தாப நபர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் எனவும் முள்ளிய வளை பகுதியில் மேசன் வேலைக்காக தங்கி நின்றுள்ளார் என்றும் ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. இதேவேளை வீட்டினுள் நுழையும் போது குறித்த நபரின் உடலில் ஒரு துணிகூட இருக்கவில்லையென பொலிஸார் தெரிவிக்கின்றனர். (2-310)




# இவ்வாண்டுக்கான சிறந்த விவசாயிகள் தெரிவும் வீட்டுத்தோட்ட செய்கையாளர்களுக்கான போட்டியும்

வடக்கு மாகாணசபையின் விவசாய கமநல சேவைகள் கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசன மற்றும் சுற்றாடல் அமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழும் விவசாய திணைக்கள நிதியொதுக்கீட்டின் கீழும் சிறந்த விவசாயிகள் தெரிவு மற்றும் சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளர்களுக்கான போட்டிகள் நடைபெறவுள்ளதாக வவுனியா பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் (விரி) தெ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இவ்வாண்டில் வயல் நிலங்களில் சிறந்த பயிர் மாற்றீட்டுச் செய்கையாளர்களுக்கான , போட்டி சிறந்த காளான் செய்கையாளர்களுக்கான போட்டி, சிறந்த சேதன உள்ளீடுகள் உற்பத்தியாளர்களுக்கான போட்டி, சிறந்த சேதன விவசாயச் செய்கையாளர்களுக்கான போட்டி, சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர்களுக்கான போட்டி என்பன நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விவசாய செய்கையாளர்களை தெரிவு செய்து கௌரவிக்கும் திட்டத்தின் கீழ் முதலில் விவசாயப் போதனாசிரியர் மட்டத்தில் நடத்தப்பட்டு முதல் மூன்று சிறந்த விவசாயச் செய்கையாளர்களும் தெரிவு செய்யப்படுவர். இரண்டாம் கட்டமாக மாவட்ட மட்டத்தில் மூன்று வெற்றியாளர்கள் தெரிவு செய்யப் படுவர். இவ்வாறு மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பணப் பரிசில்கள். வெற்றிக்கேடயம். சான்றிதழ் என்பன வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் ப்ங்குகொள்ள விரும்பும் போட்டியாளர்கள் அந்தந்தப் பகுதியிலுள்ள விவசாய போதனாசிரியர் காரியாலயத்திலும் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்திலும் மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்திலும் போட்டிக்கான விதிமுறைகளை அறிந்து கொண்டு விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ள முடியும் .

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் ஓகஸ்ட்30 ஆம் திகதிக்கு முன்னர் விவசாய போதானாசிரியரிடம் கையளிக்கவேண்டும். மாவட்ட மட்ட வெற்றி யாளர்களுக்கு உழவர் பெருவிழாவில் வைத்து பணப் பரிசில்கள், வெற்றிக்கேடயம் சான்றிதழ் என்பன வழங்கப்படவுள்ளது என அவர் மேலும் அறிவித்துள்ளார். (2)

# அனைத்து அபிவிருத்தி திட்டங்களும் மக்களின் வரிப் பணத்தில் இருந்தே மீண்டும் வருகின்றன

## அடிக்கல் நாட்டும் நிகழ்வில் அமைச்சர் டெனீஸ்வரன்

அரசு தருகின்ற அபிவிருத்தி திட்டங்களை பொக்கிஷங்களாக நாம் பாதுகாக்க வேண்டும் என்றும் அவ்வாறு நாம் செய்யும் போதே நம்முடைய வருங்கால சந்ததியும் அதனால் பூரண பலனை அடையும் என வடக்கு மாகாண வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாந்தை சோல்ட் லிமிடெட் நிறுவனத்தால் மன்னார் உப்பளத்தில் அமைக்கப்படவுள்ள சுற்றுலா விடுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழவு அண்மையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்கு கொடுக்கப்படும் அனைத்து அபிவிருத்தி திட்டங்களும் அவர்களது வரிப்பணத்தில் இருந்தே மீண்டும் மக்களுக்கு வருகின்றது என்பதை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும், நம்முடைய சொந்த பொருட்களில் நாம் காட்டும் அதே அக்கறையை பொதுச் சொத்துக்கள் மட்டிலும் காட்டவேண்டும், காரணம் அது நம்மோடு மட்டும் முடிந்து போவதல்ல. நம்முடைய சந்ததிக்கு தொடர்ந்து பயன் தரும் வண்ண்ம், அரசு தருகின்ற அபிவிருத்தி திட்டங்களை பொக்கிஷங்களாக நாம்



பாதுகாக்கவேண்டும் என்றும் அவ்வாறு நாம் செய்யும்போதே நம்முடைய வருங்கால சந்ததியும் அதனால் பூரண பலனை அடையும் எனவும் தெரிவித்ததோடு, குறித்த இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் மாந்தை உப்பள லிமிடெட் நிறுவனத்திற்கு தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

நிகழ்விற்கு மும்மதத் தலைவர்களும், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன், சிறப்பு விருந்தினராக மாகாண சபையின் உறுப்பினர் றிப்கான் பதியுதீன், மாந்தை சோல்ட் லிமிட்டெட் இன் தலைவர், மற்றும் ஏனைய பிரமுகர்கள்,வர்த்தக சங்க தலைவர், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (2-281)



யாழ்.இந்துக் கல்லூரி -2005 உயர் தர மாணவர்களினால் 45 துவிச்சக்கர வண்டிகள் கடந்த 19 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இதற்கமைய, மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம் 11, மு/உடையாரகட்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 8, மு/அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலயம் 7 , மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி 5, மு/செம்மலை மகா வித்தியாலயம் 5, மு/கள்ளப்பாடு அ.த.க பாடசாலை 4 ,மு/கோட்டைகட்டி அ.த.க பாடசாலை 5 ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வீட்டுத்தோட்ட செய்கையாளர்களை ஊக்குவிக்கும் செயற்றிட்டம்

(வவுனியா)

தேசிய உணவு உற்பத்தி திட்டம் 2016-18 நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மத்திய விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன் முதன்மை நிகழ்வாக விவசாய உள்ளீடுகள் விநியோக நிகழ்வு இம்மாதம் 16ஆம் திகதி வவுனியா தாண்டிக்குளத்திலுள்ள அரச விதை உற்பத்திப் பண்ணையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், ஏனைய திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட'பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர் என வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(2)

# உரிமைப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நாம் எல்லோரும் உழைக்க வேண்டியுள்ளது

## செல்வம் எம்.பி. வலியுறுத்து

எமக்குள்ள அதிகார எல்லைகளை பயன்படுத்தி மக்களுக்கு தீர்வு காண முயல்கின்றோம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறியுள்ளார்.





கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்துக்கு நேற்று விஜயம் ஒன்றை மேற்கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அங்கு கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இந்தக் கலந்துரையாடலில் கிராம அபிவிருத்தி சங்கம்,நன்னீர் மீன்பிடிச்சங்கம், மாதர் சங்கம்,விளையாட்டுக்கழக பிரதிநிதிகள், சனசமூக நிலைய பிரதிநிதிகள், ஆலயங்களின் பிரதிநிதிகள், முதியோர் இல்லப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்தனர். அத்துடன் அப்பகுதி கிராம சேவகர்கள், பாராளுமன்ற உறுப்பினரின் கிளிநொச்சி இணைப்பாளர் பொன்.காந்தன், வன்னேரி செயற்பாட்டாளர் நவம் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

குறிப்பாக முறிகண்டி அக்கராயன் ஊடாக செல்லும் ஜெய்புரம் நோக்கிய வீதியின் புனரமைப்பு மற்றும் பொது அமைப்புக்களுக்கு கட்டடங்கள்,காணிகள் இல்லாமை கல்விக்கான உதவிகள், புனர்வாழ்வு பெற்ற போராளிகளின் வாழ்க்கை மேம்பாட்டிற்கான வழிகள் மற்றும் கடல் நீர் உள்வருவதால் மண்டைக்கல்லாற்றுடன் தொடர்புடைய பகுதிகள் உவர் அடைதல் பற்றிய அபாயம் போன்ற விடயங்களை மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.இதன் போது அங்கு கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்,

நாம் மக்களுக்கு உண்மையான விடயங்களை, இயலுமைகளை பேசி முடிந்த வரையில் அவர்களின் பிரச்சினைகளை தீர்க்கப் பாடுபடுகின்றோம். குறிப்பாக அபிவிருத்தி விடயம் தொடர் பில் எமக்குள்ள அதிகார எல்லைகளை பயன்படுத்தி மக்களுக்கு தீர்வு காண முயல்கின்றோம். இன்றைக்கு மீள்குடியேற்ற செயலணி தொடர்பில் சர்ச்சைகள் இருப்பதை நீங்கள் அறிவீர்கள்.நாம் வென்றெடுக்க வேண்டிய பணி இன்னும் சவால் நிறைந்ததாகவே காணப்படுகின்றது.இன்னொரு புறத்தில் எமது பிரதானமான இலக்கான எமது உரிமைப் பிரச்சினைக்கு தீர்வு காண நாம் எல்லோரும் தொடர்ந்து உழைக்க வேண்டிய நிலையிலேயே இருக்கின்றோம்.அதை நோக்கிய பயணத்தில் எமது மக்களின் அன்றாட அத்தியாவசிய போக்குவரத்து, கல்வி, வாழ்வாதாரம்,தொழில் வாய்ப்பு, மின்சாரம் உள்ளிட்ட பிரச்சினைகளை தீர்த்தே ஆக வேண்டும். எனவே அதற்காக நாம் தொடர்ந்து உங்களுக்காக பாடுபடுவோம்.அத்துடன் சிறையில் வாடும் எமது உறவுகளுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்து அவர்களும் வெளியில் ஒரு வாழ்வை, வசந்தத்தை அனுபவிக்க எமது பணியும் உழைப்பும் மேலாக இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (2-312)

# நல்லூர்க்கந்தனின் மஹோற்சவம் நேற்று ஆரம்பம்


வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர்க்கந்தன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்றைய தினம் முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

(படங்கள் :- உ.சாளின், ஐ.சிவதசாசன்)

## மகிழ்ச்சியான குடும்பத்தினை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம்

### உடுவிலில் நேற்று ஆரம்பம்



போதைப்பொருள் புகைத்தல் தடுப்பு ஆத்மீக அபிவிருத்தியின் ஊடாக மகிழ்ச்சியான குடும்பத்தினை கட்டியெழுப்புதல் தொடர்பான வேலைத்திட்டம் உடுவில் பிரதேச செயலகத்தின் சமூக அபிவிருத்தி மன்றத்தினால்



சமுர்த்தி பயனாளிகளுக்கு நேற்றைய தினம் உடுவில் வாழ்வின் எழுச்சி வங்கியில் ஆரம்பிக்கப்பட்டது.

உடுவில் வாழ்வின் எழுச்சி வங்கி முகாமையாளர் திருமதி ஜெ.ஆனந்தகௌரி தலைமையில்நடைபெற்றஇந்த நிகழ்வில் மகிழ்ச்சிகரமான குடும்பமும் மகிழ்ச்சிகரமான குடும்பத்துக்கு எவ்வாறு போதைப்பொருள் பாவனை தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் உளவளத்துணை உத்தியோகத்தர் பி.அருமைத்துரை மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலைய மாவட்ட இணைப்பாளர்கோஷ்வரன் மற்றும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபையின் யாழ். மாவட்ட உளவளத்துணையாளர் அ. எட்வின் றொஜர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

மேலும் அப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக போதைப் பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பாடசாலை மட்டத்திலும் கிராமமட்டத்திலும் நடத்தி அதனை குறைப்பதற்கான செயற்பாட்டில் உடுவில் பிரதேச செயலகமும் உடுவில் வாழ்வின் எழுச்சி பிரிவும் திட்டமிட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

## போக்குவரத்து சேவையை சீர்படுத்தவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தியினூடாக நீர்வேலி சென்றடையும் வழித் தட இலக்கம் 800 இலங்கைப்போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடாத காரணத்தினால் பாடசாலை மாணவர்கள், நோயாளிகள், பயணிகள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுவருகின்றனர். எனவே இப் போக்குவரத்து சேவையினை ஒழுங்குபடுத்தித்தருமாறு அப் பகுதி வாழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3)

## நீச்சல் தடாகத்தில் விழுந்த சிறுவன் பலி


வெயாங்கொட பிரதேசத்தில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா ஒன்றில் உள்ள நீச்சல் தடாகத்தில் விளையாடிக்கொண்டிருந்த 9 வயது சிறுவன் ஒருவன் நேற்று பலியாகியுள்ளான்.

சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு தனது குடும்பத்தாருடன் குறித்த பிரதேசத்திற்கு சென்ற மாணவனே இவ்வாறு பலியாகியுள்ளதாக வெயாங்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுவன் சியஒலாபே பகுதியைச் சேர்ந்தவர் என்றும், இவரது சடலம் கம்பஹா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7-10)

## புதிய நிர்வாகத்தெரிவு

வலிகாமம் கிழக்கு பிர தேச செயலர் பிரிவிற்கான கலாசார அதிகார சபையின் நிர்வாகத் தெரிவுக்கூட்டம்கோப்பாய் உதவி பிரதேச செயலர் செல்வி பிறேமினி சபாரட்ணம் தலைமையில் கோப்பாய் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. சபையின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்- பிரதேச செயலர் (பதவி வழியாக),உப தலை வர்-இ.மயில் வாகனம், செயலாளர்-திருமதி சி.வைகுகநேசன்,உப செயலாளர்-எஸ்.பகவத்சிங்கம், பொருளாளர்-வை.குணசேகரம், ஒருங்கிணைப்பாளர்-எஸ்.ஸ்ரீதரன் (கலாசார அலுவலர்), ஆலோசகர்கள்-எஸ்.தியாகராஜ குருக்கள், த.பரராசசிங்கம், முத்துராதா கிருஷ்ணன் (மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்), நிர்வாகக்குழு உறுப்பினர்கள். திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாரசம்,எஸ். செல்வச்சந்திரன், மா.ஞானலிங்கம், த.பரராஜசிங்கம், எஸ். சத்தியதாஸ், எஸ்.சிவசுப்ரமணியம், எஸ்.கதிர்வேலுஆகியோர்தெரிவு செய்யப்பட்டனர்.(இ-3-134)





வடமாகாண லயன்ஸ் கழகங்களால் நடத்தப்பட்ட சர்வதேச லயன்ஸ் கழகங்களின் இலங்கை 306 B1 மாவட்டத்தின் புதிய ஆளுநராகப் பதவியேற்ற டாக்டர் தியாகராஜாவை வரவேற்கும் நிகழ்வு யாழ்.சரஸ்வதி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை 6 ஆம் திகதி நடைபெற்றது. மாவட்ட பிரதிச் செயலாளர் லயன் சிறிபிரகாஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆளுநரைக் கௌரவப்படுத்தும் முகமாகவும் லயன்ஸ் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டு நூறு வருடங்கள் கடக்கும் நிலையில் நூற்றாண்டு காணும் தமிழ் ஆளுநர் ஒருவர் பதவியேற்பதையிட்டும் 306 B1 மாவட்டத்தில் காணப்படும் கழகங்கள் இணைந்து 3 மில்லியன் ரூபா பெறுமதியான சமூகநலத்திட்டங்களை வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்களுக்கு வழங்கி வைத்தனர்.

# குருப்பெயர்ச்சி பலன்கள்

# நற்பலனைத் தரும் குருவின் பார்வை உங்கள் ராசிக்கு

## 02.08.2016 முதல் 01.09.2017 வரை



பிறருக்கு சேவை செய்வதில் முன்னிற்கும் தனுசு ராசி அன்பர்களே!

இலட்சியத்தோடு செயற்படுபவர்கள் நீங்கள். எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதில் முக்கியத்துவம் வகிப்பவராக விளங்குவீர்கள். தேசப்பற்றும், தெய்வ பக்தியும் மிகுந்த உங்களுக்கு ஆசைப்பட்ட வாழ்க்கை அமையும். குறை கூறியவர்களே கும்பிட்டு வரவேற்கும் விதத்தில் உங்கள் வாழ்க்கைப்பாதை இருக்கும். சாதனையாளர் பட்டியலில் இளமையிலேயே இடம்பிடிப்பவர்கள் நீங்கள் தான்!

ஒரு காலத்தில் 'ஓஹோ' என்ற நிலை. ஒரு காலத்தில் ஒதுங்கி இருக்கும் நிலை. ஏன் இப்படி என்று எண்ணிப்பார்ப்பீர்கள். உங்கள் ராசிநாதனாக குரு இருப்பதால் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை. குருவைக்கும்பிட நம்பியவர்களுக்கு நல்லருள் கிடைக்கும். நீங்கள் சொல்லும் யோசனைகள் அனைத்தும் வெல்லும் யோசனைகளாக மாறும். விதியை வெல்லும் ஆற்றல் குருவின் பார்வைக்கு உண்டு.

இப்பொழுது பத்திற்கு வரப்போகும் குரு, பதவி மாற்றத்தை ஏற்படுத்துமோ என்று பயப்பட வேண்டாம். உங்கள் சுய ஜாதகத்தை புரட்டிப்பாருங்கள். அதில் குரு இருக்கும் நிலை, பாதசார பலம், பார்க்கும் கிரகம் இவற்றைப் பொறுத்து ஒரு சிலருக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும். பொருளாதாரமும் உயரும்.

குரு சுக ஸ்தானத்தைப் பார்க்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஒருவர் சுகமாக, சௌகர்யமாக வாழ வேண்டுமானால் வசதி வாய்ப்புகள் பெருக வேண்டும். அரசு அனுகூலம் கிடைக்க வேண்டும். உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும் விதத்தில் உங்களுக்கொரு பதவி, பொறுப்புகள் கிடைக்க வேண்டும். பாதுகாவலர்கள் புடைசூழ இருக்க வேண்டும். இத்தனை வசதிகளையும் கொடுக்கும் விதத்தில் குரு இருப்பதால், நீங்கள் யோசிக்கத் தேவையில்லை.

உங்கள் ராசிக்கு சப்தமாதிபதி புதன். அவருடைய அமைப்பைப் பொறுத்தே வாழ்க்கைத் துணை அமையும். வாரிசுகளும் உருவாகும். புத்திர ஸ்தானாதிபதியாக விளங்கும் செவ்வாய் விரயாதிபதியாகவும் இருப்பதால், பிள்ளைகளால் பிரச்சினைகள் உருவாகலாம். அதன் விளைவாக மனநிம்மதிக் குறைவு ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

தனாதிபதியாக சனி விளங்குகிறார். அவரே சகாய ஸ்தானாதிபதியாகவும் இருக்கிறார். எனவே உங்களது ஜாதகத்தில் சனியின் அமைப்பைப்பொறுத்தே தனவரவு, பொருளாதாரம், அனைத்து யோகங்களும் வந்து சேரும். மேற்கண்ட மூன்று கிரகங்களும் பலமாக இருந்தால், பலன்கள் அபரிமிதமாக கிடைக்கும். இல்லையேல் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்து நற்பலன்களாக வரவழைத்துக் கொள்ளலாம். இனி குருவால் உங்கள் ராசி அடையப் போகும் நிலையைப்பற்றி பார்க்கலாம்.

### குருவால் ஏற்படும் பலன்கள்

ஆடி 18 ஆம் திகதி (2.8.2016) அன்று உங்கள் வாழ்க்கைக்கு அஸ்திவாரம் அமைத்துக்கொடுக்கும் நாள். அன்றைய தினம் குரு உங்கள் ராசிக்கு பத்தில் வருகிறார். இது உங்களுக்கு முத்தான பலன் கிடைக்கும் பெயர்ச்சியாகும். முதல் நாளிலேயே அருகிலிருக்கும் புராதனக் கோவில், சிவாலயங்களுக்குச் சென்று தென்முகக் கடவுளை வழிபட்டு வாருங்கள்.

நவக்கிரகத்தில் உள்ள குருவையும் வழிபாடு செய்யுங்கள். நலம் தரும் தட்சிணா மூர்த்தியையும் வழிபடுங்கள். மஞ்சள் வண்ணத்தில் வஸ்திரம் அணிவித்து வழிபாடு செய்தால் மகத்தான வாழ்க்கை அமையும். முல்லைப் பூ மாலை அணிவித்தால் செல்லும்




இடங்களில் எல்லாம் செல்வாக்கு உயரும். சுண்டல் தானம் செய்தால் சுபிட்சங்கள் அதிகரிக்கும். சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியம் செய்தால் அக்கறை காட்டாத செயலில் கூட ஆதாயம் கிடைக்கும்.

10 இல் குரு சஞ்சரிக்கும் பொழுது, பதவி மாறும் என்பார்கள் ஒரு சிலர் பதவி பறிபோகும் என்பார்கள். ஒரு சிலர் பதவி இல்லாதவர்களுக்கு புதிய பதவி கிடைக்கும் என்பார்கள். ஆனால் நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். உங்கள் ராசிக்கு அதிபதியாகவும், 4 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் குரு 10 இல் சஞ்சரிக்கும் பொழுது தொழில் ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே மூடிக்கிடந்த தொழிலில் கூட முன்னேற்றம் கிடைக்கும். பணவரவை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு, தங்கு தடைகள் அகலும். தனவரவில் இருந்த சிக்கல்கள் தீரும். மங்கள நிகழ்ச்சிகள் மனையில் நடைபெற வழிபிறக்கும். மக்கள் செல்வங்களால் ஏற்பட்ட மனக்கிலேசம் மாறும். அருளாளர்களின் தொடர்பும் ஆன்மீகவாதிகளின் அரவணைப்பும் உங்களுக்கு பெருவாரியான நற்பலன்களை வழங்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்தபடி இலாகா மாற்றங்கள், ஊர்மாற்றங்கள் வந்து சேரும். தொழில் புரிபவர்களுக்கு கிளைத்தொழில்கள் தொடங்கும் யோகம் கூடிவரும். தொழில் நிலையங்களை இடம்மாற்றுவது அல்லது அதனுடைய அமைப்பை மாற்றுவது நல்லது. கணபதி ஹோமம், சுதர்சன ஹோமம் போன்றவற்றை இல்லத்திலும், தொழில் நிலையத்திலும் வைத்து செய்யலாம். ஆரோக்கியம் சீராகும். நல்ல காரியங்களை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள். பயணங்கள் அதிகரித்தாலும் அதன் மூலம் பலன் கிடைக்கும்.

### குரு பார்வை கொடுக்கும் பலன்கள்

நவக்கிரகங்களில் சுப கிரகம் என்று வர்ணிக்கப்படுபவர் குருபகவான். அவரது பார்வைதான் விருப்பங்களை நிறைவேற்றும் பார்வை. நற்பலன்களை பலமடங்கு தரும் குருவின் பார்வை, உங்கள் ராசிக்கு 2,4,6 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. வாக்கு, தனம், குடும்பம், சுகம், வாகனம், தாய், மதிப்பு, மரியாதை, வியாதி, கடன், உத்தியோகம், தொழில் ஆகிய அனைத்து வழிகளிலும் நீங்கள் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைத்து, உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தப்போகிறது. நல்வாக்கு சொல்பவர்களின் ஆலோசனை உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடும். முல்லைப் பூ சூடும் குருவால் முன்னேற்றப் பாதையில் இருந்த முட்டுக்கட்டைகள் விலகும். பிறர் மெச்சும் விதத்தில் முன்னேற்றம் வரப்போகிறது.


உத்தியோக மாற்றம் உறுதியாகும். உடலில் ஏற்பட்ட வியாதி அகலும். மங்கல நிகழ்ச்சி இல்லத்தில் நடைபெறும். அத்தனைக்கும் மேலாக இந்த குருப்பெயர்ச்சி, ஆற்றலைப் பளிச்சிட வைத்து அதிகாரத்துவ யோகத்தை கொடுக்கப்போகிறது.

இரண்டாம் இடத்தைப் பார்க்கும் குருவால் இல்லத்தில் நல்லது நடக்கும். இடம், சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும். நான்காம் இடத்தைக் குரு பார்த்தால் தாயின் ஆதரவு கிடைக்கும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். புகழ், கீர்த்தி அதிகரிக்கும். புனிதப் பயணங்கள் வந்து சேரும். ஆறாமிடத்தைக் குரு பார்ப்பதால் பகைமாறி பாசம் கூடும். எதிரிகள் விலகுவர். நோய் பாதிப்புகளும் அகலும். கடன்சுமை குறைய புதிய வழி பிறக்கும். உடன் இருப்பவர்களால் ஏற்பட்ட உபத்திரவங்கள் மாறும். கொடுத்த கடன்கள் வசூலாகும்.

குரு,பகவான் சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (2.8.2016 முதல் 19.9.2016 வரை) அரசியல் வானில் கொடிகட்டிப் பறக்கும் யோகம் ஒரு சிலருக்கு வந்து சேரும். தந்தை வழி ஒத்துழைப்பும், தனலாபமும் வந்து சேரும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பங்காளிப் பகை மாறும். நினைத்த காரியங்களை உடனடியாகச் செய்து முடிக்க நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய வாகனங்களை வாங்கி மகிழ்வீர்கள்.

குருபகவான், சந்திரன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (20.9.2016 முதல் 24.11.2016 வரை) எதிலும் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. மாற்றுக் கருத்துடையோர் எண்ணிக்கை உயரும். கூட்டாளிகள் விலகுவர். பிள்ளைகளால் பிரச்சினைகளும், தொல்லைகளும் அதிகரிக்கும். எதிரிகளின் பலம் மேலோங்கி இருக்கும். இந்த நேரத்தில் திசாபுத்திக்கேற்ப தெய்வப்பிரார்த்தனைகளை தேர்ந்தெடுத்துச் செய்வது நல்லது.

குருபகவான், செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (25.11.2016 முதல் 21.2.2017 வரை மற்றும் 2.6.2017 முதல் 1.9.2017 வரை) விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றச் சிந்தனை மேலோங்கும். அலைச்சலுக்கு ஏற்ற ஆதாயம் கிடைக்காது. சகோதர விரோதங்கள் வளரும்.



அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!

இந்த முறை குருபகவான் வக்ரம் பெறுவதோடு, அதிசாரமும் பெற்று துலாம் ராசியில் சஞ்சரிக்கிறார். குரு அதிசாரம் பெறும்பொழுது உங்கள் ராசிக்கு 3,5,7 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே இந்த காலத்தில் நன்மைகள் நடைபெறும். பிரச்சினைகள் ஓயும். பிள்ளைகளால் நன்மை கிட்டும். வக்ர கதியில் குரு இயங்கும் பொழுது, ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் பதற்றம் கூடும். பங்குதாரர்கள் விலகுவர். பாகப்பிரிவினைகள் இழுபறி நிலையில் இருக்கும். உத்தியோகம், தொழில், அரசியல், பொதுநலம் அனைத்திலும் உள்ள பொறுப்புகள் திடீரென மாறும். விரயங்கள் கூடும். வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும் நடைபெறும். இந்த காலத்தில் நினைத்தது நிறைவேற, சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

### செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!

வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருவை வழிபாடு செய்யுங்கள். நாக சாந்திப் பரிகாரம் செய்வது ஏற்ற இறக்கமில்லாத வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.


**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

### மங்கையருக்கான மகத்தான பலன்கள்!

தனுசு ராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சியில் வழிபாட்டின் மூலமே வளர்ச்சி காண முடியும். குடும்பச்சுமை கூடும். ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். உடல்நலத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள். கணவன்-மனைவிக்குள் அன்பும், பாசமும் பெருகும். குழந்தைகளால் பிரச்சினைகள் அடிக்கடி உருவாகலாம். பெற்ற குழந்தைகளை பின்னணியாக இருந்து கவனித்துக் கொள்வது நல்லது. பண வரவு திருப்திகரமாக இருக்கும். தாய் வழியில் வரவேண்டிய வரவுகளும் வந்து சேரும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். பிரதோச வழிபாடு பெருமை சேர்க்கும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

(நாளை மகரம்)

# வரதராஜப்பெருமாளுக்கு இன்று கொடியேற்றம்



"இந்திரன் வணங்கிட இருப்பது பொன்னாலயம் எனும் பதியதே" என்று இந்திரனால் வணங்கப் பெற்ற கீர்த்திமிக்க தலமாக ஈழ மணித்திருநாட்டின் வடபாலமைந்த பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம் விளங்குவதாகத் தட்சிணகைலாய மான்மியம் கூறுகின்றது.

காத்தற் கடவுளாம் கண்ணபிரான், பொன்னாலையிலே வரதராஜப்பெருமாளாக, துன்னாலையிலே வல்லிபுர ஆழ்வாராக, வண்ணார்பண்ணையிலே வெங்கடேஸ்வரப் பெருமாளாக, யாழ்ப்பாணக் குடாநாட்டை மும்முனைகளிலும் கோயில்கொண்டு எழுந்தருளிக் காத்து நிற்கின்றார்.

இவற்றுள் பொன்னாலையாக அவதரித்தஎம்பெருமாளுக்கு ஆவணி ரோகிணி அட்டமித்திதியன்று இரதோற்சவம் அமைகின்ற வகையில் கொடியேற்றம் இன்று.

அன்றொருநாள் அட்டமி மற்றும் நவமி ஆகிய திதிகள் தம்மை எல்லோரும் வெறுப்பதாகப் பெருமாளிடம் முறையிட்டனர். அவர்களுக்கு இரங்கிய பரந்தாமன் "எனது இராம அவதாரம் நவமியிலும் (சித்திரைமாதம் புனர்பூச நட்சத்திரம்- இராமநவமி), கண்ணன் அவதாரம் அட்டமியிலும் (ஆவணி மாதம் ரோகிணி நட்சத்திரம்-கிருஸ்ணஜெயந்தி) நிகழும்" எனத் திருவாய் மலர்ந்தருளினார் என்று புராணக்கதைகள் வாயிலாக அறியப்படுகிறது.

அந்தவகையில், ஆவணி ரோகிணி அட்டமித்திதியன்று கண்ணன் பிறப்பாகிய கிருஷ்ண ஜெயந்தியும் உறியடி உற்சவமும் கீதையிலே கூறியபடி தீயவர்களை அழித்து நல்லவர்களைக் காப்பதற்காக எழுந்தருளும் இரதோற்சவமும் நிகழும்.

பாரதப்போரிலே பார்த்தனுக்கு 18 நாட்கள் தேரோட்டிய கண்ணனுக்கு 18 நாட்கள் திருவிழா எடுக்கப்பட்டு 18 ஆம் நாள் அருளலைக் குறிக்கும் தீர்த்தத் திருவிழா திருவடிநிலைத் தீர்த்தக்கரையிலே நிகழும். சீதையை மீட்பதற்காக இலங்கை வந்த இராமரின் திருவடி தீண்டப்பெற்றுப் புனிதமானதால் இக்கடற்கரை திருவடிநிலை என அழைக்கப்படுகிறது.

இந்த வகையிலே, அடியவர்களுக்கு வரங்களை வழங்குவதற்கென்றே எடுக்கப்படுகின்ற இம் மஹோற்சவகாலத்தில் கலந்து இறையருள் பெற்றவர் பலர். அவ் அடியவர் வரிசையில் நாமும் இணைந்து கொள்வோமாக.

### வரலட்சுமி நோன்பு

அதுமட்டுமல்லாது பெரும்பாலும் பெண்கள் தமது குடும்ப நன்மைக்காக மேற்கொள்ளும் வரலட்சுமி விரதம் இத்தலத்திலே மிகச்சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இம்முறை (12.08.2016) மகாலட்சுமிக்கே உரிய வெள்ளிக்கிழமையும் அனுச நட்சத்திரமும் கூடிய காலத்தில் வரலட்சுமி விரதம் அமையப்பெற்றது சிறப்பானதாகும்.

ஒருமுறை பார்வதி, "பெண்களுக்கு சகல சௌபாக்கியமும் தரவல்ல விரதம் யாது?" என சிவனாரிடம் வினவியபோதே, அவர் "வரலட்சுமி விரதமே" எனக் கூறியதாக அறிகிறோம்.

மேலும், விடர்ப்பதேசத்திலே வாழ்ந்த சாருமதி எனும் பக்தையின் கனவிலே ஆதிலட்சுமி தோன்றி இவ்விரதத்தினை மேற்கொள்ளுமாறு கூறியதாகவும் இம்மங்கை அயலவர்களுடன் இணைந்து இவ் விரதத்தினை மேற்கொண்டு விரத நூல்கட்டி பக்தியொடு வழிபட சாருமதி மட்டுமல்லாது விரதத்தில் பங்கேற்ற அயலவர் அனைவருக்குமே சௌபாக்கியங்கள் அனைத்தும் கிட்டியதாகவும் வரலாறு.

குறிப்பாக இவ்விரதத்தினை அனுஷ்டிப்பவர்களுக்கு எட்டு நன்மைகள் கிடைக்கப்பெறுவதாகக் கூறுவர். இதனையே அஷ்டலட்சுமி கடாட்சம் என அழைப்பர். அவையாவன மனோதிடம், செல்வம், குழந்தைச் செல்வம், கல்வி, நிலம்,தான்யம், அன்பு, மகிழ்ச்சி, புகழ் மற்றும் சாந்தி இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய அஷ்டலட்சுமி விரதம் வெகு சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் பெண்கள் அனைவரும் இவ் விரதத்தில் கலந்து மஹாலட்சுமியிடம் விரும்பிய வரங்களைப் பெற்று சகல சௌபாக்கியத்துடனும் வாழ்வார்களாக.

**Dr.S.கண்ணதாசன்**
**யாழ்.பல்கலைக்கழகம்**

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

## தெய்வீக இசையரங்கு

யாழ்.இளங்கலைஞர் மன்றத் தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப் பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாட்டு- கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன், உடன்பாடுபவர்-க.சித்திரா, வயலின்- கி.பத்மநாதன், மிருதங்கம்-சதாவேல் மாறன், ஆர்மோனியம்- ந.செல்வச்சந்திரன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (இ-3)

## தெய்வீகப்பேருரை

நல்லைக்கந்தன் மஹோற்சவ காலத்தில் யாழ். கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் பண்டிதர் பொன்.சுகந்தன் தலைமையில் தினமும் மாலை 6 மணியளவில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இதற்கமைய இன்று செவ்வாய் க்கிழமை ''இந்து மதம் காட்டும் ஆன்மீகம்'' எனும் தலைப்பில் மதுரகவி. காரை எம்.பி. அருளானந்தனின் சிறப்பு சொற்பொழிவு இடம் பெறும். (இ-7)


## தெய்வீக சொற்பொழிவு

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழாவை முன்னிட்டு உலக சைவ திருச்சபையும் யாழ்ப்பாணம் சொண்ட் நிறுவனமும் இணைந்து நடத்தும் ''தெய்வீகச் சொற்பொழிவு'' நிகழ்வுகளில் இன்று 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் சைவப்புலவர் பாலச்சந்திரனின் ''கந்தபுராண சிந்தனைகள்'' எனும் தலைப்பில் சொற்பொழிவு இடம் பெறும். (இ-3)

## தெய்வீக இசைச்சங்கமம்

மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனம் நல்லூர்க்கந்தனின் பெருந் திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீன மண்டபத்தில் இரவு 7 மணி முதல் 8 மணிவரை நடத்தி வரும் தெய்வீக இசைச்சங்கமத்தில் இன்று 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நுண் கலைமணி ஸ்ரீமதி கோகிலவாணி மயூரநாதசர்மா, சர்வாணி சரவண பவக்குருக்கள், சிவானுஜா சிவசுதசர்மா ஆகியோரின் குரலிசை இடம் பெறும். (இ-3)

## நல்லூரானுக்கு இன்று 2 ஆம் திருவிழா



## நல்லைக்கந்தன் சந்தவிருத்தம்

ஆதியே சோதியே யல்லலுறும் போதிலே
அரவணைத் தாளும்வடிவே
தாதுநீ போதுநீ மேதினி மீதிலே
தத்துவச் சித்தவிடிவே
காதுக் கிசைந்திடு மிசையோசை யசைவாகக்
கலந்திடு மின்பவேலே
நாதமொடு போதமொடு கீதமொடு வேதமுறை
நல்லூரின் கந்தவேளே!

*கலாபூஷணம், சந்தக்கவிஞர். நவ.பாலகோபால்*

## "தொண்டாக நீதி செய்"

மண்ணாசை பொன்னாசை
பெண்ணாசை புகழாசை
நண்ணாமல் காக்கும் முருகா
விண்ணாளும் தேவர்களும்
மண்ணாளும் அரசர்களும்
கண்ணார மகிழும் நல்லூரா
திண்டாடும் மனிதகுலம்
துண்டாடும் நிலைகண்டு
தொண்டாக நீதிசெய் முருகா!



*-கே.எஸ்.சிவஞானராஜா*

## கொடியேறிவிட்டான் வடிவேலன்

வள்ளி மணவாளன் வருந்துயர் தீர்ப்பவன்
புள்ளி மயிலேறி புயலாக வந்திடுவான்
எள்ளி நகையாடுபவன் ஏழையின் துயரை
அள்ளி அணைத்திடுவான் அன்பர்களை
பள்ளியறையினில் பரம அருள் தந்திடுவான்
துள்ளி வந்திடுவான் பக்தர் துயர்துடைக்க
வெள்ளி மலைபதவேலோடு காட்சி தருவான்
வள்ளி மணாளனை வாயற வாழ்திடுவோம்

*-க.தர்ஷ்சினி*
*பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்*

## வரம் அருள்வாய்



சரவணபவ வள்ளலே
சண்முகத் தெய்வமணியே
நல்லூரின் நாயகனே
நம்பிக்கையின் பேரொளியே
வள்ளி தெய்வானையுடன்
வரமருளும் எம் தமிழ் தெய்வமே
ஒற்றுமையின்றி உருக்குலையும் எம் தமிழினத்தை
தத்தெடுத்து காத்திடுவாய் தங்கத்தமிழ் முருகா

*-பிளவத்தை, பட்டங்கட்டி*

## ஒன்றுகூட வைத்தவன் நீ!

அலங்கார கந்தனுக்கு ஆண்டுக்கு ஓர் திருவிழாவாம்
எம் இன மக்களுக்கு பெருவிழாவாம்
தைபிறந்தாள் வழி பிறக்கும் என்பது மரபு
நல்லூரில் கொடி ஏறினால் புதுஒளி பிறக்கும் எமக்கெல்லாம்
ஆட்சிகள் மாற்றுபவனாம் நீ அரசாங்கம் அமைப்பதும் நீ
தேர்தல் காலங்களில் சிங்கள மந்திரியும் உன்னை
காண தவமிருப்பார்
ஓயாத குண்டுகளால் ஊரைவிட்டு போன எம் உறவுகளை
உறவாட வைப்பதும் நீயல்லவா
எம் இனம் கண்எதிரே காணும் இறுதி
நம்பிக்கையும் நீதான்.

*-விழி-கொக்குவில்*

## நல்லருள் புரிவாய்!



பாடிய நாவும் நல்லூரான்
திருநாமங்களைப் பக்தியுடன்!
நாடிய கால்களும் நல்லூரான்
திருக்கோவிலைப் பக்தியுடன் !
தேடிய விழிகளும் நல்லூரான்
திருவுருவத்தைப் பக்தியுடன்!
வாடி வதங்கலாமோ துயரங்களால்
நல்லருள் புரிவாய் நல்லூரா!

*-இராம ஜெயபாலன்*

# அணுவிஞ்ஞானிக்கு மரண தண்டனை நிறைவேற்றியது ஈரான்

அமெரிக்காவுக்கு முக்கிய தகவல்களை கொடுத்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட அணு விஞ்ஞானிக்கு தான் மரண தண்டனையை நிறைவேற்றியிருப்பதாக ஈரான் உறுதிப்படுத்தியுள்ளது.

ஏழு ஆண்டுகளுக்கு முன், மெக்காவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த ஷாஹ்ராம் அமிரி திடீரென காணாமல்போனார்.

மீண்டும் அமெரிக்காவில் அவர் இருப்பது தெரிய வந்தபோது சி.ஐ.ஏ அதிகாரிகளால் தான் கடத்தப்பட்டதாகவும்ஆனால், அங்கிருந்து தான் தப்பி வந்ததாக அவர் கூறினார்.

பின், ஈரானுக்கு திரும்பிய போது, நாயகனைப் போன்ற வரவேற்பை பெற்றிருந்தார்.

பின்னாளில், விசாரணைகளுக்கு அமிரி உட்படுத்தப்பட்டார்.

இதன்மூலம் உண்மை கண்டறியப்பட்டதாக ஈரான் கூறியுள்ளது.தன் சொந்த விருப்பத்தின் பேரிலே அமிரி அமெரிக்கா சென்றதாகவும், மேலும் பல பயனுள்ள தகவல் களை தெரிவித்ததாகவும் ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது. (இ-5)

# தொழிலதிபர் பலி!

(கோவை)

70 அடி உயரத்தில் பரசூட்டில் பறந்த தொழிலதிபர் ஒருவர் பரசூட்டின் பெல்ட் கொக்கிகழன்றதால் கீழே விழுந்து பரிதாபமாக இறந்தார். கோவை அரசு மருத்துவ கல்லூரியின் பொன்விழா ஆண்டையொட்டி 'இந்தியன் ஏரோஸ்போர்ட்ஸ் அண்டு சயின்ஸ்' என்ற அமைப்பின் சார்பில் பரசூட்டில் பறக்கும் 'பாரா செயிலிங்' என்ற வான் சாகச விளையாட்டு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. 5, 6 ஆம் திகதிகளில் கோவை அரசு மருத்துவ கல்லூரி மாணவர்கள் மட்டும் பரசூட்டில் பறந்தனர்.

இறுதி நாளான நேற்று முன்தினம் நடைபெற்ற சாகச நிகழ்ச்சியில் பொதுமக்களும் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.


இதற்கு நுழைவுக் கட்டணமாக ஒருவருக்கு ரூபா. 500 வசூலிக்கப்பட்டது. இந்த வான் சாகச நிகழ்ச்சி கோவை கொடிசியா மைதானத்தில் நேற்று முன்தினம். முற்பகல் 11 மணிக்கு தொடங்கியது.

சுமார் 20 மீற்றர் விட்டமுள்ள பரசூட்டுடன் இணைக்கப்பட்ட கயிற்றை ஒரு வானில் கட்டி விடுவார்கள். பரசூட்டின் 'பெல்ட்'டில் அதில் பறப்பவரை சேர்த்து கொக்கியை மாட்டுவார்கள். காற்று வீசும் திசைக்கு எதிர்த்திசையில் வானை செலுத்தும் போது அதனுடன் கட்டப்பட்டுள்ள பரசூட் மேலே எழும்பி பறக்கும். சுமார் 100 மீற்றர் தூரம் சென்றதும் வான் நிறுத்தப்பட்டு, கயிற்றை இழுத்து பரசூட்டை கீழே இறக்குவார்கள்.

இதில் கோவை பீளமேட்டை சேர்ந்த தொழிலதிபர் மல்லேசுவரராவ் (வயது 53) கலந்து கொண்டார். அவரை பரசூட்டோடு பெல்டில் இணைத்து பறக்க விட்டனர். அவர் சுமார் 10 நிமிடம் வானில் பறந்தார். மல்லேசுவரராவ் பரசூட்டில் பறந்ததை அவரது குடும்பத்தினரும், உறவினர்களும் படம் பிடித்தனர்.

அப்போது மல்லேசுவரராவ் திடீரென்று கூச்சல் போட்டார். கண்ணிமைக்கும் நேரத்தில் பரசூட்டில் இருந்து அவர் கீழே விழுந்து படுகாயம்அடைந்தார். உடனே அவரை அருகில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். ஆனால் சிறிது நேரத்திலேயே மல்லேசுவரராவ் பரிதாபமாக உயிரிழந்தார்.(இ-5)

# துருக்கியில் ஆட்சிக் கவிழ்ப்பு சதிமு
# லட்சக்கணக்கான மக்கள் திரண்டு ம






(இஸ்தான்புல்)

**துருக்கியில், ஆட்சி கவிழ்ப்பில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக, நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்தும் விதமாக மாபெரும் பேரணி இஸ்தான்புல் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கானோர் பங்கேற்றிருந்தனர்.**

துருக்கியில் கடந்த மாதம் 15 ஆம் திகதி இரவு இராணுவத்தின் ஒரு பிரிவினர் ஜனாதிபதி ஏர்துவானின் ஆட்சியை அகற்ற முயன்றனர். ஆனால் அந்த இராணுவ புரட்சியை ஏர்துவானின் ஆதரவாளர்கள் முறியடித்தனர்.

இதில் புரட்சிப்படையைச் சேர்ந்த 100 வீரர்களும் ஏர்துவானின் ஆதரவாளர்கள் 208 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில், ஆட்சி கவிழ்ப்பில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக, நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்தும் விதமாக மாபெரும் பேரணி இஸ்தான்புல் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த பேரணிமற்றும்பொதுக் கூட்டத்தில் லட்சக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இதில் ஆளும் கட்சி உ... பட பல்வேறு தரப்பின... சேர்ந்தவர்களும் கலந்... கொண்டனர். அனைவரு... துருக்கி நாட்டின் தேசி... கொடியினை ஏந்திய வ...

# வைத்தியசாலையில் குண்
# 25 பேர் உயிரிழப்பு,35 பே

(கராச்சி)

பாகிஸ்தானின் குவெட்டா நகரில் உள்ள வைத்தியசாலையில் சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் 25 பேர் பலியாகியுள்ளதுடன் 35 பேர் படுகாயமடைந்தனர்.



பாகிஸ்தானில் வன்முறைத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டுள்ள பலுசிஸ்தான் மாகாண தலைநகர் குவெட்டாவில் பார் அசோசியேசன் தலைவர் பிலால் அன்வர் காசி நேற்று மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். மன்னோ சாலையில் மங்கள் சவுக் அருகில் சென்ற போது அவரது காரை குறிவைத்து மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டதில் அவர் படுகாயம் அடைந்தார். உடனடியாக அவரை சக சட்டத்தரணி குவெட்டா அரசு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். ஆனால், அவர் சிறிது நேரத்தில் இறந்துவிட்டார்.

இதுபற்றி தகவல் அறிந்த ஏராளமான சட்டத்தரணிகளும் பத்திரிகையாளர்களும் வைத்திய சாலைக்கு அவசர சிகிச்சைப்பிரிவு பகுதியில் திரண்டனர். அப்போது, அங்கு சக்திவாய்ந்த குண்டு வெடித்தது.

இதில், சட்டத்தரணிகள் உள்ளிட்ட 25 பேர் பலியானதாகவும், 35 பேர் படுகாயம் அடைந்ததாகவும் ஜியோ நியூஸ் தெரிவித்துள்ளது.

இதனால் வைத்தியசாலை வளாகத்தில் பெரும் பதற்றம் நிலவியது. பொதுமக்கள் பீதியில் அங்குமிங்கும் சிதறி ஓட்டம் பிடித்தனர். இதையடுத்து அப்பகுதி முழுவதும் பொலிஸாரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு, அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. (இ-5)

# மேசிடோனியாவில் கடும் வெள்ளம்; 20 பேர் பலி, 100 பேருக்கு காயம்!

மேசிடோனியா நாட்டின் தலைநகர் ஸ்கோப்ஜே நகரில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளத்தில் சிக்கி குறைந்தது 20 பேர் வரை பலியாகியுள்ளனர்.



தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான மேசிடோனியா நாட்டின் தலைநகர் ஸ்கோப்ஜே. இங்கு கடந்த சில நாட்களாக பெய்த பலத்த மழையினால் அந்நகரில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

இதனால் அந்நகரை சுற்றியுள்ள வீதிகள் கடுமையாக சேதமடைந்துள்ளன. கார்கள் நீருக்குள் மூழ்கியுள்ளன. சில புறநகர் பகுதிகள் கடும் பாதிப்பில் உள்ளன. இந்த கடும் வெள்ளத்தில் சிக்கி குறைந்தது 20 பேர் வரை பலியாகியுள்ளனர். மேலும் 100 பேர் படுகாயம் அடைந்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. (இ-5)

# இந்தியா மீது அணுஆயுத போர்; பயங்கரவாதி கடும் மிரட்டல்

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பிரச்சினையில் இந்தியா மீது பாகிஸ்தான் அணுஆயுத போர் தொடுக்கும் என பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாதி சையது சலாஹுதீன் பகிரங்க மிரட்டல் விடுத்துள்ளான். இந்த மிரட்டல் வீடியோ தற்போது வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

வீடியோவில் பயங்கரவாதி கூறுகையில், காஷ்மீர் பிரச்சினையில் இந்த... முறை காஷ்மீரிகள் விட்டுக் கொடுக்க போவதில்லை. இந்தியா மீது அணுஆயுத போர் தொடுக்கப்படும். இந்திய மண்ணில் இரத்த ஆறு ஓடும். காஷ்மீர் பிரச்சினையில் நடக்கும் இந்த 4ஆவது உரிமைப் போரில் காஷ்மீரிகள் நிச்சயம் வெல்வார்கள் என பேசியுள்ளார். பயங்கரவாதியின் இந்த பகிரங்க மிரட்டல் பாகிஸ்தானில் பயங்கரவாத அமைப்புக்கள் சுதந்திரமாக உலா வருவதையும், பாகிஸ்தானின் கொடூர நிலைப்பாட்டை காட்டுவதாக உள்ளது என கூறப்படுகிறது.

இந்த மிரட்டல் வீடியோவின் எதிரொலியாக இந்தியாவில் ஜாகிர் நாயக்கின் இஸ்லாமிய ஆராய்ச்சி அமைப்பிற்கு தடை விதிக்க இந்திய அரசு முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. (இ-5)

# ...முயற்சிக்கு எதிராக ...டு மாபெரும் பேரணி



...ளும் கட்சி உட் ...ு தரப்பினரை ...களும் கலந்து ... அனைவரும் ...ட்டின் தேசிய ... ஏந்திய வணம் இஸ்தான்புல் நகரில் கூடினர். 15 ஆயிரத்துக்கும் அதி கமான பொலிஸார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட் டிருந்தனர்.

ஜனநாயகம் மற்றும் தியாகிகள் பேரணி என்று இது அழைக்கப்பட்டது.

இதில் மதத் தலைவர்கள் மற்றும் மூன்று எதிர்க்கட் சிகளை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். (இ-5)




...ரும் நவம்பர் மாதம் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற உள்ளது. அதில் குடியரசுக் கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்பும், ஜனநாயகக் கட்சி சார்பில் ஹிலாரி கிளிண்டனும் போட்டியிட உள்ளனர். ஜனாதிபதி ஒபாமா ஹிலாரி கிளிண்டனுக்கு தனது ஆதரவைத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அமெ.ஜனாதிபதி ஒபாமாவின் இறுதி விடுமுறை



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது பதவிக் காலத்தின் இறுதி கோடை விடுமுறையை கழிப்பதற்காக, தனது குடும்பத்துடன் மசாசுசெட்ஸ்ஸில் உள்ள மார்த்தா வின்யார்ட் தீவுக்கு சென்றுள்ளார்.

ஒபாமா, அவரது மனைவி மிசெல் ஒபாமா, மகள்களான மலியா மற்றும் சாஷாவும் நேற்று கடந்த சனிக்கிழமை வோஷிங்டனில் இருந்து புறப்பட்டனர். அவர்கள் ஓகஸ்ட் 6ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை தமது விடுமுறையைக் களிக்கவுள்ளனர்.

அமெரிக்காவில் எதிர்வ...

# ...ண்டுவெடிப்பு; ...பேர் படுகாயம்

...நும் பத்திரி ...லக்கு அவசர ...ரண்டனர். ...ந்த குண்டு

...ிட்ட 25 பேர் ...யம் அடைந் ...த்துள்ளது.

...வளாகத்தில் ...துமக்கள் பீதி ... பிடித்தனர். ...தும் பொலி ...டு வரப்பட்டு, ...ய்யப்பட்டுள் (இ-5)

# விஜய் மல்லையாவுக்குச் சொந்தமான ரூ.6ஆயிரம் கோடி சொத்துக்கள் முடக்கம்

விஜய் மல்லையா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு சொந்தமான 6 ஆயிரம்கோடி ரூபா சொத்துக்களை முடக்க அமுலாக்கப்பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

பல்வேறு வங்கிகளில் இருந்து ரூபா.9 ஆயிரம் கோடி அளவுக்கு கடன் பெற்று மோசடி செய்துள்ள பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையாவுக்கு எதிராக நாடு முழுவதும் பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பாக அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டு உள்ளன.

இந்த கடன் மோசடி தொடர்பாக சி.பி.ஐ. வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது. இதன் அடிப்படையில் அமுலாக்கப் பிரிவினரும் விசாரணை நடத்திவருகின்றனர். மேலும் மல்லையாவுக்கு எதிராக காசோலை மோசடி வழக்குகளும் நிலுவையில் உள்ளன.

ஐ.டி.பி.ஐ. வங்கியில் இருந்து ரூபா.9ஆயிரம் கோடி கடன் பெற்று மோசடி செய்தது தொடர்பாக விஜய் மல்லையாவுக்கு எதிராக நிதி மோசடி தடுப்புச்சட்டத்தின் கீழ் அமுலாக்கப்பிரிவினர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வழக்கில் நேரடியாக ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு அவருக்கு பல முறை சம்மன் அனுப்பப்பட்டது.

ஆனால் வழக்கு விசாரணைக்கு அவர் தொடர்ந்து ஆஜராகாமல் இருந்ததால் அவருக்கு சொந்தமான ரூபா.1411 கோர்டி மதிப்பிலான சொத்துக் களை கடந்த சில மாதங்களுக்கு முன் அமுலாக்கப் பிரிவு முடக்கியது. இந்த நிதி மோசடி வழக்கு விசாரணை மும்பையில் உள்ள சிறப்பு நீதிமன்றில் நடந்து வருகிறது.

இந்த வழக்கில் விசாரணைக்கு ஆஜராகு மாறு அவருக்கு மீண்டும் அனுப்பப்பட்ட சம்மனுக்கும் அவர் செவிசாய்க்கவில்லை. எனவே 2வது கட்டமாக அவரது சொத்துக்களை முடக்குவதற்கான நடவடிக்கைகளை அமுலாக்கப்பிரிவினர் தொடங்கியுள்ளனர். (இ-5)

# ...போர்; ...ட்டல்

...வஆயுத போர் ...து சலாலுதீன் ...து வெளியாகி

...னயில் இந்த ...ு அணுஆயுத ...ாஷ்மீர் பிரச்சி ...நிச்சயம் வெல் ...டல் பாகிஸ்தா ...ும், பாகிஸ்தா ...டுகிறது.

...கிர் நாயக்கின் ... அரசு முடிவு (இ-5)

# மெக்சிக்கோவில் பாரிய நிலச்சரிவு

## 15 சிறுவர்கள் உட்பட 38 பேர் பலி!











(புப்லே)

மெக்சிகோவில் உள்ள புப்லெ மாகாணத்தில் புயல் மற்றும் அதைத்தொடர்ந்து பெய்த கன மழை ஆகியவற்றால் பாரிய நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த நிலச்சரிவில் ஏராளமான வீடுகள் புதைந்தன.

இதையடுத்து மீட்புக் குழுவினர் உதவியுடன் அங்கிருந்தவர்கள் மீட்கப்பட்டனர். எனினும் இந்த நிலச்சரிவில் சிக்கி 28 பேர் உயிரிழந்தனர். இதில் 15 பேர் சிறுவர்கள் ஆவர். அதேபோல், கிழக்கு மாகாணமான வேர்கர்சில் இடம்பெற்ற நிலச்சரிவில் 10 பேர் பலியாகினர் எனவும் தெரியவந்தது. (இ-5)

# இலங்கைக் கடற்பரப்பில் இயற்கை எரிவாயு ஆய்வு

## 6 வெளிநாட்டு நிறுவனங்களுடன் பேச்சு

(கொழும்பு)

**இலங்கைக் கடற்பரப்பில் இயற்கை எரிவாயு அகழ்வுக்கான சாத்தியங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு, அடுத்த வாரம் அமைச்சரவையின் அனுமதி கோரப்படும் என்று இலங்கையின் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.**

மன்னார் கடற்பரப்பில், இரண்டு துண்டங்களில் எரிவாயு ஆய்வுக்காக அனைத்துலக அளவில் கேள்விப் பத்திரங்கள் கோரப்படவுள்ளன.

இது தொடர்பாக ஆறு அனைத்துலக நிறுவனங்களுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளதாக பெற்றோலிய வளங்கள் அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார். மலேசியாவின் பெற்றோனஸ், நெதர்லாந்தின் றோயல் டச் ஷெல், இந்தியாவின் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கூட்டுத்தாபனம், பிரான்சின் டோட்டல், அமெரிக்க பல்தேசிய நிறுவனமான எக்சோன் மொபில் கோர்ப், அமெரிக்காவின் ஹலிபோர்ட்டன் ஆகியநிறுவனங்களுடனேயே பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

வாய்ப்புகள் தொடர்பாக ஆராய்வதற்காக இந்திய நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழு அடுத்தவாரம் இலங்கை வரவுள்ளதாகவும், அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார். எரிவாயு அகழ்வைத் துரிதமாக மேற்கொள்வதற்காக, ஏற்கனவே உள்ள ஆய்வுத் தரவுகள் நிறுவனங்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

மன்னார் கடற்படுகையில், ஹைட்ரோகார்பன் படிமங்கள் தொடர்பான தரவுகளை ஏற்கனவே கெய்ன் இந்தியா நிறுவனம், 235 மில்லியன் டொலர் செலவில் திரட்டியுள்ளது. ஆர்வமுள்ள நிறுவனங்களுக்கு இந்த தரவுகளையும் கையளிக்கத் தயார் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மன்னார் கடற்படுகையின் ஒரு பகுதியில், 12 பில்லியன் டொலர் பெறுமதியான இயற்கை எரிவாயு படிமங்கள் இருப்பதாக கெய்ன் இந்தியா நிறுவனத்தின் ஆய்வுகளில் கண்டறியப்பட்டது. சி-1, சி-2 என்று பெயரிடப்பட்ட காவிரிப் படுகையிலுள்ள இரண்டு துண்டங்களை சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட நிறுவனம் ஒன்றுக்கு எரிவாயு ஆய்வுக்காக வழங்கப்படவுள்ளது. இந்த நிறுவனம் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி அளிக்கும், அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதேவேளை கிழக்கு கடற்பரப்பில் உள்ள ஜேஎஸ்-5 மற்றும் ஜேஎஸ்-6 ஆகிய இரண்டு துண்டங்களிலும், பிரெஞ்சு பல்தேசிய நிறுவனமான டோட்டலுடன், இணைந்து கூட்டு ஆய்வை மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஏற்கனவே உடன்பாடு செய்துள்ளது.

இங்கு ஆய்வுப் பணிகள் வரும் வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (இ-7-10)

# கிரிந்த துறைமுக அபிவிருத்தி ஆய்வு சீனாவிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் உள்ள கிரிந்த துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது குறித்த சாத்திய ஆய்வு மற்றும் விரிவான வடிவமைப்பை மேற்கொள்வது தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் வாய்ப்பு சீன நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கிரிந்தவில் உள்ள மீன்பிடித் துறைமுகத்தை, விரிவாக்குவது தொடர்பான சாத்திய ஆய்வை மேற்கொள்வதற்கு பல்வேறு நிறுவனங்களிடையே போட்டி காணப்பட்ட போதிலும், சீன நிறுவனமான, ஹே சுன் கோர்ப் நிறுவனம் அந்த வாய்ப்பைக் கைப்பற்றியுள்ளது.

இலங்கையின் கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சு இதற்கான வாய்ப்பை சீன நிறுவனத்துக்கு அளித்துள்ளது.

யால தேசிய பூங்காவின் வெளி எல்லையில் அமைந்துள்ள கிரிந்த துறைமுகம் அருகே, இலங்கை கடற்படைத் தளம் ஒன்றும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.(இ-7-10)

# 6000 இலங்கையர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்

## அமைச்சர் தலதா அதிர்ச்சி



கொரியாவில் மீன்பிடித் தொழிலுக்காக சென்ற 6000 இலங்கையர்கள் தொழில் செய்யும் இடங்களை விட்டு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் தலதா அத்துகோரள இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கொரியாவிற்கு மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்காக சென்ற 6000 இலங்கையர்கள் தாம் தொழில் செய்யும் இடங்களிலிருந்து தப்பிச் சென்று வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பிலும் இந்த நிலைமை பாதக விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

கொரியாவிற்கு வேலைவாய்ப்பு பெற்றுச் செல்லும் எவரும் வேறு தொழில்களில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அவ்வாறு தொழில் செய்யும் இடங்களிலிருந்து தப்பிச் சென்றவர்கள் குறித்து விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நிலைமையை கட்டுப்படுத்த புதிய திட்டமொன்று அமுல்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த ஆண்டு இஸ்ரேலுக்கு தொழில் வாய்ப்பு பெற்றுச் சென்றவர்களில் 13 பேர் பல்வேறு காரணங்களைக் காண்பித்து அரசியல் புகலிடம் கோரியுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் காரணத்தினால் இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்பிற்கான விசா வழங்குவது இடைநிறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து. அமைச்சர் தலதா அத்துகோரளவும் அதிகாரிகளும் விடுத்த கோரிக்கையை தொடர்ந்து மீளவும் விசா வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுச் சென்று அங்கு வேறு காரணங்களைக் காட்டி புகலிடம் கோருவோருக்கு புகலிடம் வழங்க வேண்டாம் என நாடுகளிடம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு கோரியுள்ளது.

சமாதானமும் நல்லிணக்கமும் ஏற்பட்டுள்ள நிலையில் இவ்வாறு கோரிக்கை விடுவது பொருத்தமற்றது என அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## என்ன பேசுவது என்று தெரியவில்லையா?

நன்கு பேசிக் கொள்கிறோம் என்கின்ற பெயரால் சுய புராணங்களை அவிழ்த்து விட்டு அறுத்துத் தள்ளிவிடக் கூடாது. எதிராளி நம் பேச்சை ஊக்குவிக்கிறார்களா? இல்லையா? என்பதை உணர்ந்தபடி தான் பேச வேண்டும். அவர்கள் மீது அக்கறை மிகுந்தவர்கள் நாம் என்றும், அவர்களைப் பற்றி நாம் நிறையத் தெரிந்து கொள்ள ஆர்வமாயிருக்கிறோம் என்கிற பாணியிலும் பேச்சு அமையலாம்.

அதேநேரத்தில் அவர்கள் முகத்தில் சலிப்போ, விரக்தியோ, கோபமோ, வார்த்தைகளில் சிக்கனமோ வெளிப்பட்டால் அதை அவர்கள் விரும்பவில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நம்மைத் தேடி நம் வீட்டுக்கு வருபவர்களிடம் நாம் நன்கு பேசிக் கொள்ள வேண்டும். வந்தவர்கள்ள உட்கார வைத்துவிட்டு மற்ற வேலைகளைக் கவனிப்பதோ, எதிரெதிரே ஐயனார் கோயில் சிலைகளைப் போல அமர்ந்து கொள்வதோ பண்பு ஆகாது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்த ஆள் நம்மைப் போட்டு ஏன் இப்படிக் குடைகிறார் என்றோ, ஏன் தொணதொணக்கிறார் என்றோ எண்ண இடம் தந்துவிடக் கூடாது. மித மிஞ்சிய உற்சாகத்துடன் பேசுபவர்களுக்கு இத்தகைய பழிச் சொல் தான் மிஞ்சும்.

நம் வீடு என்றில்லை. பொது இடங்களிலோ, பிறர் வீட்டிலோ சிலருக்கு என்ன பேசுவதென்றே தெரிவதில்லை.

நாம் யாரிடம் பேசுகிறோமோ அவர்களுக்கு ஏற்றாற்போல் நாம் பேச வேண்டும். இளைஞர்களோடு பேசும் போது இளமையாய், பெரியவர்களோடு பேசும் போது முதுமையாய், இன்னும் ஆட்களுக்கு, சூழ்நிலைக்குத் தகுந்தவாறு போல் பேச வேண்டும்.

எனக்குத் தெரிந்து ஒரு சம்பவம். ஒரு கல்லூரி மாணவி ரஜனிகாந்தின் உயிர் ரசிகை. அவர் வாழ்க்கை இலட்சியமே ரஜனிகாந்தை சந்தித்துப் பேசுவதுதான். அவர் தொல்லை தாங்காமல் அவரை ரஜனிகாந்திடம் அழைத்துப்போனார்கள். ரஜனியுடன் ஸ்ரூடியோவில் தன் பெற்றோர்களுடன் அவர் செலவளித்தது சுமார் ஒரு மணிநேரம். ஆனால், வேடிக்கை என்ன தெரியுமா? அந்தப் பெண் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. இப்போது மிகவும் வருத்தப்படுகிறார்.

இப்படித் தங்கள் அபிமானத்திற்கும் அன்பிற்கும் உரியவர்களிடம் கூட வாய்ப்பு அமைந்தும் பேசும் சந்தர்ப்பத்தை நழுவ விடுகிறவர்கள் பலர். கேட்டால் என்ன பேசுவது என்று தெரியவில்லை என்பார்கள்.

இது என்ன மடத்தனமான வாதம்? பேசுவதற்கான விடயம் இல்லை. உலகில் பேசுவதற்கு ஆயிரக்கணக்கான விடயங்கள் இருக்கின்றனவே!

**லேனா தமிழ்வாணன்**

# க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

வலம்புரி கல்விப்பிரிவு

## தமிழ் பகுதி-I

மூன்று மணித்தியாலம்

- பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. அரண்மனை உப்பரிகையில் சோழனும் அரசியும் அமர்ந்திருக்கின்றார்கள். இதில் "உப்பரிகை" என்பதன் பொருள்
 (1) மேல்மாடம் (2) அரியணை (3) அந்தப்புரம் (4) அரமியம்

02. "முகரும் எறும்புகளின் ஊர்வலம்"- இங்கு "முகர்தல்" என்பதன் ஒத்த பதம்
 (1) மணத்தல் (2) ஊருதல் (3) உண்ணுதல் (4) நகர்தல்

03. போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நிபுணராக வைத்தியர் அருளம்பலம் கடமையாற்றினார். இதில் நிபுணன் என்பதன் எதிர்ப்பாற் சொல்
 (1) நிபுணி (2) நிபுணிச்சி (3) நிபுணள் (4) நிபுணை

04. "தமக்கென வாழாது பிறர்க்குரியாளராய் வாழ்வது சிறந்த பண்பு" - இதில் "பிறர்" என்ற சொல்லின் எதிர்ப்பொருட் சொல்
 (1) அவர் (2) சமர் (3) தமர் (4) பகைவர்

05. "சந்தையில் பொருட்களை மலிவாக வாங்கினேன்".-இங்கு "மலிவு" என்பதன் எதிர்ப்பொருட்சொல்
 (1) ஒறுப்பு (2) விருப்பு (3) இலாபம் (4) குறைவு

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. ஒரு பொருளைப் பற்றிக் கேட்போர் மகிழுமாறு உயர்த்திக் கூறும் அணி.
 (1) தற்குறிப்பேற்றம் (2) சிலேடை (3) உருவகம் (4) உயர்வுநவிற்சி

07. வெண்மை. கருமை. செம்மை. பொன்மை. பசுமை என்பன
 (1) ஐங்கலை (2) ஐந்திணை (3) ஐவகை நிறங்கள் (4)ஐவகைபரிசங்கள்

08. ஒருவர் இறந்த பின்னர் அவரின் உறவுப் பெண்கள் அவரை நினைத்துப் புலம்புதல்
 (1) ஓத்திகை (2) ஒப்பாரி (3) ஓலக்கம் (4) ஒப்புரவு

09. பிரயாசப்படு. இடம். மான் என்ற சொற்களுக்கு நிகரான சொல்
 (1) உலை (2) உளை (3) உழை (4) அழை

10. பல வடிவங்களிலான அல்மிரா (Almirah) க்கள் சந்தையில் கிடைக்கின்றன. அல்மிரா (Almirah) என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான கலைச்சொல்
 (1) நிலைப்பேழை (2) நிலைக்கண்ணாடி (3) அலுமாரி (4)பீரோ

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

11. அலகு - அழகு என்ற சொற்கள் குறிக்கும் பொருள் முறையே.
 (1) கடல் - சிங்கம் (2) கூர்மை - சிறப்பு (3) கூர்மை - கடல் (4) சிறப்பு - சிங்கம்

12. அதி மிகுந்த அறிவுப் புலமையை வெளிப்படுத்தும் அருஞ்சொற்றொடர்
 (1) நுண்மாண் நுழைபுலம் (2) அண்ட சராசரம் அனைத்தும்
 (3) உணர்வொழி காலம் (4) சாதுரியமாகவும். மாதுரியமாகவும்

13. பின்வருவனவற்றுள் பிரான்சிய மொழிச் சொற்கள் கொண்ட தொகுதி
 (1) துக்கம். சீலம். பிக்கு (2) பென்சில். மைனர். சினிமா
 (3) பட்டாளம். துருப்பு. இலாந்தர் (4) முலாம். சுமார். சால்வை

14. சுருட்டு - கட்டு என்பது போல புத்தகம்
 (1) தொகுதி (2) குவியல் (3) கூட்டம் (4) அடுக்கு

15. அசூயை என்ற வடமொழிச் சொல்லின் தமிழ் வடிவம்
 (1) போட்டி (2)பொறாமை (3) மனக்குறை (4) செருக்கு

16. ஒருவன் தன் நிலையிலிருந்து தாழ்வானாயின் அற்பர்களும் அவமதிப்பர்; என்ற கருத்தைத் தரும் பழமொழி
 (1) உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை
 (2) கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?
 (3) சேற்றில் புதைந்த யானையை காகமும் கொத்தும்.
 (4) காகம் திட்டி மாடு சாகாது.

17. "இரக்கப் போனாலும் சிறக்கப் போ" என்ற பழமொழிக்குரிய பொருத்தமான கருத்து
 (1) வறுமையிலும் செம்மை (2) பணத்தின் வலிமை
 (3) கொடையின் சிறப்பு (4) தருமத்தின் உயர்வு

18. கணவனை இழந்த மனைவி கையறு நிலையை அடைந்தாள். இதில் கையறுதல் என்ற மரபுத் தொடரின் கருத்து
 (1) நட்டமடைதல் (2) வருந்துதல்
 (3) உதவியற்றிருத்தல் (4) திகைத்தல்

19. ஒத்தகருத்துள்ள சொற்களைக் கொண்ட இணைமொழி
 (1) சீரும் சிறப்பும் (2) ஆதிஅந்தம்
 (3) அல்லும் பகலும் (4) ஓட்டமும் நடையும்

20. "புறக்குடத்து வார்த்த நீர் போல" என்ற உவமைத் தொடருக்குப் பொருத்தமானது
 (1) காட்டில் எறித்த நிலாப்போல (2) காட்டாற்று வெள்ளம்போல
 (3) கல்மேல் எழுத்துப்போல (4) சிறகற்ற பறவைபோல

21. அழுத குழந்தையை தாய் அன்போடு அணைத்து எடுத்தாள். இதில் பெயரெச்சமாக அமைந்த சொல்
 (1) அன்போடு (2) எடுத்தாள் (3) அழுத (4) அணைத்து

22. வருபுகழ் என்பது
 (1) வினைத்தொகை (2) பண்புத்தொகை
 (3) உவமைத்தொகை (4) உம்மைத்தொகை

23. பாடியவனுக்கு பரிசில் கொடுத்தான். - இங்கு பாடியவனுக்கு என்பது
 (1) தொழிற்பெயர் (2) தன்மைப்பெயர்
 (3) ஆகுபெயர் (4) வினையாலணையும் பெயர்

24. பாலோடு தேனை சேர்த்தால் சுவை கூடும். - இவ்வாக்கியத்தின் எழுவாய்
 (1) பால் (2) தேன் (3) சுவை (4) பாலுந் தேனும்

25. "மக்காள் வாரீர்" - இது
 (1) எழுவாய் வேற்றுமை (2) விளி வேற்றுமை
 (3) உடனிகழ்ச்சி வேற்றுமை (4) நீங்கல் வேற்றுமை

26. நான் ஒரு பாடகன் - மிருதங்கமும் வாசிப்பேன் - இவ்விரு வாக்கியங்களையும் இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
 (1) ஏனெனில் (2) எனவே (3) ஆகவே (4) எனினும்

27. அனுமன் "இங்கேயும் நான் சீதையைக் காணாவிட்டால் இலங்கையை அழித்து நானும் இறப்பேன்". என திடசங்கற்பம் கொண்டான். - இதில் இடம்பெற்றுள்ள தலைமை வாக்கியம்
 (1) அனுமன் திடசங்கற்பம் கொண்டான்.
 (2) நான் சீதையைக் காணாவிட்டால் இலங்கையை அழிப்பேன்.
 (3) நானும் இறப்பேன்.
 (4) நான் சீதையைக் காணாவிட்டால்; இலங்கையை அழித்து நானும் இறப்பேன்.

28. பின்வருவனவற்றுள் கூட்டுப் பெயருக்கு உதாரணம்
 (1) தொழிலாளி (2) தோட்டக்காரன் (3) கட்டுரை (4) அறிவாளி

29. பின்வருவனவற்றில் இயல்பு புணர்ச்சியாக அமைவது
 (1) மாங்கனி (2) கோயிற்புறா
 (3) வானவில் (4) ஒழுக்கமுடைமை

30. வரமாட்டேன் என்பதை பகுபத உறுப்புக்களாகப் பிரித்தால்
 (1) வர + மாட்டேன் (2) வா + மாட்டு + ஏன்
 (3) வா + மாட்டேன் (4) வர + மாட்டு + ஏன்

- பின்வரும் பந்திகளை வாசித்து அவற்றின் மையக் கருத்துக்களைத் தெரிவு செய்க.

31. சிறுகதை என்பது இலக்கியத்தில் ஒரு பகுதி; இலக்கியத்தின் ஒரு வடிவம். இலக்கியம் என்பது ஒரு கலை. கலையைப் படைப்பது படைப்புத்திறன். படைப்புத்திறனை ஒருவன் இன்னொருவனுக்குக் கற்பிக்க முடியாது. ஒருவனிடமிருந்து இன்னொருவன் கற்றுக் கொள்ளவும் முடியாது. அப்படிக் கற்பிக்க முடியாமலும் கற்றுக்கொள்ள முடியாமலும் இருப்பதுதான் படைப்புத்திறன்.
 (1) சிறுகதை என்பது ஒரு இலக்கிய வடிவம்.
 (2) கலையைப் படைப்பது படைப்புத்திறன்.
 (3) படைப்புத்திறனைக் கற்றுக் கொள்ள முடியாது.
 (4) கற்பிக்க முடியாமலும் கற்றுக்கொள்ள முடியாமலும் இருப்பதுதான் படைப்புத்திறன்.

32. நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியாகச் சென்று புல்லுக்கும் பயன் கொடுக்கும். தொன்மையான இவ்வுலகில் நல்லார் ஒருவர் இருப்பாராயின் அவர் நிமித்தம் எல்லோருக்குமாக மழை பெய்யும்.
 (1) நல்லவர் ஒருவரால் எல்லோரும் பயன் பெறுவர்.
 (2) நெல்லுக்கு இறைக்கும் நீர் புல்லுக்கும் சேரும்.
 (3) மழை எல்லோருக்கும் கிடைக்கின்றது.
 (4) நல்லார் இருக்கும்போது நாட்டில் மழைபெய்யும்.

- பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

33. அவன் உறங்கிக் கொண்டிருந்த அம்பலத்துக்கு வந்த சிலர் "பெரும்பசி எங்களை வருத்துகின்றது"
 (1) என்றார். (2) என்றனர். (3) என்பர். (4) என்கின்றனர்.

34. நீ வகுப்பிற்கு ஒழுங்காக வந்து கற்றிருப்பாயானால்
 (1) பரீட்சையில் சித்தியடைந்திருப்பாய். (2) பரீட்சையில் சித்தியடைவாய்.
 (3) பரீட்சையில் சித்தியடைந்தாய். (4) பரீட்சையில் சித்தியடையலாம்.

35. மாணவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள்
 (1) தரமானவையாக இருந்தன. (2) தரமானதாக இருந்தது.
 (3) தரமானவையாக இருந்தது. (4) தரமானதாக இருந்தன.

- பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.

36. (1) பாரதியாரின் வாக்கிற்கிணங்க தமிழ் மொழி சிரப்புற்று வளர்ந்தது.
 (2) பாரதியாரின் வாக்கிற்கினங்க தமிழ் மொழி சிறப்புற்று வழர்ந்தது.
 (3) பாரதியாரின் வாக்கிற்கிணங்க தமிழ் மொழி சிறப்புற்று வளந்தது.
 (4) பாரதியாரின் வாக்கிற்கிணங்க தமிழ் மொழி சிறப்புற்று வளர்ந்தது.

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

37. பாராளுமன்றத்தில் அரசியல் அமைப்பின் பத்தொன்பதாவது ........................................... நிறைவேற்றப்பட்டது.
 (1) உடன்படிக்கை (2) சுற்றுநிருபம்
 (3) திருத்தச்சட்டம் (4) வேட்புமனு

38. பாடசாலைக்கு வருகை தந்த பணிப்பாளர் ........................................... புத்தகத்தில் நிறைகளை எழுதிச் சென்றார்.
 (1) பாடப்பதிவு (2) வரவு இடாப்பு
 (3) சம்பவத்திரட்டு (4) வர்த்தமானி

39. பாராளுமன்றத் தேர்தலில் ........................................... சுதந்திரமாகவும் தெளிவான மனநிலையுடனும் வாக்களித்தனர்.
 (1) வாக்காளர்கள் (2) வேட்பாளர்கள்
 (3) உறுப்பினர்கள் (4) கண்காணிப்பாளர்கள்

- கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40. (அ) தென்மோடி என்பது பாடலுடன் ஆடப்படுவது.
 (ஆ) இத்தென்மோடிக் கூத்து ஈழத்தில் மட்டக்களப்பில் மாத்திரமே தனக்கென சில அம்சங்களையுடையதாய் ஆடப்படுகின்றது.
 (இ) தமிழ்நாட்டிலே தெற்கத்திப்பாங்கு. வடக்கத்திப்பாங்கு என இரு கூத்து வடிவங்களுள.
 (ஈ) இதற்கென மக்கள் சூழ இருந்து பார்க்கும் வட்டமேடை அமைப்பு உண்டு.
 (உ) அதுபோல ஈழத்திலும் வடமோடி. தென்மோடி என இரு பிரிவுகளுண்டு.
 (1) இ. உ. அ. ஆ. ஈ (2) அ. இ. உ. ஈ. ஆ
 (3) அ. உ. ஈ. இ. ஆ (4) இ. ஆ. உ. ஈ. அ

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

01. சுருக்கமான விடை எழுதுக.
 (i) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
 "ஆவிபோ லாடையுமொன் றானதே"
 (ii) "இறை" என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.
 (iii) பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றுக.
 "அறுவத்தியோர் றாத்தல் இருக்குது கங்காணி"
 (iv) குயில்பாட்டு பாரதியாரால் பாடப்பட்டது. இவ்வாக்கியத்தை செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
 (v) பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளையிட்டு அதனை மீண்டும் எழுதுக. நாயக்கர் காலத்தில் பள்ளு உலா கலம்பகம் போன்ற நூல்கள் தோன்றின
 (vi) பொருளமைவுக்கேற்ப ஒழுங்குபடுத்தி எழுதுக.
 மாலையை/வீமனுடைய/குலத்தில்/அழிவில்லாத்/அணிந்த/மணம்/நான்/உதித்தவள்/வீசும்
 (vii) பின்வருவனவற்றுள் வினையெச்சத் தொடர்களை இனங்காண்க.
 சாலச்சிறந்தது. பாடிமகிழ்ந்தனர். படித்து முடித்தான். ஆடியமகன். ஓடுதல் நல்லது
 (viii) கா எல்லாம் உயர்ந்த தாழை: கரையெலாம் கமழுந் தாழை. இதில் வந்துள்ள "தாழை" என்ற சொல் விளக்கும் இருவேறு பொருளையும் தருக.
 (ix) தற்சார்புக் கட்டுரைக்கும். சுயசரிதைக்கும் இடையிலான ஒற்றுமை. வேற்றுமை யாது?
 (x) வில்லுப்பாட்டின் அமைப்பு ஒழுங்கின்றிக் காணப்படுகின்றது. அதனை ஒழுங்குபடுத்துக. கதை ஆரம்பம். முடிவு. சபை வணக்கம். மங்களம் பாடுதல். கதை வளர்ச்சி. கடவுள் வாழ்த்து

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(அ) இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு. பல மொழிகளைப் பேசும் மக்கள் இங்கு வாழ்கின்றனர். இவர்களிடையே வேறுபாடுகள் இருப்பினும் அனைவரும் ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனும் வாழ்ந்தாலே நாடு அபிவிருத்திப் பாதையில் முன்னேறிச் செல்ல முடியும் என்ற கருத்தினை வலியுறுத்தும் விளக்கக் கட்டுரை.

(ஆ) இன்று தொற்றுநோய்களை விட தொற்றா நோய்களால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாயுள்ளது. தொற்றா நோய்கள் ஏற்படாமல் தடுக்க ஒருவர் தனது உணவுப் பழக்கவழக்கங்கள். நாளாந்த செயற்பாடுகள் என்பவற்றைச் சீரமைத்துக் கொள்ளல் அவசியமாகும். தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் உங்கள் பிரதேசத்தின் இளைஞர் மன்றக் கூட்டத்தில் நீங்கள் நிகழ்த்தும் சொற்பொழிவு.

(இ) சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். குறிப்பாக அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள் தவிர்க்கப்பட வேண்டும். சிறந்த உடல். உள மனவெழுச்சியுடன் கூடிய சிறுவர்களே சிறந்த குணநலப் பண்புகள் மிக்க நாளைய சமுதாயத்தைக் கட்டியெழுப்பக்கூடியவர்கள் என்னும் தொனிப் பொருளில் நண்பர்கள் இருவரிடையே இடம்பெறும் உரையாடல்.

(ஈ) குடும்ப வறுமை போக்கி பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் கற்பகம் வெளிநாடு சென்றாள். தான் கஷ்டப்பட்டு உழைத்த ஒரு பகுதியை வீட்டுக்கு அனுப்பி வந்தாள். இரண்டு வருடங்களின் பின் தான் உழைத்த பணத்துடன் வீடு திரும்புகின்றாள். தன் குடும்ப நிலையைக் கண்டு திகைத்து நிற்கின்றாள்...... இதனைக் கருப்பொருளாகக் கொண்ட ஒரு சிறுகதை.

16 ஆம் பக்கம் பார்க்க...

## தமிழ் மொழியும் இலக்கியமும் தொடர்ச்சி..

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

அவரவர் கொள்கைக்கும் மனப்பக்குவத்துக்கும் ஏற்ப மக்கள் சமுதாயத்தோடு விதவிதமான இணக்கங்கள் கொள்கின்றனர். தன்னுடைய சுகவாழ்வில் கண்ணும் கருத்துமாய் இருப்பவனுக்கு உலகில் உள்ள நலமும் கேடும் தென்படுவதில்லை. தான் நாடுகின்ற இன்பம் ஒன்றிலேயே அவன் எண்ணம் வைத்தவனாய் இருக்கின்றான். அத்தகையவன் மக்களுள் கடைத்தரமானவன். அவன் விலங்குக்கு ஒப்பானவன். இனி. தரத்திலே அவனை விட மேலானவன் ஒருவன் இருக்கின்றான். உலகில் கேடுகள் பல இருக்கின்றன என்னும் உண்மையை அவன் அறிந்துகொள்கிறான். அக்கேடுகளிலிருந்து தான் தப்பிக்கொள்வதற்கு உலகை அவன் துறந்து விடுகின்றான். தனியாய் இருந்து கொண்டு தனக்குத் தோன்றும் அமைதியான நல்வாழ்வை வாழ அவன் முயலுகிறான். அத்தகையவனைத் துறவியென்று அழைப்பது உலக வழக்கு. ஆனால் துறவிகளுள் அவன் கடையன் ஆகின்றான். ஏனென்றால் கேட்டுக்கு அஞ்சி அவன் உலகினின்று விலகியவன் ஆகிறான். இவனிலும் மிக்கானாக மற்றொருவன் இருக்கின்றான். அவனைச் சமூகச் சீர்திருத்தக்காரன் என்று சொல்ல வேண்டும். சமூகத்திலுள்ள சீர்கேடுகளையெல்லாம் அவன் தெளிவுபட அறிந்து கொள்கின்றான். அவைகளை விலக்குவது தன் கடமையென்று அவன் உணருகின்றான். கேடுகளைப் பற்றி மற்றவர்களுக்கு எடுத்து அவன் புகட்டுகின்றான். கேடுகளை அகற்றுவதற்கான வேலைத்திட்டங்களை நிர்மாணிக்கின்றான். பலரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு சமூக சீர்திருத்தங்களை அவன் செய்ய ஆரம்பிக்கின்றான். தன்னையும் மறந்து மற்றவர்களுடைய நலத்திலேயே அவன் ஈடுபட்டிருப்பதால் அவனுடைய எண்ணத்தையும் செயலையும் சிறப்பித்துக் கூற நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

04. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.

அழகின் சிரிப்பு

சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்
திருவிளக்கில் சிரிக்கின்றாள்; நாரெடுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல் வளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள்; அடடே! செந்தோள்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
புது நடையில் பூரித்தாள்; விளைந்த நன்செய்
நிலத்தினிலே என் விழியை நிறுத்தினாள்; என்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்.

- பாரதிதாசன் -

(i) இப்பாடலில் கவிஞர் அழகை எவ்வாறு உருவகித்துக் காட்டியுள்ளார்?
(ii) "கலப்பையுடன் உழுவன் செல்லும் புது நடையில் பூரித்தாள்" என்பதன் மூலம் கவிஞர் உழவனைப் பற்றிச் சொல்ல விழைவது யாது?
(iii) கவிஞர் எங்கெல்லாம் அழகினைக் காண்கின்றார்?
(iv) "நாரெடுத்து நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வளைவில் நாடகத்தைச் செய்கின்றாள்" இப்பாடலடியின் கருத்தை உமது மொழி நடையில் எழுதுக.
(v) கவிஞரின் உணர்வு வெளிப்பாட்டை புலப்படுத்தி நிற்கும் பாடலடிகள் இரண்டினை எழுதுக.

05.
க.பொ.த (சா.தர)ப் பரீட்சையில் சித்தியடைந்து. தகவல் தொழில்நுட்பக் கல்வியைப். பெறவிரும்பும் நீங்கள் அத்தகைய கற்கைநெறியை வழங்கும் நிறுவனம் ஒன்றிற்கு நீங்கள் பயில விரும்பும் கற்கைநெறி தொடர்பான விபரம். பயில வேண்டிய காலம். கட்டண விபரங்கள் என்பவற்றை அறிந்து கொள்ளும் விதத்தில் அந்நிறுவனத்தின் முகாமையாளருக்கு எழுதும் 100 சொற்களில் அமைந்த கடிதம்.

அல்லது

புதிதாக பால்மா ஒன்றினை உற்பத்தி செய்த நிறுவனம் ஒன்று. தனது உற்பத்தியை அறிமுகஞ் செய்வதையும் விற்பனையை அதிகரிப்பதையும் நோக்காகக் கொண்டு வெளியிட உத்தேசித்துள்ள விளம்பரம் ஒன்றை 100 சொற்களில் அமையுமாறு எழுதுக.

கவனிக்க: பகுதி-III

* அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* 1.2.3.4 ஆகிய வினாக்களுக்கும் 5.6.7 ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

01. சுருக்கமான விடை எழுதுக.
(i) சொல்லுக சொல்லில் பயனுடைய; சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்.
இக்குறட்பாவைக் கொண்டுகூட்டி எழுதுக.
(ii) "தான் செய் குழியின் தனக்கே..." என்ற முதுமொழி வெண்பா பாடலில் இடம்பெற்றுள்ள பழமொழிகளை தருக.
(iii) (அ) பெருவுடையார் ஆலயம்
(ஆ) காங்கை கொண்ட சோழீசர் கற்கோயில் ஆகிய ஆலயங்களைக் கட்டியோரின் பெயர்களை முறையே தருக.
(iv) இராமச்சந்திர கவிராயர். பதுமனை நிந்திப்பதற்கான காரணம் யாது?
(v) "ஐயோ! இந்தக் குழந்தையின் மனதைக் கூட என்னால் திருப்தி செய்யக் கூடவில்லையே" என்று ஏங்கி நிற்பார்.
(அ) இங்கு ஏங்கி நிற்பவர் யார்?
(ஆ) ஏங்கி நிற்பதற்கான காரணம் யாது?
(vi) (அ) பரஸ்தானம்
(ஆ) க்ஷேமதண்டுலம்
ஆகிய சொற்களின் பொருளை எழுதுக.
(vii) "நீர் இப்படி வீண் பிடிவாதம் செய்வது உம்முடைய அகம்பாவத்தையே காட்டுகின்றது...." - இக்கூற்று
(அ) யாரால்
(ஆ) யாருக்கு கூறப்பட்டது.
(viii) தர்மலிங்கம் தன்னுடன் சைக்கிளில் வந்து கொண்டிருந்த விமலனுக்கு செய்த அறிவுரை கதாசிரியரால் எதற்கு ஒப்பிடப்படுகின்றது?
(ix) "சுருள் அளகக் காட்டை மிதிக்கும் கயற்கண்ணியோ சுரம் கால் வைப்பதே" -இவ்வடிகளில் இடம்பெற்ற அணிகளை இனங்கண்டு எழுதுக.
(x) "மங்கையர்கண் புனல்பொழிய..." என்ற பாடலில் நந்திவர்மனின் சிறப்புக்களாகக் குறிப்பிடப்படுபவை எவை?

02. பின்வரும் செய்யுட் பகுதிகள். உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

(அ) வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது - நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்கு விடும்.

(ஆ) ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தேன் - நாணிப்
பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேரு மென் நெஞ்சு!

(இ)
பாரதியாரின் கவிநயத்தை ஒரு சிறு வியாசத்தினுள்ளே விளக்கிக் காட்டுதல் இயலாது. இயற்கையிலுள்ள அழகையும். பசுமையையும். இனிமையையும் ஒருங்குதிரட்டிப் பாடலாக்கி நமக்கு அளித்திருக்கின்றார். முத்துச்சுடர் போன்ற வெண்ணிலாவும் பத்துப்பன்னிரண்டு தென்னை மரமும் கீற்றும் இளநீரும் காதில் விழுங்குயிலோசையும் பாட்டுக் கலந்திட ஒரு பத்தினிப் பெண்ணும் பராசக்தியின் காவலும் இருந்தால் இவ்வையகத்தையே தன்னுடைய பாட்டுத் திறமையாற் பாலித்திடக் கூடும் என்னும் பொருளை அமைத்துக் "காணி நிலம் வேண்டும்" என்றற்றொடக்கத்து ஒரு பாடல் எழுதியுள்ளார். "மனநிறைவு" என்னும் பொருள் பற்றிப் பிறமொழியாளரெழுதிய பாடலெதுவும் இதனுக்கிணையாகா.

(ஈ)
இத்தகைய செல்வம் நிறைந்த பேதையர் நிலத்துக்குச் சுமையாகவும் உலகத்திற்கு உற்ற வசையாகவும் அமைந்திருத்தலால். அன்னார் அழிந்து ஒழிவதே நாட்டுக்கு நன்மை பயப்பதாகும். அறிவுடைய செல்வரை உலகம் போற்றும். அறிவற்ற செல்வரை உலகம் தூற்றும். அறிவுடைய செல்வனது ஆக்கம் கண்டும் உலகம் களிக்கும். அறிவிலாச் செல்வனது அழிவைக் கண்டு உலகம் மகிழும். அறிவுடைய செல்வன் தன் பொருளைத் தக்கவாறு பயன்படுத்தி இம்மையிற் புகழும். மறுமையில் இன்பமும் எய்துவான். அறிவிலாச் செல்வன் பயன்பட வாழும் பண்பறியாப் பேதையனாய் இம்மையில் பழியும் மறுமையில் துன்பமும் எய்துவான்.

03. "கடற்புறம்" என்னும் கவிதையில்....
(அ) "ஆழ்கடலில் ஆடுகின்ற தோணியிலே
தாழும் பூ வாசம்
தரைக்காற்று சுமந்துவரும்"
என்ற வரிகள் மூலம் கவிஞர் கூற விழைவது என்ன?
(ஆ) இக்கவிதையில் வரும் குடும்பத்து வறுமைநிலை எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
(இ) இரவுப் பொழுதின் தன்மையும் பெண்ணின் மனநிலையும் இக்கவிதையில் எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளன?

அல்லது

"நளவெண்பா" என்னும் செய்யுட் பகுதியில்....
(அ) மின்னுந்தார் வீமன் தன்.....
கண்ணிமைத்தலாலடிகள்.....
என்ற பாடல்களில் தமயந்தியின் வேண்டுதலும். மதிநுட்பமும் சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.
(அ) விண்ணரசரெல்லாரும் வெள்கி.....
திண்டோள் வயவேந்தர்......
என்ற பாடல்களில் தமயந்தி நளனுக்கு மாலை சூட்டியதும் சுயம்வர மண்டபத்தில் இருந்தோரின் மனநிலை சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.

04. "கல்வியே அழியாச் செல்வம்" எனும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
(அ) கல்வியையும் ஏனைய செல்வத்தையும் உருவகித்துக்காட்ட ஆசிரியர் எவ்வெப் பொருள்களை குறிப்பிட்டுள்ளார்?
(ஆ) இன்று ஆண். பெண் இருபாலாரில் எத்தகையோரைக் காண்பது அரிதாகப் போய்விட்டது என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்?
(இ) மண்ணுலக வாழ்க்கை இனிது நடப்பதற்கு கட்டுரையாசிரியர் கூறும் விளக்கம் என்ன?

அல்லது

"நட்சத்திரக் குழந்தைகள்" என்ற சிறுகதையை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றிற்கு விடை தருக.
(அ) "நாம் சத்தியத்தையே பேசுவதால். நாம் ஒவ்வொரு தடவையும் ஒரு உண்மையைச் சொல்லும்போது ஒரு நட்சத்திரம் பிறக்கின்றது" இதனூடாக ஆசிரியர் உணர்த்த விரும்புவது யாது?
(ஆ) குழந்தை ரோகிணியின் குணப்பண்புகளை எழுதுக.
(இ) குழந்தை ரோகிணியின் மனதில் உண்டான துக்கத்துக்குக் காரணம் என்ன?

• 5, 6, 7 ஆம் வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.

05. தனிப்பாடல்களில் ஒன்றான "ஆழிவாய்ச் சத்தம் அடங்காதோ...." என்ற பாடலில் வரும் பெண்ணினதும் நந்திக் கலம்பகத்தில் உள்ள "மண்ணெல்லாம் உய்ய...." என்ற பாடலில் வரும் பெண்ணினதும் மனநிலைகள் சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.
06. "மங்கையர்க்கரசியின் காதல்" என்னும் சிறுகதையில்
(அ) கருணாகரனின் சிறப்பை விளக்கிக்காட்டும் மங்கையர்க்கரசியின் வாய்மொழியாக வரும் கூற்றுக்களைக் குறிப்பிடுக.
(ஆ) உயிரற்றுக் கிடந்த கருணாகரனின் உடல் மீது விழும் மங்கையர்க்கரசியின் தோற்றம். தவிப்பு என்பன எவ்வாறு விளக்கிக்காட்டப்பட்டுள்ளன.
07. "பார்வைகள் என்னும் சிறுகதை தனிமனித உள்ளக் கிடக்கைகளை வெளிக்காட்டி நிற்கின்றது." இக் கூற்றை விளக்குக.

◆ ◆ ◆

# க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

## தமிழ் பகுதி-I,II விடைகள்


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 1 | 11) | 2 | 21) | 3 | 31) | 4 |
| 02) | 1 | 12) | 1 | 22) | 1 | 32) | 1 |
| 03) | 4 | 13) | 3 | 23) | 4 | 33) | 2 |
| 04) | 3 | 14) | 4 | 24) | 3 | 34) | 1 |
| 05) | 1 | 15) | 2 | 25) | 2 | 35) | 1 |
| 06) | 4 | 16) | 3 | 26) | 4 | 36) | 4 |
| 07) | 3 | 17) | 1 | 27) | 1 | 37) | 3 |
| 08) | 2 | 18) | 2 | 28) | 3 | 38) | 3 |
| 09) | 3 | 19) | 1 | 29) | 4 | 39) | 1 |
| 10) | 1 | 20 | 1 | 30) | 2 | 40) | 1 |

01)
(i) ஆவி போல் ஆடையும் ஒன்று ஆனதே
(ii) பொருத்தமான வாக்கியங்கள் இறை - இறைவன்/அரசன் (பெயர்)
இறை - இறைத்தல் (வினை)
(iii) அறுபத்தொரு இறாத்தல் இருக்கின்றது காங்காணி.
(iv) பாரதியார் குயில் பாட்டைப் பாடினார்./குயில்பாட்டைப் பாரதியார் பாடினார்.
(v) நாயக்கர் காலத்தில் பள்ளு. உலா. கலம்பகம் போன்ற நூல்கள் தோன்றின.
(vi) நான் மணம் வீசும் மாலையை அணிந்த வீமனுடைய அழிவில்லாத குலத்தில் உதித்தவள்/ மணம் வீசும் மாலையை அணிந்த வீமனுடைய அழிவில்லாத குலத்தில் நான் உதித்தவள்.
(vii) பாடி மகிழ்ந்தனர். படித்து முடித்தான்.
(viii) தாழை - தென்னைமரம்
தாழை - தாழை மரம். தாழம் பூ
(ix) ஒற்றுமை - இரண்டும் சுயகூற்றாக அமையும்.
வேற்றுமை - இரண்டும் அமைப்பில் வேறுபடும். அதாவது தற்சார்புக் கட்டுரை சொந்த அனுபவங்கள். அபிப்பிராயங்கள். உணர்ச்சிகள் என்பவற்றை விளக்கியும் விமர்சித்தும் எழுதுவது. சுயசரிதை என்பது தமது சொந்த வாழ்க்கை வரலாற்றை அல்லது தன்னை ஒன்றாகப் பாவனை செய்து அதன் வாழ்க்கை வரலாற்றை எழுதுவது.
(x) • கடவுள் வாழ்த்து
• சபை வணக்கம்
• கதை ஆரம்பம்
• கதை வளர்ச்சி
• முடிவு
• மங்களம் பாடுதல்

மிகுதி வெள்ளிக்கிழமை வெளிவரும்...

# இலங்கைக்குப் போர் விமானங்களை விற்கும் திட்ட முனைப்பில் பாகிஸ்தான்

## இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி



(கொழும்பு)

இரண்டு நாள் பயணமாக பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி எயார் சீவ் மார்ஷல் சொஹைல் அமான் நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைந்துள்ள நிலையில், ஜேஎவ்-17 போர் விமானங்களை இலங்கைக்கு விற்கும் முயற்சிகளில் பாகிஸ்தான் மீண்டும் இறங்கலாம் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த பாகிஸ்தான் விமானப்படைத் தளபதியை, இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ககன் புலத்சிங்கள வரவேற்றார். பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி இலங்கையில் தங்கியிருக்கும் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்புச் செயலர், முப்படைகளின் தளபதிகள் உள்ளிட்டோரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவார்.

இந்த நிலையில், இலங்கை விமானப்படைக்கு ஜேஎவ்-17 போர் விமானங்களை விற்பனை செய்வதற்கான முயற்சிகளை பாகிஸ்தான் முன்னெடுக்கலாம் என்று இந்தியத் தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஜேஎவ்-17 போர் விமானங்களை பாகிஸ்தானிடம் வாங்கும் இலங்கையின் திட்டத்தை இந்தியா தலையிட்டு இடைநிறுத்தியிருந்தது.

பாகிஸ்தான் விமானப்படைத் தளபதியின் இலங்கை பயணம் தொடர்பாக கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், இந்தப் பயணம் தற்போதைய ஒத்துழைப்பு மற்றும் கூட்டு தொடர்பாக மீளாய்வு செய்வதற்கும்; இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை உயர்த்துவதற்கும் வாய்ப்பாக அமையும என்று கூறப்பட்டிருந்தது.

இங்கு ஒத்துழைப்பை" உயர்த்துவது" (Enhancement of cooperation) என்பது, பாகிஸ்தானிடம் இருந்து ஜேஎவ்-17 போர் விமானங்களை இலங்கை கொள்வனவு செய்வதையே அர்த்தப்படுத்துவதாக இருக்கக்கூடும் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானின் 400 மிலலியன் டொலர் நிதியில், சீன-பாகிஸ்தான் கூட்டுத் தயாரிப்பான, ஜேஎவ்-17 போர் விமானங்களை இலங்கைக்கு விற்பதற்கு, 2015 ஆம் ஆண்டு இறுதியிலும், 2016ஆம் ஆண்டு தொடக்கத்திலும் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், மூலோபாய அடிப்படையில் தனது செல்வாக்கிற்கு உட்பட்ட பகுதி என்பதால், இந்தியா இதற்குக் குறுக்கே நின்றதால், இந்த முயற்சி தோல்வியடைந்தது.

காஷ்மீரில் ஒரு மாதமாக நீடித்து வரும் வுன்முறைகளுக்கு பாகிஸ்தானே காரணம் என்று கருதும் இந்தியா, ஜேஎவ்-17 போர் விமானங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக இலங்கை-பாகிஸ்தான் இடையே உடன்பாடு புதுப்பிக்கப்பட்டால், இந்தியாவுக்கு கவலையை ஏற்படுத்தும் என்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் தெரிவித்துள்ளது. (இ-7-10)

# கப்பம் கோரி சகோதரியை கடத்திய சிறுவன் கைது!

(கொழும்பு)

சிறுவனொருவன், கப்பம் கோரி தனது சொந்த சகோதரியைக் கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம், கம்பஹாவில் இடம்பெற்றுள்ளது.

மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் முதல் பிள்ளையான குறித்த 17 வயதுடைய சிறுவன், தனது சகோதரியைக் கடத்திச் சென்று மாற்றுக் குரலில் தந்தையிடம் சுமார் 7 இலட்சம் ரூபாய் கப்பம் கோரியதாகக் கம்பஹா பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவனின் தாயார், மூன்று பிள்ளைகளையும் அவர்களின் தந்தையின் பராமரிப்பில் விட்டு, வேலை நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளதாகவும் கம்பஹா பொலிஸார் தெரிவித்தனர்.

தனது மூத்த மகன், இசைக் குழுவொன்றை அமைப்பதற்காக தன்னிடம் 5 இலட்சம் ரூபாய் கோரியிருந்ததாகவும் தனது 15 வயதுடைய மகள் திடீரெனக் காணாமல் போனதையடுத்து அயலவர்களுடன் இணைந்து மகளைத் தேடிய போது சந்தேகநபரும் இணைந்து தேடியதாகவும், எங்கு தேடியும் மகள் கிடைக்காமையால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாகவும் தந்தை தெரிவித்துள்ளார்.

தனது மகளை விடுவிக்க வேணடுமாயின் 7 இலட்சம் ரூபாய் கப்பம் வேண்டுமென அழைப்பொன்று வந்ததாகக் குறித்த முறைப்பாட்டில் தந்தை தெரிவித்திருந்தார்.

தந்தை வழங்கிய முறைப்பாட்டுக்கமைய பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்களுக்கான கம்பஹா பொலிஸ் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை இரவு 09 மணியளவில் காணாமற்போன மகள் வீடு திரும்பியுள்ளார். அறியப்படாத ஒரு பகுதியிலுள்ள வீடொன்றில் தான் கடத்தி வைக்கப்பட்டதாகவும் பின்னர் தன்னைக் கடத்திய இனந் தெரியாத நபர்கள், ஆட்டோ ஒன்றில், தனது வீடு அமைந்துள்ள சந்திப் பகுதியில் விட்டுச் சென்றதாகவும் தந்தையிடம் மகள் தெரிவித்துள்ளார்.

பின்னர் கம்பஹா பொலிஸார் நடத்திய தொடர் விசாரணைகளில் நடந்த விடயங்களை மகள் முழுமையாக விளக்கிக் கூறியுள்ளார்.

அதாவது, தனது சகோதரர், அவரது நண்பரின் வீட்டுக்கு தன்னை அழைத்துச் சென்றதாகவும் இசைக் குழுவை அமைப்பதற்கான பணத்தை தந்தையிடம் பெற சகோதரன் திட்டமிட்டிருந்ததாகவும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இதனையடுத்தே சந்தேகநபர், கம்பஹா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 804


Search for people, places and things Nagendram Home

உஷாந்தன் நெய்மார்

கடற்கரை சிரிக்கிறது...
காதலர்கள்
வருவார்கள் என்று


கல்லறை அழுகிறது
காதலன் மட்டுமே..
வருகிறான் என்று...

சிந்து




சிந்து

எனக்கு முன்னாடி கம்பிலோடு
ஏத்திட்டு போன லொறியில வெளிய
நீட்டிக்கிட்டு இருந்த கம்பியில ஒரு
சிவப்பு துணிய கட்டி விட்டுருந்தாங்க.
துணிய உருவி லொறிய நிப்பாட்டி
அண்ணே இந்தாங்க உங்க கர்சிப்பு
நல்லா காஞ்சுருச்சுனு குடுத்தேன்.
ஸ்பேனர கொண்டு அடிக்க வர்ராரு



ஒரு வேளை கிலீனரோட
கர்சிப்பா இருக்குமோ...

கருணாஸ்



சர்மி சர்மிளா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பாதயாத்திரையில் சிறுவன் ஜனகவிடமும் விசாரணை

கூட்டு எதிர்க்கட்சியின் பாதயாத்திரையில் இருந்த சிறுவன் குறித்து சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இதனடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் ஜனக பண்டார தென்னகோன் ஆகியோரிடம் குறித்த சிறுவன் தொடர்பில் பொலிஸார் வாக்கு மூலம் பதிவு செய்யவுள்ளனர்.

கடந்த மாதம் 28 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியினர் கண்டியிலிருந்து கொழும்பை நோக்கி பாதயாத்திரையில் ஈடுபட்டனர். தொடர்ந்தும் 5 நாட்கள் இடம்பெற்ற இந்தப் பாதயாத்திரையில் நிட்டம்புவ பகுதியில் வைத்து சிறுவன் ஒருவனை பாதயாத்திரையில் ஈடுபட வைத்தமை குறித்து சர்ச்சை ஏற்பட்டது.

குறித்த சிறுவன் தொடர்பில் தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இவ்வாறு சிறுவர்களை அரசியல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது குற்றமாகும் என சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. எனவே நாமல் ராஜபக்ஷ மற்றும் ஜனக பண்டார தென்னகோன் ஆகியோரிடம் சிறுவனை அடையாளம் காணும் பொருட்டு வாக்கு மூலம் பெற்றுக் கொள்ளவுள்ளது.

ஊடகங்களில் பயன்படுத்தப்பட்ட காணொலி ஆதாரங்களை கொண்டு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சிறுவனை அரசியல் நோக்கங்களுக்காக பாதயாத்திரையில் பயன்படுத்தியமை குறித்து விசாரணைகள் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# வாக்குவாதம் மோதலாக மாறியதில் ஒருவர் பலி!

இரு தரப்பினருக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியதில் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவில் இடம் பெற்றுள்ளது.

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பூஜாபிட்டிய பிரதேசத்தில் வசித்த எம்.ஜீ. பிரேமசந்திர என்ற 56 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி இவருக்கும் மற்றும் சிலருக்குமிடையே வாக்குவாதம் ஒன்று இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் குறித்த சும்பவத்தின் போது ஒருவரால் கீழே தள்ளி வீழ்த்தப்பட்டுள்ளார். இதையடுத்து கீழே வீழ்ந்தவர் எவ்வித பாதிப்புகளுமின்றி சாதாரண நிலையில் இருந்துள்ளார்.

இதையடுத்து சில நாட்களின் பின் அவர் சுகவீனமடைந்துள்ளார். சுகவீனமடைந்த குறித்த நபர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கடந்த சனிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளார். (இ-7-10)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 60 | 60-120 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 70 | 85 | 70 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 280 | 450 | 300 | 300 | 300 |
| தக்காளி | 50 | 100 | 50 | 60 | 70 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 90 | 80 | 100 |
| கோவா | 120 | 100 | 100 | 100 | 120 | 100 | 100 |
| கரட் | 150 | 200 | 120 | 200 | 140 | 160 | 150 |
| பூசணி | 80 | 60 | 60 | 60 | 60 | 80 | 60 |
| புடோல் | 50 | 40 | 30 | 60 | 60 | 60 | 70 |
| வாழைக்காய் | 100 | 150 | 100 | 60 | 100 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 70 | 60 | 60 | 90 | 80 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 65 | 85 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 100 | 180 | 120 | 120 | 150 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 | 50 | 50 | 80 | 60 |
| கருவேனைக் கிழங்கு | 100 | 150 | — | 140 | 120 | 160 | 120 |
| பயற்றங்காய் | 40 | 20 | 20 | 60 | 40 | 20 | 60 |
| லீக்ஸ் | 100 | 100 | 50 | 120 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 160 | 60 | 60 | 100 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 240 | 180 | 200 | 250 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 | 150 | 150 | 120 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 160 | 180 | 200 | 150 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | 50 | 80 | 80 | 60 | 70 |
| கீரை – 1 பிடி | 20 | 20 | 20 | 30 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 100 | 100 | 125 | 160 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-50 | 15-28 | 40 | 22 | 20-30 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | 200 | — | 160 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 140 | 140 | 100 | 120 | 150 |
| முள்ளங்கி | 30 | 50 | 20 | 80 | 50 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 10 | 30 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 30 | 30 | 50 | 50 | 60 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கடைசி நகரமான முல்லைத்தீவு வீழ்ந்தது 247



**ஆனையிறவு**

கிளிநொச்சியை தொடர்ந்து முல்லைத்தீவைக் கைப்பற்றும் முயற்சியில் இராணுவம் ஈடுபட்டது. அதன் ஒரு கட்டமாக முக்கிய நகரான ஆனையிறவு பகுதியை 9-1-2009 அன்று முற்றிலும் கைப்பற்றி விட்டதாக இராணுவம் அறிவித்தது.

நாட்டின் பிறபகுதிகளை யாழ்ப்பாணத்துடன் இணைக்கும் முக்கிய சாலை ஆனையிறவு வழியாகத் தான் செல்கிறது. எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நகரை இராணுவம் பிடித்து விட்டதால் முள்ளியான், செம்பியன்பற்று, சுண்டிகுளம், கட்டைக்காடு ஆகிய விடுதலைப் புலிகளின் முக்கிய தளங்களைப் பிடிக்க இறுதிக் கட்ட தாக்குதலுக்கு இராணுவம் தயாராகியது. இந்தத் தகவலை இராணுவ அமைச்சகம் 10.01.2009 அன்று தெரிவித்தது.

**பொன்சேகா போட்டி**

முல்லைத்தீவில் புலிகளுக்கு எதிரான தாக்குதலைத் தீவிரப்படுத்தி இருப்பது தொடர்பாக இராணுவத் தளபதி பொன்சேகா கொழும்பில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

10 ஆண்டுகளுக்கு மேலாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவின் நிலப்பரப்புக்களைத் தங்கள் வசம் வைத்திருந்த விடுதலைப்புலிகள் தற்போது முல்லைத்தீவின் குறுகிய பரப்புக்குள்தான் இருக்கிறார்கள். அங்கு ஆயிரம் விடுதலைப்புலிகள் மட்டுமே உள்ளனர்.

இவர்களால் முல்லைத்தீவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட 50 ஆயிரம் இராணுவ வீரர்களை எதிர்த்து போரிட முடியாது. எனவே விடுதலைப்புலிகளுக்கு எதிரான இறுதிக்கட்ட போர் விரைவில் முடிவுக்கு வரும். இவ்வாறு பொன்சேகா கூறினார்.


**முல்லைத்தீவு சுற்றி வளைப்பு**

கிளிநொச்சியையும் ஆனையிறவையும் இராணுவம் கைப் பற்றியதைத் தொடர்ந்து ஏறத்தாழ 400 சதுர கிலோமீற்றர் பரப்பளவே கொண்ட முல்லைத்தீவு மாவட்டம் மட்டுமே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. விடுதலைப்புலிகளுடன் 2 1/2 இலட்சம் அப்பாவி தமிழர்களும் அந்த பகுதியில் தஞ்சம் அடைந்தனர்.

கிளிநொச்சியை கைப்பற்றிய இராணுவம் முப்படைகளின் ஆதரவுடன் விடுதலைப்புலிகளின் கடைசி தளமான முல்லைத்தீவை நோக்கி முன்னேறியது. தர்மபுரம், இராமநாதபுரம், விசுவமடு உள்ளிட்ட 5 முனைகளில் முல்லைத்தீவை சுற்றி வளைத்து தீவிர தாக்குதலில் இராணுவத்தினர் ஈடுபட்டனர்.

**பொதுமக்களை வெளியேற்ற நடவடிக்கை**

விடுதலைப்புலிகள் சரியான பதிலடி கொடுத்து வந்தால் இராணுவத்தினர் தொடர்ந்து முன்னேறி செல்ல முடியாமல் தற்காப்பு தாக்குதலில் ஈடுபட்டனர். விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக பொதுமக்கள் அரண் போல் இருந்தால், ஆத்திரம் அடைந்த இராணுவம் முல்லைத்தீவில் உள்ள 2 1/2 இலட்சம் தமிழர்களையும் வெளியேற்ற நடவடிக்கை எடுத்தது.



முல்லைத்தீவு பகுதியிலே 21-01-2009அன்று தாழ்வாக பறந்த போர்விமானங்கள் இலட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை வீசியது. அதில் விடுதலைப்புலிகளின் பகுதியில் இருந்து தமிழர்கள் வெளியேற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

**இரகசிய இடம்**

இதற்கிடையில் முல்லைத்தீவில் தர்மபுரம் பகுதியில் செயற்பட்டு வந்த விடுதலைப்புலிகளின் முக்கிய கட்டளை மையம் ஒன்றை கைப்பற்றி விட்டதாக இராணுவச் செய்தித் தொடர்பாளர் உதய நாணயக்கார 22-01-2009 அன்று தெரிவித்தார்.

பூமிக்கு அடியில் 80 அடி நீளம் 40 அடி அகலத்தில் அமைக்கப்பட்டு இருந்த அந்த இரகசியத்தளம் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டு இருந்தது.

வன்னி யாழ்ப்பாண பகுதியில் உள்ள இராணுவ முகாம்கள் பற்றிய தகவல்கள் அனைத்தும் இடம்பெற்றுள்ள அந்த மையத்தை ஒட்டி பெரிய ஒடிட்டோரியமும் இருந்தது. விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இங்கு வந்து அடிக்கடி ஆலோசனை நடத்துவார் என்று தெரிய வந்துள்ளதாகவும் இராணுவத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

(தொடரும்)

# 2700 சமுர்த்தி முகாமையாளர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை

## அமைச்சர் எஸ்.பி. தகவல்



வாழ்வின் எழுச்சி திணைக்களத்திற்கு 2700 சமுர்த்தி முகாமையாளர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சமூக வலுவூட்டல்மற்றும்நலனோம்புகை அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை சேர்ந்த வாழ்வின் எழுச்சி திணைக்கள முகாமையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தரகளுடனான சந்திப்பு நேறறு முன்தினம் ஞாயிறறுக்கிழமை பிறபகல் மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு தாழங்குடா கல்வியியல் கல்லூரியின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர் மகிந்த செனவிரட்ன, மேலதிக செயலாளர் அநுர வீரதுங்க, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ். எம். சார்ள்ஸ், வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் மாவட்ட உதவி பணிப்பாளர் குணரட்னம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

வாழ்வின்எழுச்சிதிணைகளத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பிலும் ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் வகையிலும் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் ஊடாக பொதுமக்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகள், திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் வாழ்வின் எழுச்சி வங்கிகளை நவீனமயப்படுத்தி அதன் மூலம் மக்கள் நன்மையடையும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.


இங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், நலன் உதவிகள் வழங்குவதனால் மட்டும் வறுமையினை குறைத்து விட முடியாது. அவர்கள் நிரந்தர வருமானத்தினைப் பெற்றுக்கொள்ளும் வகையில மூலதன வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். அதற்காகவே சமுர்த்தி உதவியில் சிறு தொகையினை சேமிப்பாக மாற்றப்படுகின்றது.

கடந்த காலத்தில் சமுர்த்தி திட்டம் தோல்வி அடைந்ததற்கு அதிகாரிகள் காரணம் அல்ல.பசில் ராஜபக்ஷவே அதற்கு காரணம். அவரே இதற்கு பொறுப்புகூற வேண்டியவர்.

வாழ்வின்எழுச்சிதிணைக்களத்தினை வினைத்திறன் மிக்கதாக மாற்றத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் கீழ் வாழ்வின் எழுச்சி திணைக்களம் மற்றும் வாழ்வின் எழுச்சி வங்கிகள் நவீனமயப்படுத்தப்படவுள்ளன.

சமுர்த்தி முகாமையாளர்கள் 2700 பேருக்கான வெற்றிடங்கள் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றும் 2100 பேருக்கு முகாமையாளர்களாக பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது.

அதேபோன்று 600 உதவிப் பணிப்பாளர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியும் கிடைத்துள்ளது. சமுர்த்தி முகாமையாளர்களாக கடமையாற்றுவோருக்கே இந்த பதவியுயர்வுகள் வழங்கப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7-10)







கரணவாய் கிராய் இந்து மயானத்தில் அமரர் திருமதி இரத்தினம் கமலாதேவியின் நினைவு நுழைவுவாயில் திறப்பு விழா கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அமரரின் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்துவதையும் நுழைவாயிலையும் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:கரணவாய் செய்தியாளர்)


இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 5 1/2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/4620 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 67 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/126 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 39 செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BSc ITலண்டன் NOT PR<br>தொ.இ: B/4635 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 47செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/152 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 80 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/இத்தாலி PR<br>தொ.இ: B/4638 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 77 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/174 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 21செவ் 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்.<br>இ: B/4643 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 82 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:HNDE<br>தொ.இ: G/217 |

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005,021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# பாதயாத்திரையில் பங்கேற்றோரின் கைகளில் மதுபானப் போத்தல்கள்!

## சந்திரிகா கடும் விசனம்



(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியினால் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட பாதயாத்திரையில் கலந்து கொண்டவர்களின் கைகளில் மதுபான போத்தல்கள் காணப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த பாதயாத்திரையில் கேகாலைப் பிரதேசத்தில் 1500 பேர் மாத்திரமே கலந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.


மேலும் இதில் மில்லியன் கணக்கானவர்கள் கலந்து கொண்டதாக கூட்டு எதிர்க்கட்சியின் பலரும் வாய்க்கு வந்த எண்ணிக்கையினை தெரிவிப்பதாகவும், ஆனால் உண்மையில் இரண்டாயிரம் பேரே கலந்து கொண்டதாகவும் சந்திரிகா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சப்புகஸ்கந்த பிரதேசத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் இருந்து பேருந்துக்கள் மூலம் ஆட்கள் கொண்டு வந்து லிப்டன் சுற்று வட்டத்தில் இறக்கப்பட்டதாகவும் அவர்கள் கையில் மதுபானப் போத்தல்கள் காணப்பட்டதோடு இவர்கள் தள்ளாடியவாறே பேருந்துக்களில் ஏறியதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இவ்வாறான பாதயாத்திரைகளுக்கு தாம் பயப்பட போவதில்லை என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமது கையில் உள்ளதாகவும் குறித்த திருடர்களால் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# உப்பின் அளவைக் காட்ட புதிய சட்டம்



குளிர்பானங்களில் அடங்கியுள்ள சீனியின் அளவைக் குறித்துக் காட்டும் சமிக்ஞைக் குறியீடுகளைப் போன்று, சந்தையில் விற்பனைக்குள்ள உணவுப் பொருட்களின் உப்பின் அளவையும் குறித்துக் காட்டக் கூடிய முறையொன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் மஹிபால ஹேரத்தெரிவித்தார்.

இதேவேளை, குளிர்பானங்களில் அடங்கியுள்ள சீனியின் அளவைக் குறித்துக் காட்டும் லேபல்களை ஒட்டத் தவறிவர்களுக்கு எதிராக, எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்த அவர், அது தொடர்பான சுற்றிவளைப்புத் தேடுதல்களை, எதிர்வரும் இரு வாரங்களில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7-10)

# தமிழரின் தன்னலமற்ற போராட்டம் வெறும் பேச்சுப்பொருளாக மாறும்

(நேற்றைய தொடர்ச்சி)

TheFinancial Times பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரையோ புதிய தாராள கொள்கையை வலியுறுத்தி அனைத்துலக நாணய நிதியத்தினால் வழங்கப்பட்ட நிதி, வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளிடையே அதிகரித்த சமூக ஏற்றத்தாழ்வை உருவாக்கி உள்ளதாக அனைத்துலக நாணய நிதியத்தின் பொருளியல் விமர்சகர்கள் மத்தியில் கருத்துருவாகி இருப்பதாக கூறுகிறது. எது எவ்வாறு இருப்பினும், இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் பொதுவாக ஏதோ ஒரு நலனை அடிப்படையாக கொண்டே கடன் வழங்கி உள்ளன. தமது நலன்களை பேணும் பொருட்டே இராஜதந்திர மரியாதைகளைப் பகிர்ந்து கொள்வது வழக்கம்.

இதிலே சீனா செய்த உதவிகள் ஒப்பீட்டளவில் மிகப்பாரியது என இந்திய ஆய்வாளர்களே தெரிவித்துள்ளனர். 2014ஆம் ஆண்டு வரையில் இலங்கைக்கான சீன நேரடி முதலீடு 405 மில்லியன் அமெரிக்க டொலரை தாண்டி விட்டது. அதேகாலப்பகுதியில் இலங்கைக்கான இந்திய உதவி 4.3 மில்லியன் அமெரிக்க டொலரை மாத்திரமே எட்டி இருந்தது என்பது அவர்கள் கணிப்பாகும். இதற்கும் மேலாக எட்டு பில்லியன் டொலர் மென்கடன்கள் பீஜிங்கினால் கொடுக்கப்பட்டுள்ளது என்பது இந்திய ஆய்வாளர்களின் பார்வையில் உள்ளது.

சீன வெளியுறவு அமைச்சர் வாங் ஜி அண்மையில் சமுத்திர வழி பட்டுப்பாதை திட்டத்தின் கீழ் இலங்கையை கடற்போக்குவரத்து சுழற்சி மையமாக மாற்றுவதற்கு ஏற்றவகையில் சீன திட்டங்கள் வகுக்கப்படும் என்ற உத்தரவாதம் வழங்கினார். இது இந்திய, மேலைநாட்டு கூட்டு கொள்கையான புதிய தாராள கொள்கையை பின்பற்றும் நாடுகளின் வரிசையிலிருந்து இலங்கை நழுவுவதான பார்வை ஒன்று உள்ளது.

அனைத்துலக உறவிலே பேரம் பேசும் இராஜதந்திரம் இன்றுவரை மிக முக்கிய நிலையில் உள்ளது. போர்த்துக்கேயர் காலத்திலிருந்தே மேலை நாட்டவருடன் பேரம் பேசும் இராஜதந்திரத்திலே பரிச்சயமான இலங்கை பேரம் பேசும் இராஜதந்திரத்திலே ஒருவருடைய பலம் என்ன, பலவீனம் என்ன என்று நன்கு அறிந்து நிலைமையை கையாளும் தன்மையை கொண்டது. இலங்கை அதிகாரிகள் மேலைத்தேய பலத்தை மென்மையான இராஜதந்திரத்தால் முறியடிக்கும் பாங்கு இன்று வரை மேலை நாடுகளால் உணர்ந்து கொள்ளப்பட்டாலும் அவர்களுடைய அனைத்துலக இராஜதந்திர ஒழுங்கற்ற முறைகளாலேயே வரையறுக்கப்படும் நிலையில் இருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். இன்று பெரிய நாடுகளின் கூட்டத்தில் பங்குபற்றி பெற்றுக் கொண்ட கடன் உத்தரவாதங்களை தொடர்ந்து, சீன வெளியுறவு அமைச்சர் வாங் ஜி கொழும்பு வந்து கப்பல் தள சுழற்சி மையமாக்கும் உத்தரவாதம் அளித்திருந்தார். அதனைத் தொடர்ந்து அமெரிக்காவின் மனித உரிமைகள் மற்றும் தொழில் விவகார இராஜாங்க பதில் அதிகாரி ரொம் மலினோவ்ஸ்கி கொழும்பு வந்தார்.




வல்லரசுகள் தமது நலன்களைப் பேணுவதில் இங்கே பொருளாதாரம், மனித உரிமை இவை இரண்டையும் ஆயுதமாக பயன்படுத்த முற்படுகின்றன. மேலைத்தேயம் மனித உரிமையையும் சீனா பொருளாதார உதவிகளையும் முதன்மையாக வைத்து பேரம் பேசுகின்றது. இவை இரண்டையும் சமாளித்து இலங்கை அரசைத் தக்கவைத்தல், இராஜதந்திர நகர்வை உருவாக்குதல் என்ற மட்டத்திலான பேரம் பேசல்களே இலங்கை அமைச்சர்களுக்கும் அனைத்துலக பிரதிநிதிகளுக்குமிடையில் இடம் பெறுகிறது.

வல்லரசுகளைச் சமாளிப்பதும் பேரம் பேசல்களும் உருவாக்கக்கூடிய பலாபலன்கள் பல்வேறு விளைவுகளை உருவாக்கவல்லது என்பதை இந்த கட்டுரை எடுத்துக் காட்ட முற்படுகிறது. ஆனால் முன்பு போல் வருடத்திற்கு ஒரு முறையோ அல்லது ஆறுமாத காலத்திற்கு ஒரு முறையோ என்று அல்லாது, இன்று தொடர்ச்சியான மிகவும் இறுக்கமான நேர இடைவெளிகளில் அதிகாரிகளின் பயணங்களும் அமைச்சர்களின் பயணங்களும் கொழும்பு நோக்கி இடம்பெற்ற வண்ணம் உள்ளன. இலங்கையின் ஆழமான உறவு யாருடன் என்பதற்கு அப்பால் சீன கடல் வழிப் பட்டுப்பாதையின் உறுதித் தன்மையும் அதனை முடக்கும் வழிவகைகளுக்கும் இடையில் பூகோள வர்த்தக ஆதிக்கத்தின் மையப்பகுதி யார் கையில் என்ற போட்டியில் இரு பகுதிக்குமான போர்க்களமாக இலங்கை மாறி விடுமோ என்ற கேள்வியும் உள்ளது. (தொடரும்..)

# தமிழ் சினிமா வரலாறு

## இளம் நடிகர்கள் வருகை பற்றி சிவாஜி 227

*1950-1970இல் பிரபலமாக இருந்த எம்.ஆர்.ராதா, எம்.ஜி.ஆர்.,பாலையா, சந்திரபாபு, வி.கே.ஆர். நம்பியார், முத்துராமன்,ஜெமினி கணேசன்,மனோகர் ,தங்கவேலு, நாகேஷ் என்று நடிகர்கள் பலரைச் சொல்லலாம்.*

*நாகேஷ்வரராவ், என்.டி. ராமாராவ், பிரேம்நசீர் போன்றவர்களுடன் நடித்திருக்கிறேன்.*

*நடிகைகளை நினைவு கூர்ந்தால் பானுமதி, அஞ்சலிதேவி, சாவித்திரி, பத்மினி, சவுக்கார் ஜானகி, தேவிகா, மனோரமா, எம்.என். ராஜம், கே.ஆர்.விஜயா, மஞ்சுளா, சுஜாதா, லட்சுமி என்று பலரைக் குறிப்பிடலாம். இவர்களோடு நடித்த படங்கள் சிலவற்றை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன்.*

*1970-1990இல் புகழடைந்து வந்த அடுத்த தலைமுறையில் சிவகுமார், கமலஹாசன், ரஜினிகாந்த், விஜயகாந்த், சத்தியராஜ், விஜயகுமார், கார்த்திக் ,பிரபு, மகேந்திரன், அர்ஜுன், சரத்குமார் போன்ற நடிகர்களையும் ஸ்ரீபிரியா, ராதிகா, ரேவதி, ராதா ,நதியா போன்ற நடிகைகளையும் சொல்லலாம். இவர்களில் பலர் என்னுடன் நடித்திருக்கிறார்கள்.*

**வளர்ச்சி**

*அடுத்தபடியாக திரைப்படத்துறையில் 1990இற்கு மேல் ஒரு புதிய தலைமுறை உருவாகி இருக்கிறது.*

*இதில் தான் விஜய், அஜித், பிரசாந் போன்றவர்கள் வந்திருக்கிறார்கள். புதிதாக பல நடிகர், நடிகைகள் வந்து கொண்டிருக்கிறார்கள். இது திரைப்படத்துறையின் வளர்ச்சியைக் காட்டுகிறது. என்னைப் பொறுத்தவரையில் எல்லா நடிகர்களும் நடிகைகளும் அவரவர் பாத்திரத்தைச் சிறப்பாக செய்து மக்களின் பாராட்டைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்வேன். நடிகன் என்று சொல்லி விட்டாலே அவர்களுக்கு கலை வெறி வந்து விடும்.*

*தான் எடுத்துக் கொண்ட பாத்திரத்தை திறமையாக நடிக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்குரிய ஸ்பெஷல் ஸ்டைலில் நடிப்பார்கள். சிலர் போட்டி போட்டுக்கொண்டு நடிக்கிறார்கள். நடிப்பில் போட்டி இருக்கலாம். ஆனால் நடிகர்களுக்கிடையே போட்டி இருக்கக்கூடாது.*

*பொதுவாக என்னோடு நடித்த எல்லா நடிகர்களும் நடிகைகளும் என்னிடம் அன்பும் மரியாதையும் காட்டி வருகிறார்கள். சிலர் என்னை அன்போடு அப்பா என்றும் அழைக்கிறார்கள்.*



*நான் நடிகர்,நடிகைகள் என்று குறிப்பிடும்போது எத்தனையோ படங்களில் மிகச்சிறிய பாத்திரங்களில் என்னோடு நடித்த ஜூனியர் ஆர்டிஸ்ட்டுகளையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். படத்தின் டைட்டிலில் பெயர் வராமல் படத்தில் நடித்திருக்கும் நடிகர்களும் நடிகைகளும் ஏராளம். அவர்கள் எல்லோருமே கலைஞர்கள் தான். அவர்கள் அனைவருமே ஒரு படத்தின் வெற்றிக்கு தங்கள் பங்கைச் செய்கிறார்கள்.*

*ஒரு திரைப்படத்தை வெற்றிகரமாக வெளியிட தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், கதையாசிரியர்கள், இசையமைப்பாளர்கள், நடிகர்கள், நடிகைகள் தவிர எண்ணற்ற டெக்னிஷியன்களும் பாடுபடுகிறார்கள். அவர்களும் கலைஞர்கள் தான். ஏன் டப்பிங் வோய்ஸ் தருகின்ற நூற்றுக்கணக்கான கலைஞர்களும் கலைத்துறைக்கு தொண்டாற்றுகின்றவர்கள் தான்.*

*இந்தக் கலைஞர்கள் எல்லோரும் பெரும் புகழும் பெற்று நல்ல குடும்ப வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வீட்டிற்கும், நாட்டிற்கும் நல்லவர்களாக நீண்டகாலம் வாழ வேண்டுமென்று நான் இறைவனை வேண்டிக்கொள்கிறேன்.*

*இவ்வாறு சிவாஜிகணேசன் குறிப்பிட்டுள்ளார்.*

*நடிப்பு என் மூச்சு; நடிப்பு என் உயிர்; நடிப்பு ஒன்று தான் எனக்குத் தெரிந்த தொழில் என்று சிவாஜி கணேசன் கூறினார்.*

*சிவாஜிகணேசன் காலமாவதற்கு சில காலத்திற்கு முன், தன் வாழ்க்கை வரலாற்று நூலுக்காக குடும்ப நண்பர் வைத்தியர் டி. எஸ்.நாராயண சுவாமி கேட்ட கேள்விக்குப் பதிலளித்தார்.*

*(தொடரும்..)*

நான் பேச நினைப்தெல்லாம் நீபேச வேண்டும்
நாளோடும் பொழுதோடும்; உறவாட வேண்டும்
- கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நல்லூர் முருகா! யார் அவர்கள் ஏன் உன்னிடம் வருகின்றார்கள்?

நல்லூர்க் கந்தனுக்கு அன்பு வணக்கம்.

நேற்றும் காகிதம் எழுதினேன். இன்றும் இம்முடங்கலை எழுதுவதற்குக் குறைவிளங்க வேண்டாம்.

உன்னைத் தவிர வேறு யாருக்குத்தான் நான் காகிதம் எழுத முடியும். எல்லாக் குறையும் உன்னிடமே உரைப்பவன் என்பதால், இக்கடிதம் எழுதுவதில் குறையில்லை.

நேற்று உன் கொடியேற்றம் கண்டேன். மிகச் சிறப்பாய் அமைந்திருந்தது. அடியார் கூட்டம் முன்னரிலும் அதிகம்.

சரி பகல் 10 மணிக்கு கொடியேறியது. அந்த அற்புதத்தைக் கண்குளிரக் காண்பதற்கு அளித்த கருணைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மாலை விழாவிலும் வணங்கும் பேறு பெற்றேன். ஈசானத்தில் திருவாசகம் ஓதும் ஒரு புதுமை கண்டேன். கல் மனதையும் உருக வைத்த அந்தத் திருவாசகத்தால் என் நெஞ்சு நெக்குருகிக் கொண்டது.

இப்படியே வெளிவீதி முழுவதிலும் புதுமைகள் செய்தால் அடியார் கூட்டம் பிறவார்த்தை பேசுவதற்கு ஏது இடம் என்று நினைத்தேன்.

காலக்கிரமத்தில் மாப்பாணருக்கு நீ கட்டளை இடுவாய் என்று என் உள்ளம் உணர்கிறது.

வெளிவீதியில் பறக்கின்ற சேவல் கொடிகள் அற்புதம். அட! எதையோ எழுதுவதற்கு வந்து ஏதோ எழுதுகின்றேன். நல்லூர்க் குமரா! இக்கடிதம் எழுதுவதன் அவசரம் ஒரு செய்தியைச் சொல்வதற்குத்தான்.

உன் கொடியேற்றத் திருவிழாவில் ஏகப்பட்ட வெளிநாட்டவர்களைக் கண்டேன். அதிலும் வெள்ளைக்காரர்கள் ஏராளம். தங்கள் குழந்தைகளையும் அவர்கள் உன்னிடம் கூட்டிவந்திருந்தனர்.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எம் உறவுகளை நான் குறிப்பிடவில்லை.

இவர்கள் வெளிநாட்டவர்கள். எனக்கு ஏற்பட்ட ஐயம் என்னவெனில் இவர்கள் ஏன்தான் உன்னிடம் வருகின்றனர் என்பதுதான். அவர்களின் சமயம் வேறு; நாடு வேறு; மொழி வேறு. யாழ்ப்பாணத்தைப் பார்ப்பதற்கு வந்தவர்கள் என்றால் உன் கோயிலுக்குள் வரவேண்டிய தேவையென்ன? அதிலும் வெள்ளைக்கார ஆண்கள் மேலாடைகளைந்து உன்னிடம் வருகின்றனர். தீபம் காட்டும் போது கையெடுத்துக் கும்பிடுகின்றனர்.

அவர்கள் உன் திருவிழாவை ஒரு காட்சியாகப் பார்க்கவில்லை. தெய்வீகத்தோடு தரிசிப்பது அவர்கள் முகங்களில் தெரிகிறது.

எங்கோ இருப்பவர்கள் உன்னைத் தேடி, நாடி உன்னுடன் மிக நீண்ட நேரத்தைச் செலவிட்டு வணங்குவது ஏன்? இதெல்லாம் எப்படி நடக்கிறது? முருகா சொல்!

சிலவேளை முன்னம் உன்னுடைய திருக்கோவிலை சேதம் செய்த குடியேற்றவாதிகளின் மறுபிறப்போ இவர்கள். இங்கு வந்து உன்னிடம் பிறவாமைப் பேறு வேண்டுகின்றனரோ?

அல்லது உனக்குக் கோவில் எடுத்து வழிபட மாப்பாணருக்கு அனுமதி வழங்கிய வெள்ளைகார பிரபுகளின் மறுபிறப்புச் சந்ததியோ? ஏதோ ஒரு தொடர்பு உண்டு. இல்லாமல் அவர்கள் உன் திருமுகத்தையே பார்த்தபடி; தம் புகைப்படத்தில் பதிவு செய்தபடி நிற்கத் தேவையில்லை.

எதுவாகவிருந்தாலும் உனக்கு வெளிநாட்டுத் தொடர்பு அதிகமாயிற்று. அந்த இறுமாப்பில் எமை மறந்து விடாதே!

நீ ஏசினாலும் அடித்தாலும் உதைத்தாலும் வதைத்தாலும் நல்லூர் முருகா! என்று உன் நாமம் சொல்வதைத் தவிர வேறு வழி தெரியாதவர்கள் நாம்.

ஆதலால் எங்களை மறந்து விடாதே. இதைச் சொல்லவே இக்கடிதம் அவசரமாய் எழுதினோம். ஏற்றிடுக.

## வித்தியாவின் தாய்க்கு அச்சுறுத்தல்; சந்தேகநபருக்கு மீளவும் மறியல்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியாவின் தாயாரை அச்சுறுத்தியதாக சந்தேகத்தின் பேரில் கைதான பெண்ணை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் எம். எல்.றியால் உத்தரவிட்டுள்ளார். மேற்குறித்த வழக்கு நேற்று திங்கட்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த மாணவியின் தாயாரை அச்சுறுத்திய இரு பெண்களில் ஒருவரான சிவதேவன் செல்வராணி என்பவருக்கே இவ்வாறு விளக்கமறியல் நீதிவானினால் நீடிக்கப்பட்டுள்ளது. மற்றைய பெண்ணான மகாலிங்கம் தவநிதி கடந்த சில தினங்களுக்கு முன்னர் சிறைச்சாலை அனுமதியுடன யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. இவர் இவ்வழக்கில் பிரதானமாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மகாலிங்கம் சசிகுமாரன் (சுவிஸ்குமார்) தாயார் ஆவார்.

இதேவேளைநேற்றைய விசாரணைக்கு மாணவிவித்தியாவின் தாயார் வருகை தரவில்லை. இந்நிலையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பாக சட்டத்தரணி இ.சபேசன்விளக்க விண்ணப்பம் ஒன்றினை மன்றிற்கு சமர்ப்பித்தார்.

இவ்விண்ணப்பம் எதிர்வரும் ஓகஸ்ட் 22 திகதி விளக்கத்திற்கு எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் மேற்படி வழக்கும் எதிர்வரும் ஓகஸ்ட் 22 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. (செ-4)

## இராணுவ முகாமில் சிப்பாய் உயிரிழப்பு

(கொழும்பு)

திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டைபறிச்சான் இராணுவ முகாமில் கடமை புரிந்து வந்த இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

42 வயதான பிட்ட தெனிய கமகே காமினி பிரேமரத்ன என அடையாளம் காணப்பட்ட இவர், மாரடைப்புக் காரணமாகவே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் இரத்தினபுரி, குருவிட்ட பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7-10)

## நல்லூர்க்கந்தனுக்கு




### நடந்து போவோம்

இராகம்: பைரவி தாளம்:ரூபகம்

**பல்லவி**

நல்லைப் பதிக்கு நேராய்
நடந்து போவோம் நாமெல்லாம் வாரீர் சீராய்

**அனுபல்லவி**

அல்லற்றுயர் தருமூழ் மெல்ல
அகன்று போம் நீ வா (நல்லை)
கல்லொத்திடு மனங்கணத்தில்
கரைந்து போம் விரைந்து வா
நில்லன்பொடு நினைந்து நினைந்து
நீ நான் அறநின்று மகிழ்ந்து (நல்லை)

**சரணம்**

செல்லப் பனைத்தினம் சேவிக்கும் நற்றவன்
செல்வச் சிவயோக நாதனுக் குற்றவன்
தில்லையம்பலம்சே விக்கும்பொற் பாதன்
தித்தித் தகுதகு கிடதோம்

தளங்கு தரிகிட கிடதோம்
தித்தித்தா திமிதிமி யென
நிர்த்தஞ் செய் மயி லேறிய
சத்திதான் தரு மைந்தன் வாழ் (நல்லை)

சிவத்திரு யோகர்சுவாமிகள்

## காஷ்மீரில் ஒரு மாதகாலமாக நீடிக்கும் வன்முறையால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிப்பு

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் ஒரு மாத காலமாக நீடித்து வரும் வன்முறை சம்பவங்களால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது.

காஷ்மீரில் பயங்கரவாத தளபதி பர்கான் வானி சுட்டுக்கொல்லப்பட்டதால் கடந்த மாதம் 9 ஆம் திகதி முதல் அங்கு வன்முறை சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபடுவதும் அவரகளை கலைக்க பொலிஸார் துப்பாக்கிசூடு நடத்துவதும் அடிக்கடி நடைபெறுகிறது.

வன்முறை மற்றும் துப்பாக்கிச்சூடு சம்பவங்களில் 2 பொலிஸ்காரர்கள் உட்பட 58 பேர் பலியாகி உள்ளனர். பாதுகாப்பு படையினர் உட்பட 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து உள்ளனர்.

தலைநகர் ஸ்ரீநகர் உள்ளிட்ட பல்வேறு முக்கிய மாவட்டங்களில் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ளது. இருந்த போதிலும் பல்வேறு இடங்களில் தொடர்ந்து பாதுகாப்புபடையினருக்கும் போராட்டகாரர்களுக்கும் இடையே மோதல்கள் நடந்து வருகின்றன.

நேற்று முன்தினம் அனநதநாக் மற்றும் நட்டிப்போரா ஆகிய இடங்களில் நடந்த வன்முறை சம்பவங்களில் 50இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

சுமார் ஒரு மாத காலமாக நீடித்து வரும் வன்முறை சம்பவங்களால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருப்பதால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டு உள்ளது. இதனால் மக்கள் வீடுகளுக்குள் முடங்கி கிடக்கின்றனர்.

கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் மூடப்பட்டு உள்ளன. வாகனங்கள் ஏதும் இன்றி சாலைகள் வெறிச்சோடி காணப்படுகின்றன. அரசு அலுவலகங்கள் மற்றும் வங்கி பணிகள் முடங்கி உள்ளன. பள்ளி மற்றும் கல்லூரி உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டு உள்ளன.

குறிப்பிட்ட சில பகுதிகளில் எந்த பிரச்சினையும் இல்லாத போதிலும், பாதுகாப்பு படையினர் தங்களை வீடுகளை வீட்டு வெளியே வருவதற்கு அனுமதிப்பதில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மேலும் பல பகுதிகளில் பால் வியாபாரி, காய்கறி வியாபாரி உள்ளிட்டவர்களை ராணுவத்தினர் அனுமதிப்பதில்லை. இதனால் அத்தியாவசிய பொருள்கள் கூட கிடைக்காமல் மக்கள் கடும் அவதிக்குள்ளாகி உள்ளனர்.

சட்டம்-ஒழுங்கை காக்கவும் அசம்பாவிதங்களை தவிர்க்கவும் நூற்றுக்கணக்கான பாதுகாப்புபடை வீரர்கள் குவிக்கப்பட்டு உள்ளனர். அவர்கள் குண்டு துளைக்காத கவசங்களுடன் துப்பாக்கியை ஏந்தியபடி ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ நமது பிரார்த்தனையில் இறைவனை நம் அனைவருக்கும் தந்தையாக ஒப்புக்கொண்டு நமது தினசரி வாழ்க்கையில் ஒவ்வொரு மனி தனையும் நமது சகோதரனாக நடத்தாமல் போனால் அதனால் என்ன நன்மை விளையும்?

❖ ஓர் அடிமையின் நெற்றியில் இயற்கை எப்போதும் இடும் குறியாகிய பொறாமை எனும் மாசைத் துடைத்து விடுவோமாக. ஒருவரிடமும் பொறாமை கொள்ளாதே. நன்மை செய்பவன் ஒவ்வொருவனுக்கும் கைகொடுக்கத் தயாராக இரு. மூவுலகிலும் உள்ள ஒவ்வோர் உயிருக்கும் ஒரு நல்ல எண்ணத்தை அனுப்பு.

❖ கடலைப்பார் அலையைப் பாராதே. எறும்பிற்கும் தேவ தூதனுக்கும் எந்தவித வேற்றுமையையும் பாராதே. ஒவ் வொரு புழுவும் இறைவனின் குழந்தைகளே. ஒருவன் உயர்ந்தவன், மற்றொருவன் தாழ்ந்தவன் என்று எப்படிச் சொல்வது? ஒவ்வொருவனும் தனது நிலையில் தான் பெரியவனே.(அலைகள்-உயிர்கள், கடல் அடிப்படையான பிரம்மம்)

# புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா வி.கழக மின்னொளியிலான உதைபந்தாட்ட போட்டி

## செண்.அன்ரனிஸ் சம்பியன்







புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் வருடந்தோறும் நடத்துகின்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்றுமுன்தினம் மின்னொளியில் இரவு நடைபெற்று முடிந்த இறுதிப்போட்டியில் கிளி. உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் செண்.அன்ரனிஸ் வி.க. மோதிக்கொண்டது. இதில் இரு அணிகளும் தலா ஒரு கோல்களை பெற்று ஆட்டம சமநிலையில் முடிய சமநிலை தவிர்ப்பு உதை மூலம் மன்னார் செண்.அன்ரனிஸ் வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கியது.

இதற்கு முன்னர் நடைபெற்று முடிந்த சிநேகித பூர்வ உதைபந்தாட்ட போட்டியில் 3:1 என்ற கோல்கணக்கில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வைத்திய கலாநிதிசிவமோகன்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விணோநோதராதலிங்கம் உள்ளிட்ட விருந்தினர்கள் பலர்கலந்து கொண்டுள்ளனர். (சு-28)



## நெடியகாடு விளையாட்டுக்கழக மாவட்ட ரீதியிலான கிரிக்கெட் வல்வை அணி வெற்றி

நெடியகாடு விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் யாழ்.மாவட்ட கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் ஆட்டத்தில் முதலாவது போட்டியில் வல்வை விளையாட்டுக்கழகம் கொக்குவில் AB விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மோதியது.

முதலில் துடுப்பெடுத் தாடிய கொக்குவில் AB விளையாட்டுக்கழகம் 12ஓவர்கள் முடிவில் 63 ஓட்டங்களை பெற்றது.வல்வை விளையாட்டுக்கழகம் சார்பாக றொசான் 3விக்கெட்டுகளையும் பிரணவன் ருதேஸா தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

64 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய வல்வைஅணி 9.2 ஓவர் நிறைவில் 4இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களை பெற்றுக்கொண்டு 6 விக்கெட்டுக்களால் வல்வை அணி வெற்றி பெற்றது.துடுப்பாட்டத்தில் பிரசாந் 26 ஓட்டங்களையும் கபிலன் 19ஓட்டங்களும் பிரணவன் 14ஓட்டங்களும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியில் வல்வை விளையாட்டுக்கழகம் 6 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்று இரண்டாவது சுற்று ஆட்டத்துக்கு தகுதி பெற்றது. (க)

## எவறெஸ்ட் வி.கழக உதைபந்தாட்ட போட்டி

எவறெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் சுப்பர் 08 போட்டிகள் கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில் 03. 08. 2016 (புதன்) நடைபெற்ற முதலாவதுபோட்டியில்திருக்குமரன் வி.கழகத்தை 0:3என்ற ரீதியில் பாடும்மீன் வி.கழகமும் அடுத்தபோட்டியில் உருத்திரபுரம் வி.கழகத்தை 2:1என்ற ரீதியில் மன்னார் கில்லறி வி.கழகமும் வெற்றிபெற்று அரையிறுதி வாய்ப்பினை தக்க வைத்துள்ளன. (க)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான மாபெரும் உதைபந்தாட்ட போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு நடைபெறும் போட்டியில் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30மணிக்கு நடைபெறும் போட்டியில் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடற்கல்வி ஐக்கியம் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

# ஊரெழு றோயல் சம்பியன்

அரியாலை ஐக்கியம் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி ஊரெழு றோயல் அணி சம்பியன் பட்டத்தை தனதாக்கிக்கொண்டது.

அரியாலைஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய 40 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கான அணிக்கு ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி அரியாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.



இதன் இறுதிப் போட்டியில் பனால்டி உதையின் மூலம் 5:3 என்ற விகிதத்தில் வெள்ளை தலைமையிலான றோயல் அணி வெற்றிபெற்று சம்பியனாகியது. (க)

# கொக்குவில் பிரம்படியை வீழ்த்தியது சங்கானை கிங்ஸ்ரார் வி.கழகம்

பண்டத்தரிப்பு றெட் லயன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல்போட்டியில் சங்கானை கிங்ஸ்ரார் கழகத்தை எதிர்த்து கொக்குவில் பிரம்படி விளையாட்டுக்கழகம் மோதியது.

முதலில் துடுப்பாட்டத்தை மேற்கொண்ட பிரம்படி விளையாட்டுக்கழகம் 8 பந்து பரிமாற்றம் நிறைவில் சகல இலக்கையும் இழந்து 86 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் அஜன் 36, செல்ரன் 18, லசாசன் 20 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் நிசன், திலக்ஷன் தலா 3விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு கடின இலக்கை நோக்கி துடுப்பாட்டத்தை மேற்கொண்ட சங்கானை கிங்ஸ்ரார் 5.4 பந்து பரிமாற்றங்களில் 4 விக்கெட்டையிழந்து வெற்றியிலக்கை அடைந்தன. துடுப்பாட்டத்தில் சூரி 54 ஓட்டத்தினையும் திலக்ஷன் 22ஓட்டங்களையும் பெற்றனர். (கு)





தென்மராட்சி அபிவிருத்திச்சங்கத்தினால் நடத்தப்பட்ட தென்மராட்சி விழாவின்மென்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் சங்கத்தானை ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்துடன் நடைபெற்ற இறுதிப்போட்டியில் வளர்மதி விளையாட்டுக்கழக அணியினர் வெற்றி பெற்று வெற்றிக்கிண்ணத்தை தமதாக்கிக்கொண்டனர். அவ் அணியினரை படங்களில் காணலாம்.

## வடக்கு - கிழக்கை...

தமிழ் மக்கள் பேரவையினால் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்த சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றி 24 மணி நேரத்திற்குள் கிழக்கு முஸ்லிம் சிவில் அமைப்புகளின் சம்மேளனம் இந்த பிரகடனத்தை தீர்மானமாக நிறைவேற்றியுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த முஸ்லிம் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் கல்முனையில் ஒன்றுகூடி தங்களின் இந்தப் பிரகடனத்தை உள்நாட்டு மற்றும் சர்வதேச சமூகங்களிடம் முன்வைக்க முடிவு செய்துள்ளனர்.

ஒற்றையாட்சி முறையிலான அதிகாரப் பகிர்வு,தற்போதுள்ள ஜனாதிபதி முறை ஆகியனவும் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக அந்த பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**வடக்கு - கிழக்கு இணைப்பு வேண்டாம**

வடக்கு - கிழக்கு இணைப்பை முஸ்லிம்கள் ஒரு போதும் விரும்பவில்லை. அந்த இணைப்பு முஸ்லிம்களை சிறுபான்மை இனமாக்கும். இன ரீதியான அநீதிக்குள்ளாக்கும்.

முஸ்லிம்கள் தனித்துவமான ஒரு தேசிய இனம். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தனித்துவமான அடையாளத்தை கொண்டுள்ளனர். மட்டுமன்றி சுய நிர்ணய உரித்துடையவர்களாகவும் இருப்பதால் அவர்களை ஒரு தேசிய இனமாக உறுதிப்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாதது என்று இந்த பிரகடனம் கூறப்பட்டுள்ளது.

**சமஷ்டி முஸ்லிம்களுக்கு பாதகமானது**

முஸ்லிம்களுக்கு கடந்த காலங்களில் ஏற்பட்ட உயிர், உடைமைகளின் இழப்புக்களின் அடிப்படையில் ஒற்றையாட்சியே அவர்கள் விரும்புகின்றார்கள். சமஷ்டியை தங்களுக்கு பாதகமாகவே கருகின்றார்கள் என அதிகாரப் பரவலாக்க முறை தொடர்பாக அந்த பிரகடனம் குறிப்பிடுகின்றது.

**ஜனாதிபதி முறைமை தொடர வேண்டும**

தற்போதைய ஜனாதிபதி முறைமை தொடர்ந்தும் இருக்க வேண்டும் என தனது பிரகடனத்தில் வலியுறுத்தியுள்ள கிழக்கு முஸ்லிம் சிவில் அமைப்புகளின் சம்மேளனம், -தமிழ் - முஸ்லிம் விவகாரங்களை கையாளக் கூடிய அதிகாரம் கொண்ட இரு துணை ஜனாதிபதிகள் இடம்பெறுவதை அரசியல் யாப்பு உறுதி செய்ய வேண்டும் என்ற யோசனையையும் முன் வைத்துள்ளது.(செ-11)

## அரசியல் கைதி...

போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர்மேலும்தெரிவிக்கையில்,

தமிழர்கள் என்ற ஒரே ஒரு காரணத்துக்காகவும் பழிவாங்க வேண்டும் என்ற இன வெறியோடு மைத்திரி, ரணில் கூட்டரசாங்கம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

இந்த அரசுக்கு துரதிர்ஷ்டவசமாக தமிழ் மக்களால் தலைவர்களாக தெரிவுசெய்யப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பினர் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராஜா போன்றவர்கள் தமிழ் அரசியல் கைதிகளை சிறையில் சீரழிப்பதற்கும் சித்திரவதைப்படுவதற்கும் கைதிகளின் குடும்பங்கள் நிர்க்கதி அடைவதற்கும் முழுமையாக துணைபோகின்றார்கள்.

பல காலங்களாக சிறையில் வாடும் கைதிகளுக்கு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்பயையில் வழக்குகள் தொடரப்படுகிறது. அதை பரிசீலித்த நீதிபதிகள் இந்த குற்ற ஒப்பதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்குகள் தொடர முடியாது என கூறிய போது அரச தரப்பு சட்டத்தரணிகள் புதிய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ய முயற்சி செய்கிறார்கள்.

அல்லது வழக்குகளை கொழும்புக்கு மாற்ற நினைக்கிறார்கள் இது அப்பாவி இளைஞர்கள் மீது ஏதோ ஒரு வகையில் குற்றத்தை சுமத்தி அவர்களை தண்டித்து அழிக்கும் நோக்கத்துடன்தான் இந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த செயற்பாட்டுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு முழுமையாக துணைபோகின்றது. கடந்த சில மாதங்களுகது முன்னர் அரசியல கைதிகள் உண்ணாவிரதம் இருந்தபோது சம்பந்தன் அவர்களிடம் என்னை நம்புங்கள் ஜனாதிபதியை நான் நம்புகிறேன் நீங்கள் விடுதலை செய்யப்படுவீர்கள் என கூறினார். ஆனால் இதுவரை அவர்கள் விடுதலை செய்யப்படவும் இல்லை அவர்களுக்கு மருத்துவ பரிசோதனை கூட செய்து கொடுக்கப்படவில்லை.

உணவுகள் கொடுப்பதற்கோ உறவினர்கள பார்வையிடுவதற்கோ வசதிகள் செய்து கொடுககப்படவில்லை மிருகங்களை விட கேவலமாக கைதிகளின் வாழ்க்கை உள்ளது.

பயங்கரவாத தடுப்புச்சட்டம் நீக்கப்பட்டதும் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என சம்பந்தன் தற்போது ஏமாற்று நாடகம் ஒன்றை மீண்டும் அரங்கேற்ற தொடங்கியுள்ளார். ஆனால் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டாலும் கைதிகள் விடுதலை செய்யப்படமாட்டார்கள் என கூறியுள்ளார். அந்த வகையில் பயங்கரவாத தடைச் சட்டத்தில்திருத்தம் தான்கொண்டுவரப்படவுள்ளது.

எனவே தமிழர்கள் என்ற காரணத்துக்காக தமிழ் அரசியல் கைதிகள் தொடர்சியாக பழிவாங்கப்படபோகிறார்கள். ஆகவே அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் இல்லையெனில் மக்களை ஒன்றுதிரட்டி தொடர்ச்சியான போராட்டங்கள் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# முன்னாள் போராளிகளின் விபரங்களை திரட்டுங்கள்

## உறுப்பினர்களுக்கு முதலமைச்சர் பணிப்பு

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் அனைவரினதும் விபரங்களை உடனடியாக பட்டியலிட்டு தருமாறு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வடமாகாணசபை உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடுகையில்,

சில நாட்களாக தமிழர் பகுதிகளில் நடைபெற்றுவரும் நல்லிணக்க கருத்தறியும் செயலமர்வுகளில் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் சிலர் தங்கள் மேல் வேண்டுமென்றே திட்டமிட்டு நஞ்சு ஊசிகளை ஏற்றியதான தகவல்களையும் அன்றாட உணவில் இரசாயனம் கலந்து பரிமாறியதான தகவலையும் வெளியிட்டு வருகின்றனர்.

இந்த தகவல் உண்மையென கண்டறியப்பட்டால் இலங்கை அரசின் முகத்திரை சர்வதேசத்தின் முன்னாலும் உலகளாவிய தமிழ் சமூகத்தின் முன்னாலும் கிழிக்கப்படும். இச்செயலமர்வுகளில் சாட்சியமளித்த எல்லோருடைய ஏகோபித்த கருத்தும் அரசின் மேல் நம்பிக்கையின்மையே வெளிப்படுத்துகின்றன.

எனவே முன்னாள் போராளிகளுக்கு இழைக்கப்பட்டதாக கூறப்படும் இந்த இன அழிப்பு திட்டத்தினை அம்பலப்படுத்துவதற்கு அனைத்து பகுதிகளிலும் பொதுவாகவும் புனர்வாழ்வளிக்கப்பட்டும் இறந்த அல்லது விடுவிக்கப்பட்ட பின்னர் நோய்வாய்ப்பட்டிருக்கும் அல்லது வாழ்ந்து வரும் முன்னாள் போராளிகளை உடனடியாக தேடியறிந்து பட்டியலிட்டு தருமாறு கேட்டுக்கொள்கிறேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

# மீனவர் பிரச்சினையை ஆராய கடற்தொழிலாளர் மாநாடு

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை உட்பட கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை கடற்றொழிலாளர் மாநாடு ஒன்றை நடத்தவுள்ளதாக தெரிவித்துள்ள யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனம், இந்திய-இலங்கை மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் பேசுவதற்கு இந்தியா செல்லும் குழுவில் யாழ்.மாவட்டத்தை சேர்ந்த மீனவர்களும் இடம்பெற வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

நேற்றைய தினம் சம்மேளனத்தின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது சம்மேளன தலைவர் வே.தவச்செல்வன் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். யாழ்.மாவட்டத்தை சேர்ந்த மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளை தினம் தினம் எதிர்நோக்கி வருகின்றனர்.

முக்கியமாக இந்திய மீனவர்களின் அத்துமீறலினால் யாழ்.மாவட்ட மீனவர்கள் அதிகம் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக எமது கடல் வளத்தை இந்திய மீனவர்கள் சூறையாடி செல்வதனால் எமது மீனவர்கள் தொழில் செய்ய முடியாத நிலை உள்ளது. இவற்றோடு எமது மீனவர்களது வலைகளையும் இந்திய மீனவர்கள் அறுத்து செல்வதனால்,

அவர்களது குடும்பங்களும் வறுமை நிலையை எதிர்நோக்கி வருகின்றன. இவ்வாறான நிலையில் எமது மீனவர்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு எதிர்வரும் 15ஆம் திகதி மாநாடு ஒன்றை எமது சம்மேளனத்தில் ஏற்பாடு செய்துள்ளோம். இந்த மாநாட்டில் மீனவர்கள் கலந்து கொண்டு தமது பிரச்சினைகளை முன்வைக்க முடியும்.

இவை தவிர இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பிற்குள் அத்துமீறுவது தொடர்பில் இந்தியாவிற்கு இலங்கையிலிருந்து மீனவர்கள் குழு ஒன்று பேச்சுவார்த்தைக்கு செல்லவுள்ளது. இந்த குழுவில் யாழ்.மாவட்டத்தை சேர்ந்த மீனவர் பிரதிநிதிகளும் உள்வாங்கப்படல் வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியிருந்தார். இந்த ஊடக சந்திப்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் உடனிருந்தார். (செ-4)

### சிறுமி மீது துஷ்பிரயோகம்

# சந்தேக நபரை துரத்திச் சென்று கைது செய்த நெல்லியடிப் பொலிஸ்

(கரணவாய்)

பளைப் பகுதியில் சிறுமி ஒருவர் மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டதாக கூறப்படும் நபர் ஒருவரை யாக்கருச் சந்திப்பகுதியில் வைத்து துரத்திச் சென்ற நெல்லியடிப் பொலிஸார் பலத்த தள்ளுமுள்ளுகையின் பின்னர் கைது செய்துள்ளனர்.

நேற்றுத் திங்கட்கிழமை மாலை யாக்கருச் சந்திப்பகுதியில் இடம்பெற்ற விபத்துத் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக நெல்லியடிப் பொலிஸார் சென்றுள்ளனர்.

அப்போது தலைமறைவான நிலையில் இருந்த மேற்படி 25 வயதுடைய நபரை அடையாளம் கண்டு கொண்ட நெல்லியடிப் பொலிஸார் அவரை பிடிக்க முற்பட்டபோது அவர் வயல் வெளியூடாக ஓடித்தப்ப முற்பட்டார்.

ஓடியவரை துரத்திச் சென்ற பொலிஸார் வயல்வெளிகளில் கட்டிப்பிடித்து உருண்டு புரண்டு அவரைக் கைது செய்தனர்.

சினிமாப் பாணியில் கட்டிப்புரண்டு பொலிஸார் கைது செய்ததை வீதியால் சென்ற பொது மக்கள் பலரும் கண்ணுற்றிருந்தனர்.

மேற்படி நபருக்கு பருத்தித்துறை, மல்லாகம் நீதிமன்றங்களில் வழக்குகள் உள்ளன. இவர் துன்னாலைப் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பளைப் பகுதியில் வசிப்பவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

# முச்சக்கரவண்டி - ஹயஸ் விபத்து;

## இருவர் படுகாயம்





(கரணவாய்)

துன்னாலை யாக்கரு சந்தியில் முச்சக்கர வண்டியொன்றும் ஹயஸ் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுத் திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் துன்னாலை தெற்கைச் சேர்ந்த யோகச்சந்திரன் பிரதீபன் (வயது-26), பொற்பதி குடத்தனையைச் சேர்ந்த சிறிவிமல் தர்சன் (வயது-17) ஆகிய இருவர் படுகாயமடைந்தனர்.

முள்ளிப்பக்கமாக இருந்து வந்து யாக்கருச் சந்தியூடாக கலிகைச் சந்திப் பக்கம் திரும்ப முற்பட்ட முச்சக்கரவண்டியும் அதே பாதையூடாக வந்து நேரே செல்ல முற்பட்ட ஹயஸும் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான முச்சக்கரவண்டி முற்றாக சேதமடைந்து புரண்டு காணப்பட்டது

ஹயஸ் வாகனம் அருகில் உள்ள கிணறு ஒன்றுக்குள் முன்சக்கரங்கள் இறங்கிய நிலையில் ஆபத்தான நிலையில் இருந்தது.

இவ்விபத்துத் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-60)

## சுன்னாகம் பொலிஸ் நிலைய...

ளப்பட்ட போது, குறித்த சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பப்பட்டுள்ளதாக நீதவானிடம் பொலிஸார் கூறியிருந்தனர்.

இதனையடுத்தே கடும் தொனியில் பொலிஸாரை எச்சரிக்கை செய்த நீதவான் எதிர்வரும் இருபத்தி நான்காம் திகதிக்கு முன்னர் குறித்த கொலையில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார். திருட்டுக் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு ஒன்று, மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி ஏ.யூட்சன் முன்னிலையில, கடந்த மாதம் 25ஆம் திகதி அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது, இந்த வழக்கின் சந்தேக நபர்களான 4 பேர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

அவர்கள் குறித்த கொலை சம்பவத்தை வெளிப்படுத்தி இருந்ததோடு, தமது வாககு மூலத்தில், வறிய நிலையிலுள்ள மாணவர்களுக்கு, 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி புத்தகப்பைகளை அன்பளிப்புச் செய்தோம்.

அவ்வேளை அங்கு வந்த சுன்னாகம் பொலிஸார், 'மாவீரர் தினத்தை முன்னிட்டு இதனை வழங்குகின்றீர்களா?' எனக் கேட்டனர். அதற்கு நாம்'இல்லை, வறிய மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்காக உதவுகின்றோம்' என்றோம். அதன் பின்னர் பொலிஸார் அங்கிருந்து சென்றனர்.

தொடர்ந்து, அன்றைய தினம் இரவு எங்கள் ஐந்து பேரை சுன்னாகம் பொலிஸார் கைது செய்தனர். ஏன் எங்களைக் கைது செய்தீர்கள்? எனக் கேட்டபோது, திருட்டுக்குற்றச்சாட்டு என்று கூறினர்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தினுள் சித்திரவதை செய்வதற்கென பிரத்தியேக அறை ஒன்று உள்ளது. அந்த அறைக்குள் எம்மை அழைத்து சென்றனர். அங்கு ஊரெழு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவப் புலனாய்வுத் துறையினர், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த மூன்று தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர், எம்மீது சித்திரவதைகளைப் புரியத் தொடங்கினர்.

எம்மீது மின்சாரத்தை பாய்ச்சினார்கள். கால் பாதங்களில் ஆணிகளை அடித்தார்கள். கைப் பெருவிரலில் குழாய் ஒன்றினை நுழைத்து, அந்த குழாயை மேலே தூக்கிக் கட்டினார்கள். அதன்போது எமது முழு உடல் பாரமும் விரலிலேயே தூங்கியது. மேசைக்கு குறுக்கே கை, கால்களை இழுத்துக் கட்டி தாக்கினார்கள். இவ்வாறு மிக மோசமான சித்திரவதைகளை சுன்னாகம் பொலிஸார், எம்மீது மேற்கொண்டனர். இதன் போது எமது நண்பனான சுமன் என்பவரை இரண்டு மேசைகளுக்கு இடையில் கட்டி வைத்து 'உனக்குத் தனி நாடு வேணுமா' என கேட்டுத் தாக்கினார்கள்.

பொலிஸாரின் மூர்க்கத்தனமான தாக்குதலால் நண்பனின் வாய் மற்றும் மூக்கில் இரத்தம் கொட்டி நண்பன் உயிரிழந்துவிட்டான். அதனை அடுத்து எம்மை அந்த அறையில் இருந்து பொலிஸார் அப்புறப்படுத்திவிட்டனர்.

பின்னர், உயிரிழந்த எமது நண்பனின் உடலை கிளிநொச்சி, இரணைமடு குளத்தினுள் வீசியுள்ளனர். பின்னர் நண்பன் குளத்தில் வீழ்ந்து தற்கொலை செய்துகொண்டதாக மரணச்சான்றிதழ் கொடுத்து, பொலிஸார் அதனைத் தற்கொலையாக மாற்றிவிட்டனர்" என தமது வாக்கு மூலத்தில் கூறியிருந்தனர்.

இதனையடுத்து நண்பரைக் கொலை செய்ததாகவும், அவர்கள் மீது சித்திரவதை புரிந்ததாக சாட்சியங்கள் குறிப்பிட்டுள்ள பொலிஸார் அனைவரையும் உடனடியாக கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு நீதவான் ஏ.யூட்சன் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்றையதினம் குறித்த வழக்கின் போது குறித்த சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறுவதற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதனால் சந்தேக நபர்கள் இன்னமும் கைது செய்யப்படவில்லை என பொலிசார் மன்றில் கூறினர்.

இதன்போது கடும்கோபமடைந்த மேலதிக நீதவான் எதிர்வரும் 24 ஆம் திகதிக்குள் அனைவரையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப் படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார். (செ-4)


ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0767070069

(5551) M.Suren

நீங்கள் இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றுபவரா?

5 நட்சத்திர ஹொட்டேல்களில் கவர்ச்சிகரமான சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய

O/L உடன் Business & Hotel Management UK Certified

CERTIFICATE ➡ DIPLOMA ➡ DEGREE

With FREE English Course

3 மாத கால தொழில்துறைப் பயிற்சி

(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.

புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch

அனுமதிகளுக்கு: 077 3616 798

(C-5402)

SIKARAM ACADEMY Business - Hospitality - English SCHOOL of HOSPITALITY

www.sikaram.lk

Sikaram Academy

021 222 0011

275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

பிரெஞ்சு மொழி உடன் பதிவு செய்யுங்கள்.

FRENCH ஆரம்பம் :- 28.08.2016

021 222 8093

61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(5553)


## பிரபாகரனை விட மகிந்த...

எதிர்கட்சியினால் முன்வைக்கப்படும் விமர்சனம் தொடர்பில் அவர் கருத்துத் தெரிவித்தார்.

எனது ஆரம்பம் மகிந்த ராஜபக்ஷவினால் உருவாகவில்லை. 35 வருடங்கள் நான் அவரின் ஆசீர்வாதத்துடன் இராணுவத்தில் செயற்படவில்லை.

இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி நான் அங்கு சேவையாற்றினேன். அவர் தவறிழைக்கும் போது அவருக்கு எதிராக பேச எனக்கு முதுகெலும்பு இருந்தது.

மறுபுறம் பிரபாகரன் என்பவர் ஓர் பயங்கரவாத தலைவர். அவருடைய அரசியல் கொள்கையின் படி அவர் நாட்டை பிளவுபடுத்த முயற்சி செய்தார். எனினும் அவருக்கு எதிராக போராடிய இராணுவத்தின் குடும்பத்தை தாக்கும் வகையில் செயற்படவில்லை.

எனினும் நான் ஜனநாயக ரீதியில் தேர்தலில் போட்டியிட்டமையினால் மகிந்த ராஜபக்ஷ பொய்குற்றச்சாட்டுக்களை முன்வைத்து என்னைத் தாக்கி சிறையில் அடைத்தார்.

அதுமட்டுமன்றி எனது பிள்ளைகளிடம் பழிவாங்கினார். எனவே அவ்வாறு செயற்பட்டவர் உறுதியாக பிரபாகரனைவிட மோசமானவர் என்பதனை நான் எந்த இடத்திலும் கூறுவேன் என சரத் பொன்சேகா தெரிவித்தார். (செ-11)

## பசில் ராஜபக்ஷவுக்கு...

சொந்தமான சுமார் 36 மில்லியன் ரூபாயிற்கும் மேற்பட்ட நிதியை அரசியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டு பொலிஸாரால் பசில் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டார்.

அவரது பிணை மனு நேற்று அழைக்கப்பட்ட போது கருத்துக்களை தெரிவித்த அரசு தரப்பு வழக்கறிஞர், பசில் ராஜபக்ஷவின் பிணை வேண்டுகோள் சம்பந்தமாக ஆட்சேபனைகள் சமர்ப்பிக்கப்பட மாட்டாது என்று தெரிவித்தார்.

அதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி, தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை பிணையின் கீழ் விடுதலை செய்யுமாறு உத்தரவு பிறப்பித்தார். (செ-11)

## சர்வதேச கடிவாளம்...

முன்னர் நாம் சகல பிரச்சினைகளையும் முடிவுக்கு கொண்டு வந்துவிடுவோம் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கம் தீர்வு தொடர்பில் சிந்தித்து அதற்கமைய நகர்ந்து கொண்டுள்ள நிலையில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆக்ரோசமான கருத்துக்களை முன்வைப்பது மிகவும் பாரதூரமான விடயமாகும்.

எவ்வாறு இருப்பினும் தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் போதும் புதிய நகர்வுகளை கையாளும் போதும் தேசிய பாதுகாப்பிற்கு அமையவே தீர்வுகள் சாத்தியமாகும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (செ-11)

## கல்வி...

மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர கூறியுள்ளார்.

ஏழு கோரிக்கைகளை முன்னிருத்தி பல்கலைக்கழக கல்விசாரா ஊழியரகள் கடந்த 27-ம் திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)


அன்னை முத்துமாரி பஸ்சேவை

கொழும்பு ⇄ யாழ்ப்பாணம் ⇄ பருத்தித்துறை

12th திகதி முதல் பகல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

Annai Muthumari

BUS BOOKING

COURIER SERVICES

SCHOOTER BOATING

Web www.annaimuthumari.com www.valvaitourism.com Phone +94 21 226 1977 +94 77 544 7359

நான்கு புதிய A/C பஸ்களுடன்

இரு வழிச் சேவையை இரவு, பகல் என விஸ்தரித்துள்ளது

| | |
|---|---|
| Colombo | +94 77 544 9251 |
| Jaffna | +94 77 544 8503 |
| Nelliyadi | +94 77 285 0285 |
| Pointpedro | +94 77 555 2973 |
| Valvettithurai | +94 21 226 1977 |
| | +94 77 544 7359 |

| | காலை | இரவு |
|---|---|---|
| பருத்தித்துறை | 7.00 am | 7.00 pm |
| யாழ்ப்பாணம் | 8.00 am | 8.00 pm |
| வெள்ளவத்தை | 7.30 am | 7.30 pm |
| கொட்டஹேனா | 8.30 am | 8.30 pm |

(5552)

Bus booking || Courier || Boating

B.A 1st YEAR (G.A.Q) 2016

பேராதனை பல்கலைக்கழகம்

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் கலைமாணி 1ஆம் ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளது.
- A/L-ல் கலை,வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.
- A/L 2014,2015ஆம் ஆண்டு பரீட்சை எடுத்த மாணவர்களும் இதற்கு முன்னர் பரீட்சை எடுத்த மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும்.
- பதிவுகள் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- புதிய பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.

குறிப்பு :- விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்

விபரங்கட்கு : S.அருள்நங்கை (நிர்வாகி)

தொலைபேசி இல : 021 222 8148, 021 568 9477, 077 314 4762, 077 846 9721

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர் கவனத்திற்கு :-

குறைந்த கட்டணத்தில் திருப்திகரமான சேவை.

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

உள்நாட்டு வெளிநாட்டு பொதிகள் சேவைகளில் கடல் மற்றும் ஆகாய மார்க்கமான விரைவு பொதிகள் சேவையினை 25 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் முன்னணி நிறுவனத்தின் இணை நிறுவனம்.

அனுபவம் - விரைவு - நம்பிக்கை - பாதுகாப்பு.

Express: 11kg மேல் அனுப்பப்படும் அனைத்து பொதிகளுக்கும் விசேட விலைக் குறைப்பு:-

UK 575/= , France 675/= , Germany 650/= , Italy – 750/= , Swiss 750/= , Canada 950/= ,

✱ UK,Canada, India போன்ற நாடுகளுக்கான Online Visa Application உட்பட சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து பெற்றுக் கொள்ளலாம்.

✱ அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச் சீட்டுக்கள்

Direct Agent : Kannathasan Global Cargo & Courier and Travels

பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

Hotline: 076 972 1458

(C-5400)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.